
இந்துமதி எழுதும்

மண்ணுக்குத் தெரியுமோ வானம்?

தொடர் கதை ஆரம்பம்



கல்கி

KALKI 12-9-82 ரூ. 1.20


அர்விந்த்
வழங்கும் அற்புத
நெசவு நய
பருத்திகள்
டெக்ஸ்டைல்களிலே
ஐம்பது ஆண்டின்
அதி உன்னதம்.

துணுக்குகளுக்குத் தோரணம் கட்டிய நட்சத்திரங்கள்




இந்த இதழில் வெளியாகியிருக்கும் வாசகர்களின் தகவல் துணுக்குகளை இவர்கள் தங்கள் கைப்பட எழுதிக்கொடுத்து உதவியுள்ளார்கள். யார் எழுதிய துணுக்கை எந்த நட்சத்திரம் எழுதி இருக்கக் கூடும்? உங்கள் ஊகம் சரிதானா என்பதை 62ம் பக்கத்தைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.



கணவன்: பாயசம் ரெடியானதும் ஏன் ஒரு தரம் இரண்டு தரம் மூணு தரம்னு கத்தறே?''
மனைவி: புக்லே போட்டிருக்கு இறக்கறதுக்கு முன்னாடி, ஏலம் போடவும்னு!

—எஸ். கல்யாணராமன்



''நான் செத்துட்டா கூடவே என் மனைவியும் செத்துப் போயிடுவேன்கிறாள்!''

''பொம்பளைங்களே அப்படித்தான். செத்துட்டாக்கூடப் பழி வாங்காம விட மாட்டாங்க!''


அ. தெ.

''ஔவையைப் பற்றி இங்கிலீஷிலே பாட்டு இருக்கு. தெரியுமா?''

''என்ன பாட்டு?''

''ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார் 'ஔவை' வொண்டர் வாட் யூ ஆர்?''

—ப்ரியா பாலு



''கார் விக்கணும். விளம்பரம் செய்ய என்ன செலவாகும்?''

''2 செ.மீ.க்கு ஐம்பது ரூபாய்.''

''அப்படீன்னா வேண்டாம். என் கார் 3 மீட்டர் நீளமாச்சே. எக்கச்சக்கம் செலவாகிவிடும்.''


—விஜயலக்ஷ்மி





ரசிகமணியின் சமய நோக்கு

ரா. கணேஷ்




"அன்பே சிவம்" என்றார்கள் பெரியவர்கள். அந்த அன்பு குறையும் காலம் இது. "ஒன்றாகக் காண்பதே காட்சி" என்றார்கள் பெரியவர்கள். அந்த ஒற்றுமை குன்றும் காலம் இது. "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றார்கள் பெரியவர்கள். 'என் கடவுள் உயர்வு; உன் கடவுள் தாழ்வு" எனும் சமயப் பூசல் மலிந்துவிட்ட சமயம் இது.

ஒளி நிறைந்த பெரும் அரங்கம். அதில் அமர்ந்து உலகக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருக்கிறோம். திடீரென்று ஒளி குன்றி விடுகிறது. இருள் கவ்வி விடுகிறது. மனம் மரத்து விடுகிறது. இதயம் ஏங்கிவிடுகிறது. உணர்வுகள் உருகுகின்றன. உடனே உதயமாகிறது ஒப்பற்ற ஒரு மணி. சாதாரண மணியா? கண்ணுக்குக் குளுமையான கற்பக மணி. வாழ்வில் ரசனை ஊட்டும் ரசிகமணி.

இயற்கையில் இருக்கிறது கவர்ச்சி. அந்தக் கவர்ச்சிக்கு இலக்கியம் படைத்தார் ரசிகமணி டி.கே.சி. யார் அவர்? அடிமைப்பட்ட நாட்டுக்கு விடுதலை கொடுத்தார் அண்ணல் காந்தியடிகள். அடிமைப்பட்ட தமிழுக்கு விடுதலை கொடுத்தார் அறிஞர்

ரசிகமணியின் நூற்றாண்டு கட்டுரைப் போட்டி



ரூ 1000/= முதல் பரிசுக் கட்டுரை

டி.கே.சி. அவர் கம்பரின் காவலர், சக்கரவர்த்தித் திருமகன் ராஜாஜியின் இலக்கியச் சகா. கல்கியின் காதலர். வட்டத் தொட்டி கண்ட வள்ளல்.

''என்னருமை நண்பா! இனிய கலை ரசிகா! தென்னர் தமிழ் வளர்க்கும் தேசிகா!'' என்று கவிமணியால் வாழ்த்தப்பெற்ற தவமணி.

''உள்ளம் கவர் கள்வனை'' இறைவனை இயற்கை வழியாக நமக்கு அறிமுகம் செய்கிறார் ரசிகமணி. இதுதான் அவரது சமய நோக்கு. அவனைக் காண்பதுதான் நமது நோக்கம்.

தாமரை மலரும் தமிழ் மணியும்:

ஊரில் பெரிய தடாகம். அதன் ஓரமாக நடந்து போகிறார் ரசிகமணி. தடாகம் முழுவதும் இருள் மயமான நீர் சூழ்ந்திருக்கிறது. திடீரென்று நின்று விடுகிறார். தடாகத்தின் நடுவே தாமரை ஒன்றைப் பார்க்கிறார். பெரிய பெரிய இதழ்கள். 'வெள்ளை வெளேரென்று' பூத்திருக்கிறது. தாமரையை மட்டுமா பார்க்கிறார் ரசிகமணி? அதில் இருக்கும் இறைத் தத்துவத்தையும் பார்க்கிறார். பரவசமாகி விடுகிறார்.

''ஆயிரம் தாமரைபோலும் ஆயிரஞ் சேவடி யானும்'' என்ற அப்பர் தேவாரம் ரசிகமணியின் இதயத்தில் ஒலிக்கிறது. ''அடிச் சோதிநீநின்றதாமரையாய்அலர்ந்ததுவோ?'' என்ற திருவாய்மொழி அவர் நெஞ்சில் தீம்பாகாய் இனிக்கிறது. ''வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்'' என்ற கவிதை வரி அவர் முன் கற்கண்டாய் நிற்கிறது. தடாகத்தில் தாமரை பூத்திருப்பது போல இருள் மயமான உடலுக்குள் அருள் வடிவமான 'மனசு' பூத்திருக்கிறது. அந்த மனத்திலே கொலு வீற்றிருக்கும் தெய்வப் பெண் கலை வாணியை எண்ணி எண்ணி மகிழ்கிறார் தமிழ் மணியான ரசிகமணி. 'சமயமே பூவோடு ஒன்றாய்க் கலந்து விட்டது' என்கிறார். உடனே, சைவம் மணக்கிறது. நான்முகனும், கலைமகளும் திருமகளும் அமர்ந்த கமலாசனம் மணக்கிறது. மலைமகன் பிறந்த தாமரை மலர் மணக்கிறது. அதை நுகர்ந்த டி.கே.சி.யின் ரசிக மனம் மணக்கிறது. அவர் ரசித்த தாமரையில் இறையைத் தரிசித்து நாமும் மணக்கிறோம்.

25. 8. 82

ரசிகமணி டி.கே.சி. நினைவு விழாக் கட்டுரைப் போட்டிக்கு வந்த 117 கட்டுரைகளில் கீழே கண்டவை பரிசுக்கு உரியவை என்று நடுவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

முதலாவது பரிசு ரூ ஆயிரத்து ஐநூறு!

ரசிகமணியின் சமயநோக்கு : எழுதியவர் ரா. கணேசன்
787, [illegible] சாலை
சென்னை 600006.

இரண்டு இரண்டாம் பரிசுகள் ரூ ஐநூறு வீதம்.

ரசிகமணியும் கம்பனும் : எழுதியவர் [illegible]
51, [illegible] தெரு
பாளையங்கோட்டை.

ரசிகமணியின் கலை இலக்கியம் எழுதியவர் : [illegible]
21, [illegible] தெரு
பாளையங்கோட்டை

[illegible]
[illegible]

[illegible]

மரமும் மாமணியும்

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் ஒரு தேநீர் விருந்து. ஸ்காட்லண்ட் பாதிரியார் ஒருவர் வந்திருக்கிறார். கல்லூரியின் பழைய மாணவரான ரசிகமணியும் விருந்துக்குப் போயிருக்கிறார். அறிமுகம் ஆகிறது. பாதிரியார் ரசிகமணியைப் பார்த்தார், ஏளனத்தோடு ஒரு கேள்வியைப் போட்டார்: ''ஸ்காட்லண்ட் தேசத்தில் உள்ள எங்களுக்கு மரங்கள் என்றால் மிகவும் பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ?''

ரசிகமணி பதில் சொன்னார், ''மரங்களிடத்திலே எங்களுக்குப் பிரியம் இல்லை யாது; பக்தியே செலுத்துகிறோம். (we don't love trees but we worship them) தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஸ்தல விருக்ஷம் என்று ஒன்று இருக்கிறது. குற்றாலத்திலே பலா மரம்; திருநெல்வேலியிலே மூங்கில் மரம்; திருப்பெருந்துறையிலே குருந்த மரம். இப்படியாக ஒவ்வொரு கோயிலுக்கும் மூல ஸ்தானமாக அமைந்திருப்பது ஒரு மரம் தான்!'' ஸ்காலண்ட் துரை அரண்டே போனார்.

ரசிகமணியைப் பற்றிய இந்த ரசமான நிகழ்ச்சி ''டி.கே.சி ஜாதகம்'' என்ற கருத்துள்ள கட்டுரை மூலம் நமக்குக் காணக் கிடைக்கிறது. அவருடைய இயற்கை வழிபாட்டை எண்ணி வியக்கிறோம். இறை ஞானத்தை எண்ணி மலைக்கிறோம்.

ஆண்டவனும் அருள்மணியும்

"கலை என்றால் எப்படி இருக்கவேண்டும்? அது நம்முடைய உணர்ச்சித் தத்துவத்தையும் கவர்ந்து நம்மை வேறு வஸ்து ஆக்கிவிட வேண்டும். அதனால் நமக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டுகிறது. அதுதான் கலை" என்று கலைக்கு இலக்கணம் வகுத்தார் கலை மணியாம் டி.கே.சி.

"ஆயகலைகள் அறுபத்து நாலு" என்பார்கள். "அறுபத்து நாலாயிரம்" என்றாலும் பொருந்தும் என்கிறார் ரசிகமணி. சங்கீதம் ஒரு கலை; கவி ஒரு கலை; சமயமும் ஒரு கலைதான்.

சமயத்தின் நோக்கம் என்ன? ரசிகமணி சொல்கிறார்: "நாம் செய்கிற செயலுக்கும் உணருகிற உணர்ச்சிக்கும் நாமே காரணமாய் இருப்பதாகக் காண்பது ஒரு பார்வை; நம்முடைய உணர்ச்சிக்கெல்லாம் பின்னாக இருக்கும் தனிப் பொருள் வேறு ஒன்று என்று உணர்ந்துகொள்வதுதான் மற்றொரு பார்வை இந்த உணர்ச்சியை "மெய்யுணர்வு" என்றும், "பதிஞானம்" என்றும் சொல்லுவார்கள். இந்த உண்மையைக் கண்டு கொள்வதையே தனி நோக்கமாக உடையன சமயங்கள்."

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும் இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும் மெய்ப்பொருளாம் சிவம்" என்கிறது திரு அருட்பா. மெய்ப் பொருளான இறைவன் அடியார்களின் அறிவிற்குள் ஞான ஒளியாகத் திகழ்கிறான். அந்த 'இயல் உண்மை அறிவு இன்ப வடிவை' நாம் அறிய முடியுமா? அருளின்பம் பெற முடியுமா? முடியும் என்கிறார் ரசிகமணி. "அதற்குச் சாதனம் அறிவைப் பின்பற்றிக் கலைகளை ஆராய்தலே" என்று எளிமையான வழியைச் சொல்லிவிட்டார். ரசிகமணியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு கலையுலகத்தை நாம் ஒரு சுற்றுச் சுற்றி வரவேண்டும். சுற்றி வரும்போது ரசிகமணியின் இதயத்தோடு ஒட்டி நாமும் விஷயங்களை அனுபவிக்க வேண்டும். அவ்வளவுதான். கலையைச் சுவைக்கும் முறை நமக்குக் கைவந்துவிடும்! கடவுளும் நம்முன் தோன்றிவிடுவார்.

இறைவனை உணர, கடவுள் தத்துவத்தை அறிய, வீட்டை அடைய நாம் உடலை வருத்த வேண்டாம் என்கிறார் ரசிகமணி.

"வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவதும்" என்ற

சம்பந்தர் தேவாரத்தை நமக்கு நினைவுபடுத்துகிறார். உடலை வருத்தியெல்லாம் செய்யும் ஹடயோக சாதனம், சாதனம் அல்ல. சமய உணர்ச்சிக்கும் கலைகளின் அருள் நோக்கம் வேண்டும் என வலியுறுத்துகிறார்.

புராணங்களும் புகழ்மணியும்

சமயத்துக்கும் மொழிக்கும் தொடர்பு இல்லை என்று சில புலவர்கள் சான்று காட்டத் தொடங்கினார்கள். அவர்கள் புனிதமான புராணங்களை மடமையெனத் தள்ளினார்கள். சந்தனத்தைச் சகதி என்று சொல்லி புழுதியை எடுத்துத் தமிழ்த் தாய்க்குப் பூசத் தொடங்கினார்கள். 'தமிழ் இலக்கியத்தைத் தமிழர்களுக்கே வேப்பங்காயாக அடித்து விட்ட' பண்டிதர்களைக் கண்டு பரிதவித்து விடுகிறார் ரசிகமணி.

"தமிழ் வளர்ந்த மன்றங்கள்" என்ற இலக்கியக் கட்டுரையில் அவருடைய சமய தாகம் ததும்பி வழிகிறது. அவர் கூறுகிறார்: "தமிழ் நாட்டிலே நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன்பு ஆங்காங்கு புலவர்கள் என்றும் புராணப் பிரசங்கிகள் என்றும் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் யாராவது ஓர் ஆசிரியரிடம் சில ஆண்டுகள் உடனிருந்து திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் முதலிய நூல்களைப் பாடம் சொல்லக் கேட்பார்கள். பாடல்களை என்ன முறையில் பாடவேண்டும் என்பதையும் மாணவர்கள் கற்பார்கள். நாளடைவில் தாங்களும் புராணப் பிரசங்கம் செய்ய வல்லவராவார்கள். ஊர் ஊராகப் போய்ப் புராணப் பிரசங்கம் செய்வதால் தங்களுக்குக் காலட்சேபம் நடக்கும். ஊரில் உள்ளவர்களுக்கும் தமிழைக் கேட்டு அனுபவிக்கும் வசதி கிடைக்கும்." இவ்வாறு புராணங்கள் பண்டைக் காலத்தில் தாமும் வளர்ந்து, தமிழையும் வளர்த்தன. தமிழ் வளர்ந்த மன்றங்களாகச் சமயங்கள் நிலவின.

ஆனால், இப்போது தனித் தமிழ் நடை வந்து, புராணிகர்களையும், புராணப் பிரசங்கங்களையும் துரத்தி விட்டது. புராணப் பிரசங்கம் மிகவும் அபூர்வமாகப் போய் விட்டது. பண்டைக் காலம் மீண்டும் வருமோ என்று ஏங்குகிறார் ரசிகமணி. தேவாரமும், திருவாசகமும், கம்பரும், சேக்கிழாரும் வளர்த்த தமிழ் இனி நல்வாழ்வு அடையுமோ என உருகுகிறார்.


(அடுத்த இதழில் முடியும்)


பிச்சைக்காரன்: " 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு'ங்கறதை நீங்க படிக்கலையா அம்மா?"

அவள்: "படிச்சிருக்கேனே. அதில உனக்கென்ன சந்தேகம்?"

பிச்சைக்காரன்: "கல்லாட்டம் இருக்கிற உங்க வீட்டு இட்லியை என் திருவோட்டில் தூக்கிப் போட்டதில் அது உடைஞ்சு போச்சு.!"

—கே. ஆர். எம்.




டெலிவிஷன்லே கலர் பார்த்தது போதும்
ரசாயனக் கலர் பாரு!...
ரசாயனம் - உர இலாகா
சாத்தே
ஸ்டீபன்
கப்பல் போக்குவரத்து
போதும், இந்த ரயில்லே
போதும்!
சேத்தி
உள்துறை (அஸ்ஸாம்)
கொடுத்துச் சிவந்த கரம்னு
சொன்னாங்களேன்னு வந்தா...
மனுஷன் கையை
விரிச்சுட்டாரே!...
இ. காங்கிரஸ்

கல்கி

1982 செப்டம்பர் 12
துந்துபி ஆவணி 27
மலர் : 41 இதழ் : 7



இருபதாண்டுத் தாமதம்!

சென்னை — புது தில்லி கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸுக்கு ''பாரதி எக்ஸ்பிரஸ்'' என்று பெயர் சூட்ட ரயில்வே அமைச்சர் சம்மதித்துள்ளார். நன்றி. ஆனால் பெயர் மாற்றங்களாலேயே தமிழக மக்களைத் திருப்திப்படுத்தி விடலாம் என்று தமிழக அரசும் சரி மத்திய அரசும் சரி தப்புக் கணக்குப் போட்டுவிட வேண்டாம்.

ரயில்வே அபிவிருத்தியில் தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகள் பல காலமாகவே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இதே நேரத்தில் அண்டை மாநிலமான கேரளத்தில் — ஆட்சியில் ஸ்திரத்தன்மை இல்லாதிருந்தும்கூட — மத்திய அரசுடன் போராடித் தங்கள் மாநிலத்தின் நலனுக்குக் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் தலைவர்கள் ஒற்றுமை காட்டியுள்ளனர். பல ரயில்வே திட்டங்கள் அங்கு நிறைவேறியுள்ளன. கர்நாடகமும் அப்படியே. ஆனால் தமிழகத்திலோ ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் ஜனநாயகப் பண்புகளை மறந்து ஒருவரை ஒருவர் விரோதித்துக் கொண்டதில் மாநிலத்தின் நலனுக்காக ஒருமித்த குரலெழுப்பிப் போராடத் தவறி விட்டனர்.

இதனால்தான் கரூர் — திருநெல்வேலி பிராட்கேஜ் பாதையின் வேலை துவக்க விழாவுக்கே இருபதாண்டுகளுக்கு மேல் தாமதமாகியுள்ளது. இதன் உடன் விளைவாகத் தொழில் வளர்ச்சி வேகமும் குறைவாயுள்ளது.


43 கோடி ரூபாய் திட்டத்துக்கு 82—83ல் 70 லட்சமே ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கையில் நமக்குப் பெரும் ஏமாற்றமேற்பட்டபோதிலும், 'பணத் தட்டுப்பாடு காரணமாகத் திட்டத்தின் அமலாக்கத்தில் தாமதமேற்படாது' என்று ரயில்வே அமைச்சர் தொடக்க விழாவில் அளித்த உறுதிமொழியால் மீண்டும் நம்பிக்கை துளிர் விடுகிறது. முழு திட்டமும் ஐந்தாண்டுகளில் நிச்சயம் நிறைவேறும் என்ற வாக்குறுதியும் கிடைத்தால்தான் ஏழு ஆண்டுகளிலாவது முடிந்துவிடும் என்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம். மதுரை — மணியாச்சி பகுதியில் இருக்கிற மீட்டர் கேஜையே அகலப்படுத்துவதாயிருக்கிறார்கள். இதற்குப் பதில் பக்கத்திலேயே புதிய பிராட்கேஜ் பாதை அமைப்பது பல விதக்குழப்பங்கள் தொந்தரவுகளைப் பொது மக்களுக்குத் தவிர்க்கும்; சரக்குப் போக்குவரத்தும் எளிதாகும்.

சென்னை பீச்சிலிருந்து மயிலாப்பூர் வரை துரிதப் பயணத்துக்கு ரயில் விடுகிற திட்டமும் நீண்ட காலமாகப் புழுதி படிந்து கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

இதற்கெல்லாம் தமிழகத் தலைவர்கள், எம். பி.க்கள் கட்சி வேற்றுமை இன்றி வன்மையாக வாதாட வேண்டும்.

கரூர் — திருநெல்வேலி பிராட்கேஜ் பாதை வேலை துவக்க விழா தமிழக அரசு வழங்கியுள்ள ஹெலிகாப்டரின் வெள்ளோட்ட விழாவாகவும் விளங்கியது! பிராட்கேஜ் பாதை அமைய நில ஆர்ஜிதத்தில் தாமதமேதும் இராது என்று கூறியுள்ள முதல்வர், பிராட்கேஜ் பாதை அமைக்கும் பணி ஹெலிகாப்டர் வேகத்தில் அன்றி ஜெட் வேகத்தில் நடக்குமாறு கவனித்துக் கொள்ளட்டும்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்





1

கல்லூரியின் முதல் வகுப்புக்கான மணி யடித்து வெகு நேரமாகியிருக்க வேண்டும். அகிலா உள்ளே நுழைந்தபோது கல்லூரிக் காம்பவுண்டே நிசப்தமாக இருந்தது. தூரத்தில் அவளின் வகுப்பில் ரீட்டா மாத்யூஸ் ஆங்கில விரிவுரையை ஆரம்பித்திருப்பது தெரிந்தது. இன்றும் அந்த வகுப்பைத் தவறவிட நேர்ந்ததன் வருத்தம் முகத்தில் படர அகிலா சற்றுத் தள்ளித் தன் வகுப்பி லிருந்தோ, பிரின்ஸி



யின் அறையிலிருந்தோ பார்த்தால் தெரியாதவாறு ஒரு மரத்தடியைத் தேர்ந்தெடுத்து அதன் கீழே வளர்ந்திருந்த புற்களின் மீது அமர்ந்து அடி மரத்தில் சாய்ந்து கொண்டபோது புற்களில் பரவிக் கிடந்த ஈரத்தால் தாவணியின் பின் பக்கம் மிக லேசாகச் சில்லிட்டது. இன்னும் சிறிது நேரம் அந்தப் புற்களின் மீது உட்கார்ந்திருந்தால் தாவணியின் பின் பகுதி முழுதும் நனைந்துபோகலாம். லேசான செம்மண் படிந்து வெள்ளைத்தாவணியைச் சற்றே சிவப்பாக்கவும் கூடும். ஆனால் அவள் அவை எதையும் பொருட்படுத்தாமல் மரத்தின் மீது சாய்ந்து தூரத்தில் எங்கோ வெறித்தாள். கண்கள் இரண்டும் கலங்கிக் கிடந்தன. உள்ளுக்குள் பொங்கி வந்த துக்கத்தைக் கீழ் உதட்டைக் கடித்து அடக்க முயன்றதில் முகம் சிவந்து போயிற்று.

திடீரென்று அவளுக்குக் குமுறிக் குமுறி அழவேண்டும் போலிருந்தது. இப்படி அழுகையை அடக்காமல் யார் மடியிலாவது முகத்தைப் புதைத்துக் கொண்டு அவர்களின் கைவிரல்கள் லேசாகத் தலையை ஆறுதலாக வருடிக் கொடுக்க, அந்த ஆறுதல் தரும் இதத்தில் மனதில் சுமையாகக் கனத்துக் கொண்டிருப்பதை மெதுவாக இறக்கிவைக்க வேண்டும்....


ஆனால் அப்படி இறக்கி வைக்க அவளுக்கு யார் இருக்கிறார்கள்? அம்மா அவளை என்றுமே புரிந்துகொண்டதில்லை. அவளை மட்டுமில்லை. அம்மாவால் யாரையும் புரிந்து கொள்ள முடிந்ததில்லை. அவளையும் யாரும் புரிந்துகொள்ள விடவும் மாட்டாள். அவளுக்குத் தெரிந்ததெல்லாம் இரண்டே விஷயங்கள்தான். ஒன்று, எப்போதும் யாரை யாவது திட்டிக் கொண்டிருப்பது. இரண்டாவதாக மூலையில் உட்கார்ந்து அழுவது.

அகிலா விவரம் தெரிந்த நாட்களாக இந்த இரண்டைத்தான் அம்மாவிடம் பார்த்திருக்கிறாள். இவற்றிற்குப் பயந்தே அக்காக்கள் சரோஜாவும், வனஜாவும் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்விட்டார்களோ என்று தோன்றும். ஒருத்தி எட்டாவதும், இன்னொருத்தி பத்தாவதும் முடித்து சமைத்து, வீடு பெருக்கி, துணி துவைத்து, வெந்நீர்த் தவலையைப் பளபளவென்று தேய்த்து வைத்துப் பின் இதே வேலைகளைச் செய்ய இன்னொரு இடத்தைக் கல்யாணம் மூலமாகத் தேடிக் கொண்டு போய் விட்டார்கள். அங்கே அவர்கள் இன்னொரு காரியத்தையும் சேர்த்துச் செய்யப் போயிருந்தார்கள். அதுதான் பிள்ளை பெறுவது. அதை மூத்தவள் இரண்டு முறை செய்தாகி விட்டது. வனஜா முதல் தடவையாக இன்னும் ஒரு மாதத்திலோ, இரண்டு மாதத்திலோ அதற்காக வந்து சேரப் போகிறாள். அப்போது ஏற்படப் போகிற வேலைகளின் சுமையினாலும், செலவுகளின் கூடுதலினாலும் அம்மாவின் சிடுசிடுப்பும், முணு முணுப்புக்களும், சமையல் அறையின் பாத்திர ஓசைகளும், கூப்பிடுகிற குரலின் தொனியும் அதிகமாகப் போகின்றன. வழக்கமான 'கடன்காரக் கட்டைல போறவனே... அன்

ணுக்கள் மணி, ராம்ஜியானால் பால் மாறி போறவனே, போறவனேவாகும்... ஆனால் அந்த ஆண்பால் திட்டல்கள் மணியும், ராம்ஜியும் வேலைக்குப் போக ஆரம்பித்தவுடனே வெகுவாகக் குறைந்து போயிருந்தன. இரண்டு பேரின் வேலைகளும் இரு வித்தியாசமான கடைகளில் கணக்கெழுதுவது என்றாலும், அவர்களின் முந்நூறு ரூபாய் சம்பளத்தில் கணிசமாக ஒவ்வொருவரும் இருநூறு ரூபாய்களை முதல் தேதியானால் அம்மாவிடம் தந்து கொண்டிருந்தனர். அந்த நான்கு நூறு ரூபாய் நோட்டுக்கள் அம்மாவின் கடன்காரன்களையும், கட்டைல போறவன்களையும் முற்றிலும் குறைத்திருந்தன.

இப்படி முதல் இரண்டு அக்காக்கள் கல்யாணத்தின் மூலமும் இரண்டு அண்ணாக்கள் சம்பாதிப்பதன் மூலமும் அம்மாவின் திட்டுக்கள், அப்பாவின் சண்டைகள், வீட்டின் குமுறல்கள் எல்லாவற்றிலிருந்தும் தப்பித்துக்கொண்டு போய்விட்ட பின்—

அவைகளிலிருந்து தப்பிக்கிற வழி தெரியாமல், மார்க்கம் கிடைக்காமல் எல்லார் எரிச்சல்களுக்கும் ஒரே புகலிடமாக மாட்டிக்கொண்டவள் இவள்தான். ஒரோர் சமயம் அம்மாவின் திட்டுக்களில் இருந்து தப்பிக்கத் தானும் கல்யாணம் பண்ணிக் கொண்டு போயிருக்கலாமோ என்றுகூட இவள் நினைத்ததுண்டு.



ஆனால் அதற்கும் நிச்சயமாக வழியில்லை என்பது தெரிந்துபோய் விட்டது. சரோஜாவின் கல்யாணத்துக்கும், வனஜாவின் கல்யாணத்துக்கும் பட்ட கடனே இன்னும் அடைபடவில்லை. அதை அடைக்கிற முயற்சியையும் யாரும் எடுக்கவில்லை. முயன்றாலும் அவ்வளவு சீக்கிரத்தில் அடைபட்டும் விடாது. சில மாதங்களில் கடனுக்கான வட்டிப் பணம்கூடக் கட்டப்படாமல் வீட்டுக்கு நோட்டீஸ் வருவதை அவள் பார்த்திருக்கிறாள்.

அப்பா ரிடையரான பின்புதான் வீட்டின் இந்தப் பணக் கஷ்டம் அதிகரித்துவிட்டிருந்தது. அதற்கு முன்னால் இத்தனை கஷ்டமில்லை.

அப்பா ரிடையரான உடனே அம்மாவிடமிருந்து வெளிவந்த வார்த்தை.

''முதல்ல இவளைக் காலேஜிலேருந்து நிறுத்தற வழியைப் பாருங்கோ. குடும்பம் இருக்கிற நிலைமைக்கு இவளுக்கு மட்டும் படிப்பென்ன வேண்டிக் கிடக்கிறது? ஆம்பிளைப் பையன்கள் ரெண்டு பேரையும் எஸ். எஸ். எல் ஸி.யோட நிறுத்தியாச்சு. மூத்த பொண்கள் எட்டாவதும் பத்தாவதுமாக நின்னுபோச்சு. அப்படி இருக்கிறபோது இவளுக்கு மட்டும் தனியாக என்ன காலேஜ் படிப்பு வேண்டிக் கிடக்கிறது...?''

முற்றத்தின் ஓரமாக உட்கார்ந்து, புத்தகத்தில் கண்களும், அவர்கள் பேச்சில் மனசுமாக இருந்த அவள், அம்மாவின் சொற்களில் ஒரு விநாடி சுருண்டு போனாள். அதை எங்கே அப்பா கேட்டுவிடுவாரோ என்ற பயத்தில் உடம்பு முழுவதும் பதற மெதுவாக அங்கிருந்தே அப்பாவை ஏறிட்டுப் பார்த்தாள். கல்லூரியில் சேர அவர் எதிரே கெஞ்சிக்கொண்டு கண்களில் அழுகையும், நெஞ்சில் துடிப்புமாக நின்ற அந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. ஒரு நாளா, இரண்டு நாளா? எத்தனை நாட்கள் அப்படிக் கெஞ்சிக்கொண்டு நின்றிருக்கிறாள்... அவர் வாசலில் இருந்தால் வாசலில், பின் பக்கம் போனால் கூடவே பின் பக்கம் போய், சாப்பிட உட்கார்ந்தால் பக்கத்தில் உட்கார்ந்து, தூங்கப் பாய் விரித்தால் காலடியில் நின்று....

'அப்பா நான் மேலே படிக்கிறேம்ப்பா...?'

அவரிடமிருந்து பதிலே வராது. உத்தரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

'ப்ளீஸ்பா. என்னைக் காலேஜில் சேர்த்துவிடுங்கப்பா...நான்மேலே படிக்கிறேம்பா?''

அவர் மெதுவாக அவள் பக்கம் திரும்பிக் கேட்பார்.

''படிக்க மட்டும் என்னம்மா செய்யப் போறே...? வேலைக்கா போகப் போறே?''

''இல்லேன்னாலும் படிக்கறேம்பா....''

''இல்லேன்னா எதுக்குப் படிக்கணும்? கல்யாணம் பண்ணிண்டு குடும்பம் நடத்த இந்தப் படிப்புப் போறும்மா...!''

அதற்கு ஒரு விநாடி யோசித்துச் சிறிது

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சட்டென்று சொன்னாள்.

''ஏம்பா, எனக்கு உடனேயா கல்யாணம் பண்ணப் போறேள், இல்லேயே? அதற்கு எப்படியும் மூணு, நாலு வருஷம் ஆகுமே? அதுவரைக்கும் நான் படிக்கறேனே...?''

அந்த உண்மையில் அவரும் உடனே பதில் சொல்ல முடியாதவரானார். அவள் கேட்டது மிக நியாயமான வேண்டுகோளாகப் பட்டாலும் அதைச் செயலாற்றுவதில் அவருக்கும் நிறையச் சங்கடங்கள் இருந்தன. முதலாவதாக அவளைக் கல்லூரிக்கு அனுப்புவதால் ஏற்படப் போகிற செலவு. இரண்டாவது 'அவளை மட்டும் மேலே படிக்க வைக்கிறியே... அவள் என்ன உசத்தி, நாங்கள் என்ன குறைச்சல்?' என்ற மற்ற இரண்டு பெண்களின் கேள்விகள். மூன்றாவதாக மனைவி மங்களத்திடமிருந்து கிடைக்கக் கூடிய வழக்கமான குத்தலும், ஏளனமுமான வசைச் சொற்கள்...

''ஏன் இவ மட்டும் ஆனை பொண்ணுன்னு சக்திக்கு மீறி காலேஜிலே சேர்த்தாகிறதோ? ஏன்னா அவ உங்க லீலா வினோதங்களுக்கு உடந்தையாக இருந்தாள் என்கிற நன்றி விசுவாசமோ...?''

அப்படியேதான் கேட்டாள் அம்மா. இன்னும் என்னென்னவோ கூடச் சேர்த்துக் கேட்டாள். அக்காக்கள் இரண்டு பேரும் கடிதம் மூலமாகச் சண்டை போட்டார்கள்.

'ஏம்பா, தெருக் கோடியில் இருந்த பள்ளிக்கூடத்திற்கு அப்போ எங்களை நீ அனுப்பலே. பெரியவளான காரணத்தைச் சொல்லி நிறுத்திட்டே. இப்போ இவளை மட்டும் காலேஜுக்கு அனுப்பிப் படிக்க வைக்கறே... அவள் உனக்கு மற்ற காரியங்களுக்கெல்லாம் அம்மாவுக்குத் தெரியாமல் உதவி செய்தாள் என்கிறதால்தானே இவளுக்கு மட்டும் இப்-



படிச் சலுகை காட்டறே... அம்மாவுக்குத் துரோகம் செய்தாவது நாங்கள் இந்த மாதிரிச் சலுகைகளைப் பெறத் தயாராக இல்லை. அவளே எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளட்டும்....'

அவர்கள் குறிப்பிட்ட அம்மாவுக்குச் செய்த துரோகமும், அம்மா சொல்கிற லீலா விநோதங்களுக்கு உடந்தையும் என்ன என்பது அகிலாவுக்குப் புரிந்தே இருந்தது.

அப்பாவுக்கும், பின்கட்டில் குடியிருந்த பாட்டு டீச்சர் கல்யாணிக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பைத்தான் அவர்கள் இப்படியெல்லாம் சொல்கிறார்கள் என்பதும், அவர்களின் நட்பு வளருவதற்குத் தான் ஒரு வகையில் காரணமாக இருந்ததையே குறிப்பிடுகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டிருந்தாள்.

பாவாடை சட்டையோடிருந்த அந்தப் பத்து வயதில் அவள் கல்யாணியிடம் பாட்டு



கற்றுக்கொள்ளப் போனபோது அப்பா கொடுத்த கடிதங்களைக் கல்யாணியிடமும், கல்யாணி கொடுத்த கடிதங்களை அப்பாவிடமும் கொடுத்தது — பின் அப்பா கேட்டுக் கொண்ட மாதிரி அவர் குறிப்பிட்ட இடங்களுக்குக் கல்யாணி டீச்சரோடு போனது, அவர்கள் பேசுகிறவரை இவள் பீச் மணலில் விளையாடுவதும், ஐஸ்கிரீம் சாப்பிடுவதும், பின் திரும்பி—வரும்போது டீச்சரோ அப்பாவோ வாங்கித் தருகிற சின்னச் சின்னப் பரிசுப் பொருட்களில் மனம் மகிழ்வதும் அந்த மகிழ்ச்சியில் அப்பாவும் டீச்சரும் எது சொன்னாலும் தலையாட்டுவதும்—

''அகில், இங்கே நான் வந்தேன், டீச்சர் கிட்டே பேசினேன்னு உங்கம்மா கிட்டே சொல்லக் கூடாது, என்ன...?''

அப்பா முகவாயைத் திருப்பிக்கெஞ்சுவார்.

''நம்ம அகிலாக் குட்டி அப்படியெல்லாம் சொல்லவே மாட்டாள். நீங்க கவலைப் படாதீங்க... என்ன அகிலா...?'' — டீச்சரின் அணைப்பும் தலை வருடலும்....

இதெல்லாம் அவள் அறியாதவைகள். இப்படியெல்லாம் கூடக் கொஞ்சுவார்களா என்று நினைக்க வைத்தவைகள். அவள் அறிந்தது, கேட்டது, உணர்ந்ததெல்லாம்—

'ஏய் அகிலா, தடிக் கழுதை கொட்டிக்க வாயேண்டி...' 'ஏண்டி மூதேவி, இடிச்ச புளி மாதிரி ஒரே இடத்துல உட்கார்ந்துண்டு கையிலே ஒரு புஸ்தகத்தையும் வச்சுக் காட்டா எழுந்து வந்து கூடமாட கொஞ்சம் ஒத்தாசை பண்ணேன்....'

'ஏய் அகிலா கட்டால போறவளே, கூப்பிடறது காதுல விழலை....?'

இதை யெல்லாம் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட காதுகளுக்குக் கல்யாணியின் கொஞ்சல் சங்கீதமாக விழுந்தது. மோகனமாகக் குளிர்ந்தது. அந்தக் குளிர்ச்சிக்கும், இதத்திற்கும் ஆசைப்பட்டே அவள் பேசாமல் இருந்தாள். வீட்டில் இதைப் பற்றி மூச்சு கூட விடாமல் மௌனமானாள்.

ஆனால் அந்தக் குளிர்ச்சியும் அதிக நாள் நீடிக்கவில்லை. இவர்கள் மூன்று பேரையும் ஒன்றாகச் சேர்த்து நிறைய இடங்களில் பார்த்துவிட்ட நிறையப் பேர் அம்மாவிடம் வந்து சொல்ல, அம்மா கொஞ்சம் கொஞ்சமாகத் துப்பறிய ஆரம்பித்தாள்.

ஒரு நாள் அவள் கல்யாணி டீச்சரோடு வெளியில் போனதும் ஸி.ஐ.டி. மாதிரி பின் தொடர்ந்து வந்து கபாலீஸ்வரர் கோவிலின் குளத்துப் படிக்கட்டில் வழக்கம்போல் அப்பாவையும் டீச்சரையும் பேசவிட்டு, இவள் நான்கு படிக்கட்டுகள் தள்ளித் தனியாக உட்கார்ந்து தாஸப்பிரகாஷ் ஐஸ்கிரீமைச் சுவைத்துக்கொண்டிருந்தபோது—

பின்பக்க மண்டையில் பளீரென்று விழுந்த அடியின் அதிர்ச்சியில் ஐஸ்கிரீம் கப் எகிறிக் குளத்தில் விழ இவள் பயமும், திடுக்கிடலுமாகத் திரும்பிப் பார்த்தபோது—

முகமும் கண்களும் கோரமான நிலையில் அவளை அப்படியே விழித்துக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு விடுகிற பாம்பைப்போல் நின்றிருந்தாள் அம்மா...

(தொடரும்)

பாரதி நூற்றாண்டு



சுந்தரம் கிளேட்டன்

அளிக்கும்

டி.வி.எஸ்-50 மொபெட்!

CD TVS

பரிசுத்திட்டம்



கல்கி இதழின் இந்தப் பக்கத்தைக் கத்தரித்து எடுத்துப் பத்திரப்படுத்துங்கள். இது உங்களுக்கு டி. வி. எஸ்-50 மொபெட் பரிசு பெற்றுத் தரும் வாய்ப்புண்டு.

கண்ணன் என் காதலன் என்ற பாரதி பாடலின் நான்கு அடிகள் கீழே தரப்படுகின்றன. இந்நான்கிலும் இலக்கியச் சிறப்பு மிக்க முக்கியமான அடி எது என்று கருதுகிறீர்கள்? திரும்பத்திரும்பப் படித்துப் பார்த்து நன்கு சிந்தித்து அந்த அடியை மட்டும் அடிக்கோடிட்டு வைத்துக் கொள்ளுங்கள். மற்றவை அடுத்த வாரம்.


கண்ணன் என் காதலன்

ஆசை முகம் மறந்து போச்சே — இதை
ஆரிடம் சொல்வேனடி தோழி?
நேச மறக்கவில்லை நெஞ்சம் — எனில்
நினைவு முக மறக்க லாமோ?

கண்ணில் தெரியுதொரு தோற்றம் — அதில்
கண்ண னழகு முழுதில்லை;
நண்ணு முக வடிவு காணில் — அந்த
நல்ல மலர்ச் சிரிப்பைக் காணோம்

தேனை மறந்திருக்கும் வண்டும் — ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
வைய முழுதுமில்லை தோழி

கண்ணன் முக மறந்து போனால் — இந்தக்
கண்களிருந்து பயனுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய் - இனி
வாழும் வகை யென்னடி தோழி?



மேனகா காந்தி புதுக்கட்சி ஆரம்பித்துள்ளாரே?

⌘ ஸ்ரீ. ராமமூர்த்தி, அரசவனங்காடு ★

? தஞ்சை மாவட்டத்தில் போதிய தண்ணீர் இல்லாததால் ஒருபோக சாகுபடிகூட செய்ய முடியாது போயிருக்கிறது. நாங்கள் யாரிடம் போய் முறையிடுவது?

! (1) இதுபோல் பத்திரிகைகளுக்கு எழுதி முறையிடலாம். (2) நதி நீரை எந்த மாநிலமும் முதலுரிமை கொண்டாட முடியாதவாறு தேசியமயமாக்கிப் பகிர்ந்து அளிக்குமாறு ஆட்சித் தலைவர்களிடம் முறையிடலாம். (3) கங்கா-காவிரி இணைப்புப் போன்ற கனவுகளை நனவாக்கக் கூடிய அறிஞர்களைத் தேர்ந்தெடுக்குமாறு வாக்காளர்களிடம் முறையிடலாம். (4) இத்தகைய அறிஞர்கள் ஒதுங்காமல் தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்று கடவுளிடம் முறையிடலாம்!

⌘ இளஞ்சேரன், கோபி

? மறைந்த ரானடே அவர்களைப்பற்றி...

! ஒன்றரைக் கோடி ரூபாயை நன்கொடையாகத் திரட்டிக் குமரியில் விவேகானந்தர் பாறை சின்னத்தை அமைத்த கர்மயோகி. சுமார் 200 ஏக்கர் பரப்பில் கன்னியாகுமரியில் கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள், பயிற்சி முகாம்கள், இதர சேவா திட்டங்கள் அவரது தன்னலமற்ற உழைப்பைச் சதா நினைவூட்டும்.

⌘ ஏ. ஹரிதாஸ், அச்சம்பாளையம்

? குற்றங்களைப் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்து எழுதும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் மக்களுக்குத் தீமை செய்வதாக நம்பப்படுகிறதே?

! இப்படி நம்புவதை விடப் பெரிய தீமையல்ல அது!

⌘ மு. பாஸ்கரன், புதுவை

? தேசியக்கொடியை அவமதித்துக்கார்ட்டூன் போட்டுள்ள சோ பற்றி உங்கள் அபிப்பிராயம்?

! விஷயம் நீதி மன்றத்தில் இருப்பதாகக் கூறித் தப்பித்துக் கொள்வதாக அபிப்பிராயம்.

⌘ எஸ். கே. டி. எஸ். அசோகன், கோவில்பட்டி

? குழந்தை பிறந்ததும் உடனே பேசத் தொடங்கினால் என்ன பேசும்?

! ஹூம் ஒன்பது மாசம் ஒரு கவலையில்லாமல் இருந்தேன். இனிமே ஓயாத பிரச்னைகள் தான்!

⌘ ஜெ. குமரன், புதுச்சேரி

? ஜனாதிபதி ஜெயில்சிங்கின் தமிழ்நாடு சுற்றுப் பயணம் பற்றி...

! ஜெயில் சிங்கா? சுற்றுப் பயணமா? தமிழ் நாட்டிலா? வந்தாரா என்ன?

⌘ ஆர். சந்தானம், பல்லாவரம்

? எப்படிப்பட்ட திறமையான மனிதனும் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தால் துவண்டு விடுவது ஏன்?

! துவண்டால் அவரைத் திறமைசாலி என்று எப்படி ஏற்பது?

⌘ மேஜர்தாசன், ஈரோடு

? நாடகக்கலையும் நாட்டியக்கலையும் தமிழகத்தில் தற்போது எந்த அளவில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன?

! எண்ணிக்கையில் அதிகமாகவும் தரத்தில் குறைவாகவும்.

⌘ அ. கஸ்ருல் ஜமால், திருமங்கலக்குடி

? மேனகா காந்தி புதியகட்சி ஆரம்பித்துள்ளாரே?

! பத்தோடு பதினொன்று.

⌘ அன்னா அன்பழகன், அந்தணப்பேட்டை

? வடநாட்டு அருண்ஷோரிக்கும் தென்னாட்டு சோவுக்கும் என்ன வித்தியாசம்?

? ஏன் இதயம். தீபத்துடன் மோதியது போதாதா? 'குமுதத்'துடனும் என்னை மோத விட்டுப் பார்க்க ஆசையா இருக்கிறதா?

⌘ ஆர். எம். மாணிக்கம், சேலம்

? கசப்பான கேள்விக்கு இனிப்பான விடை ஒன்று கொடுங்களேன்?

! உங்களுக்கு ரூபாய் பத்து பரிசு என்று கூற ஆசை. ஆனால் உங்களுக்கு இனிப்பான விடை பிறருக்குக் கசக்குமே!

⌘ ஜோதி திரவியம், புதுவை

? பெண்களின் அழகைக் கவிபாடும் கவிஞர்கள் ஆண்களின் அழகை அவ்வாறு பாடுவதில்லையே ஏன்?

! கம்பனைப் படியுங்கள்.

⌘ ஆர். ஜெயலக்ஷ்மி, நெப்பத்தூர்

? நக்கீரன் கருத்து நம் கருத்தல்லவுக்கு நக்கீரன் அளித்துள்ள விளக்கம் சரியா?

! நக்கீரன் கருத்து நம் கருத்தல்ல.

⌘ உமாபதிராஜா, புதுச்சேரி

? ஆபாசமாகப் படமெடுக்கும் டைரக்டர்கள் ஏ முத்திரை கிடைத்ததும் ஏன் பதறுகிறார்கள்?

! மகிழ்ச்சியை மறைக்க!



கர்மயோகி



பத்தோடு...



பிறு பிறு...



விட்டுக்கொடுப்பது எதற்கு?

நீங்கள் கேட்டவை

சுஜா, சென்னை-1

? பாலசந்தருக்காவது விட்டுக்கொடுத்திருக்கலாமே பாரதி திரைப்படத்தை? நூற்றாண்டு முடியப் போகிறதே?

! பாரதி எல்லோருக்கும் சொந்தம். யார் யாருக்காக எதற்காக விட்டுக் கொடுக்க வேண்டும்? இவர் பாட்டுக்கு எடுக்க வேண்டியதுதானே? நன்றாயிருந்தால் நிலைக்கிறது.

எஸ். பாஸ்கரன், சென்னை

? பிறுமோடியின் ஆங்கிலம் எப்படி?

! பிறு பிறுவென்று அவர் பிடித்துக் கொண்டு அரசை உலுக்கும்போது ஜிலு ஜிலு!

ஏந்தல் ஆர். இளங்கோ, திருச்சி

? வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கவே முடியாதா?

! முடியும். பொருளாதாரக் கொள்கையும் கல்வி முறையும் மாறினால். கூடவே கு. க.—வில் தீவிரம் காட்டினால்.

மா. ராஜாமான்சிங், கடம்பூர்

? அந்துலேயின் மறுபெயர் ஊழல் என்றால் இந்திராவின் மறுபெயர்?

! இந்தியா என்று எமர்ஜென்ஸியின் போதே அறிவித்தாகி விட்டது.

ஏ. புருஷோத்தமன், புதுவை

? தமிழக முதல்வரிடம் தங்களை மிகவும் கவர்ந்த அம்சம் என்ன?

! பெயர் மாற்றுவதில் அவருக்குள்ள ஆசை! சாலைகள், கட்டிடங்களின் பெயர்களை மாற்றியது போதாதென்று இப்போது ஆதிஹிந்துக்கள் என்று ஒரு நாமகரணம். காந்திஜி சூட்டிய ஹரிஜன் என்ற பெயரை ஆதி திராவிடர் என்று மாற்றி இப்போது ஆதி ஹிந்து என்பது எதற்கு? ஹரிஜனம் என்பதிலேயே ஹிந்து எனத் தெளிவாகிறதே.

வி. விஜயகுமார், சென்னை-83

? சம்சாரம்; மின்சாரம் — வேறுபாடு என்ன?

! ஒன்று தொட்டால் ஷாக் அடிப்பது; மற்றொன்று தொடாமலே ஷாக் அடிப்பது!

ராகமாலிகா, சென்னை-15

? அரசியலில் மேதை என்று பெயரெடுக்க என்ன செய்யவேண்டும்?

! ராஜாஜி கூறுவார் 'அறிவை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். நேர்மையைவாங்க முடியாது' என்று. அரசியல் மேதையாகத் திகழ அறிவாற்றல் யாரிடம் உள்ளது என்று புரிந்து கொள்ளும் சக்தியும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலும் ஆசைக்குப் பலியாகாத நாணயமும் தேவை.

ஸ்ரீதர், கரக்பூர்

? ஊழலுக்கும் லஞ்சத்துக்கும் என்ன வேற்றுமை? இவை இரண்டும் இல்லாமல் இந்தியாவில் ஆட்சி நடத்த முடியாதா?

! ஊழல் அதிகார துஷ்பிரயோகம் எனில் லஞ்சம் அதற்காகப் பெறப்படும் ஊதியம். ஆனால் இன்று இந்தியாவில் நியாயமாக நடக்க வேண்டிய காரியங்களுக்கும் கையூட்டுத் தர வேண்டிய நிலை உருவாகி விட்டது. லஞ்ச ஊழலை அடியோடு ஒழிப்பது சாத்தியமில்லைதான். ஆனால் குறைக்க வழியுண்டு. சர்வ சுதந்திரமாகத் தொழில், வர்த்தகம் செழிக்க அனுமதிப்பதே வழி.


ஆர். இளங்கோ, ஏந்தல்

? உங்களுக்கு மிகவும் அதிசயமாகத்தோன்றுவது?

! போலீஸ் பாதுகாப்பில் இருந்த ஹரிஜனச் சிறுவன் ராஜா காணாமற் போனது அதிசயம். 'அவன் தப்பிவிட்டான், திரும்பி வருவான்' என்று முதலில் கூறிய போலீஸார், இப்போது வாய் திறக்க மறுப்பது அதைவிட அதிசயம். குற்றங்களைக் கண்டு பிடிக்க எத்தனையோ விஞ்ஞான பூர்வமான நவீன முறைகள் இருக்கும்போது நம் போலீஸார் இன்னமும் தண்டோபாயத்தையே நம்பியிருப்பது அதிசயத்திலும் அதிசயம்!

★ ரூ 10 பரிசு பெறுபவர்:

ஜி. ராமமூர்த்தி,
அரசவனங்காடு.
(முழு விலாசம் தேவை)



வட்டமேஜை

◉ 1–8–82 இதழில் கேரளாவில்தான் பைத்தியங்கள் அதிகம் எனத் துணுக்கைத் தொடங்கிய முறை சரியல்ல. மன நோய்க்காக மருத்துவ மனையில் அநுமதிக்கப்பட்டவர்கள் கேரளத்தில்தான் அதிகம் எனில் கேரள மக்கள் மன தத்துவ சிகிச்சை பற்றி நன்ருக அறிந்திருக்கிருர்கள் என்று பொருள். அவர்கள் படித்தவர்கள் அல்லவா? அதனுல் தெரிந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் பல பைத்தியங்கள் அறைக்குள் அடைக்கப்படுகின்றனர். சாமியாரிடம், கோயில் பூசாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுச் சித்ரவதைக்குள்ளாகின்றனர். அதனுல் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். இதை வைத்துக் கேரளத்தில்தான் பைத்தியங்கள் அதிகம் என முடிவுகட்டுவதா?

கொச்சின்-16 ஆர். எஸ். கனகம்

◉ இளமைக்கு எண்பது படமும் கட்டுரையும் கண்டேன். இளமையுடன் எளிமைக்கும் வித்திட்ட அன்னர் இப்படியே 'சென்சுரி'யும் போடணும்னு கல்கியின் அந்தக் கணபதியை மனம் உருகப் பிரார்த்திக்கிறேன்.

வியாசர் காலனி திருமதி நாராயண ராவ்

◉ சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட கல்கி இன்றைக்கு அறியாமை, அநியாயம்ஆகியவற்றை எதிர்த்துப்போராடி வருகிறது என்ருல் அதற்கு கல்கி சதாசிவம் அவர்கள்தான் ஆணிவேர் என்பது ஒன்றும் மிகையானதல்ல!

பெங்களூர் ப. மூர்த்தி

◉ 'டாக்டர் இல்லாத வேளை'யில் 'கல்கி' (இலவச இணைப்பு) ரொம்ப ஒத்தாசையாக இருக்கும் சார்! நன்றி!

சென்னை-4 மயிலை கோபி

◉ இந்தியஉணவுக்கார்ப்பொரேஷன்பொது ஜனத் தொடர்பு அதிகாரிக்கு ஒரு செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கவே மூன்று மாதங்களென்ருல், ஒரு ஃபைலின் மீது நடவடிக்கை எடுக்க எவ்வளவு நாட்களாகும்? ஒரு பிரச்னைக்கு முடிவெடுக்க எவ்வளவு காலமாகும்? அப்புறம் ஏன் உணவு கார்ப்பரேஷன் நஷ்டத்தில் இயங்காது? வாழ்க நம் அதிகாரிகளின் சுறுசுறுப்பு!

செங்கல்வி இ. முருகவேள்

◉ முன்பு பத்திரிகைகளின் பெயரில் சிறுகதைகள். இப்பொழுது கட்சிகளின் சின்னங்களை வைத்துச் சிறுகதைகள். போகிற போக்கைப் பார்த்தால் அரசியல் கட்சித் தலைவர்களின் பெயரிலும் சிறுகதைகள் எழுத வைத்தாலும் வைப்பீர்கள் போலிருக்கிறதே!

வடகாடு கே. என். செல்வரத்தினம்

◉ இதுநாள்வரை 'தோப்புக்கரணம்' எனத் தவருக நினைத்து வந்ததை 'காதுகளைப் பிடித்து வணங்குதல் காரணப் பெயராக தோர்பி கர்ணம் என வழங்கப்படுகிறது' என உணரவைத்தமைக்கு (சரணம் கணேசா-5) மிக்க நன்றி! கூடவே சோண பத்ர கல் என்ருல் என்ன? ஆவா ஹணம் செய்வது எப்படி? என்பவைகளையும் விளக்கி யிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்!

சென்னை-35 சி. பூபால் சிங்

◉ 29–8–82 இதழில் எங்கள் தொன் போஸ்கோ பிரிப்பரேட்டரி பள்ளியைப் பற்றி 'பிரபுவின் மனக் குமுறல்' என்ற ஒரு தவருன தகவல் கட்டுரையாகி யிருந்ததைப் படித்து அதிர்ச்சி யடைந்தேன்.

எங்கள் பள்ளியில் யு. கே. ஜி. வகுப்பில் மாணவர்களைச் சேர்க்க 4 வயது முடிந்திருக்க வேண்டும். ஆனுல் சான்றிதழ்களைச் சரிபார்த்தபோது பிரபுவுக்கும், அஜீத் என்ற மற்ருெரு மாணவனுக்கும் வயது குறைவாயிருந்தது. எனவே மாணவர்களைத் தொடர்ந்து பள்ளியில் வைக்க முடியாது என்பதைத் தெரிவிக்க, இரு மாணவர்களுடைய பெற்ருேருக்கும் பிரின்ஸிபாலை வந்து சந்திக்கும்படி தகவல் அனுப்பப்பட்டது.

அஜீத்தின் பெற்ருேர் வந்து, தகவல் தெரிந்து, பீஸ் பணம் அனைத்தையும் திரும்பப் பெற்றுச் சென்ருர்கள். ஆனுல் பிரபுவின் பெற்ருேர் பள்ளிக்கு வரவே இல்லை. எனவே கட்டணத் தொகை அனைத்தையும் பெற்றுச் செல்லுங்கள் என்று மறுபடியும் செய்தி அனுப்பி வைத்தோம். அவர்கள் பணத்தை இதுவரை வாங்க வரவில்லை. இதுதான் நடந்தது. மற்றபடி, மனக் குமுறலில் காட்டப்பட்டுள்ள கற்பனைக் காரணங்களை நாங்கள் எண்ணிப் பார்க்கவில்லை. அந்த அவசியமும் எங்களுக்கு இல்லை.

சென்னை-1 சாலமோன் சுந்தரராஜ்
பிரின்ஸிபால்



கமல் அம்பிகா சிரிப்புப் போட்டி

கமல் அம்பிகாவைச் சுமந்த படத்தை வெளியிட்டுச் சிரிப்புப் போட்டி வைத்தாலும் வைத்தோம். தபால்காரரை மூட்டை மூட்டையாகக் கடிதங்களைச் சுமக்க வைத்துவிட்டார்கள் வாசகர்கள்.

அத்தனை கடிதங்களையும் பரிசீலனை செய்து ஆறு சிரிப்புத் துணுக்குகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

ஆறு சிரிப்புத் துணுக்குகளும் இங்கே இடம் பெற்றுள்ளன.

ஆறு பேரில் கமலைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்ற சிறந்த சிரிப்புத் துணுக்கு எழுதியவர் யார்?

அவரைக் கமலஹாசனே தேர்ந்தெடுத்து அடுத்த வாரம் அறிவிப்பார்.

- திரைஞானி

அம்பிகா: உங்க முதுகு வலிக்கு யானையைத்தான் ஏறி மிதிக்கச் சொல்லணும்.
கமல்: யானை மிதிச்சது பற்றுமல்தானே உன்னை மிதிக்கச் சொன்னேன்.

—நாகுவேலன், மதுரை-16

அம்பிகா: உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன கமல்?
கமல்: உன்னை எப்படியாவது என் முதுகில் இருந்து கீழே இறக்குவதுதான்.

வி. ராஜசேகரன்; மதுரை-3

அம்பிகா: கமல்! என்னை இரண்டு பேர் கல்யாணம் செய்து கொள்ளும்படி தினமும் வற்புறுத்துகிறார்கள்.
கமல்: யார் அது?
அம்பிகா: என்னுடைய அப்பாவும் அம்மாவும்தான்.

எஸ். நடராஜன், சென்னை-90

அம்பிகா: என்ன கமல்! பலமா யோசிக்கிறீங்க?
கமல்: ஒண்ணுமில்லே. உன்னை இரண்டு நிமிடம் சுமப்பதற்கே கஷ்டமா இருக்கே உங்கம்மா உன்னைப் பத்து மாதம் எப்படித்தான் சுமந்தாங்களோ?

எஸ். சந்திரசேகர், பம்பாய்-58

அம்பிகா: போன பிறவியிலே நாம ரெண்டு பேரும் எப்படிப் பொறந்திருப்போம்னு நினைக்கிறீங்க?
கமல்: இதுலே சந்தேகம் வேறயா? நிச்சயம் நான் கழுதையாகவும் நீ அழுக்கு மூட்டையாகவும்தான் பொறந்திருப்போம்.

கே. என். செல்வரத்தினம், வடகாடு

கமல்: டைரக்டர் என் மேல் கழுதையல்லவா ஏறி நிற்கப் போவதாகக் கூறினார். அது நீதானா?
அம்பிகா: என்னையும் குட்டிச் சுவர் மேலே அல்லவா நிற்கச் சொன்னார். அது நீங்கதானா?

நெ. இராமகிருஷ்ணன், திருநெல்வேலி


சிந்தனைக்குச் சில!

தூய்மையான பெண்கள் ஆண்களைவிட வலிமை உள்ளவர்கள். பெண்களுக்கு உண்மையான ஆபரணம் அவளது தூய்மையான நடத்தையே.

—மகாத்மா காந்தி

மனிதனையும் அவன் செயல்களையும் அடக்கியாள்வது ஜடசக்தி யன்று; ஆன்ம சக்தியே. —மாக்ஸிம் கார்க்கி

இளைஞர்களே! நாட்டுக்கு நீங்கள் புரிய வேண்டிய மகத்தான பணி இருக்கிறது. மகத்தான ஒழுக்கப்புரட்சி உங்களால் செய்யப்பட வேண்டுமென்று தேசம் காத்திருக்கிறது. பேராசையையும், மோசடியையும் மக்கள் வெறுக்கச் செய்ய வேண்டும். அந்தப் புரட்சிக்கு நீங்கள்தான் தலைவர்களாக இருந்து நடத்த வேண்டும். அதை அரசியலார் நடத்த முடியாது. —ராஜாஜி



ரோஜா

ஸ்ரீ வேணுகோபாலன்

சென்ற இதழ் தொடர்ச்சி)

மறுநாள் காலே.

இருள் இன்னும் கலேயவில்லே. மெள்ள ஸரு ஸரு என்று படிகளில் சப்தம்.

'பால்' என்ற குரல்! அது அவள் குரல் தான். எழுந்தேன். நான் போவதற்குள் அவள் போய் விட்டாள். வாசலில் வந்து பார்த்தேன்.

மாலே, சன்னலில் வந்து நிற்க, இமே என் கண்கள் பாய்ந்தன. அவள் நின்றிருந்தாள். ஒரு ரோஜாப்பதியனே வைத்தவாறு என்னேப் பார்த்தாள்.

சுவர்க்கா முன்பு பாலேவைக்கும் அதே இடத்தில்தான் இவளும் வைத்திருக்கிறாள்.

ஒரு முழு நிமிடம் எனக்கு எதுவும் ஓட வில்லே. இது சொப்பனமா நிஜமா? கடந்த காலத்தில் நடந்தது ஒவ்வொன்றும் மீண்டும் இப்போது எப்படி அதே துல்லியத்தோடு நடக்கிறது?

சுவர்க்காதான் முன்பு இதே போல் தோட்டத்தில் ரோஜாப் பதியனே வைத்த வாறு என்னேப் பார்த்தாள். அந்தப் பதியனே நான் அவளுக்காகக் கொண்டு வந்தேன். அவள் கேட்டிருந்தாள். அதைப் பார்த்து அவள் துள்ளிய துள்ளல் எனக்கு இன்னும் நினேவு இருக்கிறது.

அந்தப் பெண்ணென்னே அதேபோல் செய்ய என் மனம் மேலும் திடுக்கிட்டது.

கட்டிலில் இருக்க முடியவில்லே. அந்தக் கணத்தில் நிகழ் காலத்தைக் கிழித்துப் பழைமையில் புகுந்து விட விரும்பினேன்.

இரவில் மீண்டும் மீண்டும் அதே நினேவை நினேக்க என் தலே முழுவதும் கொதித்து ஜுரமாகியது.


என்னுல் பொறுக்க முடியாத நிலே வந்த தும் எழுந்தேன். மாடிப் படிகளில் மெள்ள இறங்கினேன். இரவு பதினென்று இருக்கும். ஒரே இருட்டு. கீழே வந்ததும் அறைகளேப் பார்த்தேன்.

அவள் இருக்கும் இடம் நோக்கி நடந் தேன். சின்னக் கட்டில். அதன் முன் மண்டி யிட்டேன்.

மனமும் நெஞ்சும் விம்மிக்கொண்டு வர, 'சுவர்க்கா' என்றேன். மெல்ல அவள்மீது கை வைத்தேன்.

திடுக்கிட்டு எழுந்தாள். 'ஹங்' என்று இனமில்லாச் சப்தத்தை எழுப்ப முயன்ற போது, அவள் வாயை மூடினேன்.

''சுவர்க்கா, நான்தான் சுவர்க்கா'' என் றேன்.





என் வேட்கை, ஆவல், ஆர்வம் எல்லா மாகப் பொங்க அவளேப் பார்த்தேன்.

நீளமான முகம்.

இரு திண்டசண்யக் கண்கள்.

இரு ரோஜா உதடுகள்.

நன்றுகப் பார்த்தேன். தேடித் தேடிப் பார்த்தேன். என் அந்தரங்க ஆழத்தில் ஒரு நாடி தெறித்தது. என் சுவர்க்கா வின் ஜாடைதான். ஆனல் அவளல்ல! அது நிச்சயம் தெரிகிறது. பிரமிக்கிறேன். துவள் கிறேன். மனத்துள் விசிக்கிறேன்.

''அவ....'' என்று இழுத்தாள்.

''சொல்லு.''

''நீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்தா!''

''ம்ம்ம்...''

''நாலு ரோட்லியே நின்னு!''

''ம்ம்...''

''நின்னவ ஒரு நாள் வீட்டுக்குத் திரும் பவே இல்லே.''

''ம்....''

''மாமா போய் இழுத்து வந்தார்.''

''.....''

''சித்தப் பிரமையிலேயே இருந்தா. தினம் தினம் அங்கே போய் நின்னு.''

''......''

''அப்புறம் அங்கேயே ஒரு நாள் செத்துக் கிடந்தா.''

பொறுக்கவில்லே. என் கண்ணீர் குதித்து வெளியே வந்து ஆடையை மூழ்கியது.

''கிராமத்திலே ஒரு பெண் மனசை எழுப்பி விட்டுட்டா சங்கடம். மனசை அவளாக மாத்தித் திருப்பறதுக்கு எதுவும் கிடை யாது. நினேச்சதையே நினேச்சு பிரமையாகி அழிஞ்சு போவா. நீங்க பட்டணத்திலே இருக்கிறவாளுக்கு எத்தனேயோ வழியிலே மனம் மாத்தலாம்...பாவம்...சுவர்க்கா!..''

அவள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் வாளாக என்னே ஊடுருவின.

எனக்கும்சின்ன வயசு. துணிச்சல் இல்லாத வாழ்க்கை. ஆனால் இன்று துணிச்சல் தோன்றி இங்கே வந்து பார்த்தால்.... அதற்குள் ஒரு ஈடு செய்ய இயலாத நஷ்டம் நடந்து விட்டது.

''நான் அவள் அக்கா பெண். ரகுவீரா என் பையன். என்னுடைய 'அவர்' இறந்து விட்டார். மாமா கிட்டே கஷ்டப்படறோம். அழாதீங்க. நான் கொஞ்ச நேரத்துக்கு உங்களுக்கு அவளை ஞாபகப்படுத்தியிருந்தா அது என் தப்பு! எங்களுக்குள்ளே அபூர்வ உருவ ஒற்றுமை.''

அவள் வார்த்தை ரீங்கரித்து நெஞ்சத்துள் செல்லச் செல்ல, கண் மட்டும் நீர் உகுத்துக் கொண்டிருந்தது.

''நான் கடந்து வந்துட்டீங்க! உங்கள் உணர்வுகளைத் தூண்டியதற்காக மன்னியுங்க. நான் வரேன்... வரேன்... இங்கே இருக்க இருக்க என் வாழ்க்கையில் இழப்புத்தான் எனக்குப் பெரிதாகத் தோணிக் கொண்டே போகும். வரேன்.'

எழுந்தாள்.

அதிகாலையில் பஸ். அதைப் பிடிக்க மூன்று மைல் செல்ல வேண்டும்.

முந்திய மாலையே சுவாதியிடம் கூறிவிட்டேன். மறுநாள் அதிகாலை இருள் கரையு முன் புறப்பட்டபோது உள்ளே பார்த்தேன். சந்திரநாத் என்னை வழியனுப்ப வந்தார். அவளைத் தேடினேன் கிடைக்கவில்லை. 'சுவாதியிடம் சொல்லுங்கள்' என்று கூறிப் புறப்பட்டேன்.

அரை விடுகிறேன். மழையாகக் கண் வழிகிறது. சுவர்க்கா! எனக்கு அப்போது திறன் இல்லை. ஒரு கொங்கணிப் பெண்ணை வீட்டுக்கு அழைத்துப் போகும் துணிச்சல் எனக்கு இல்லை. இப்போது... இப்போது... என் வயதான தாயார், 'யாரானு என்ன? ஒரு கன்னிப் பெண்ணை அழைத்து வந்தா உனக்குக் கல்யாணம்' என்று சொல்லி விட்டாள். ஆனால் சுவர்க்கா என்ன பயன்? நீ இல்லையே'

உணர்வும் சோகமும் மாறி மாறி என்னை அபிஷேகிக்க, பிரமை பிடித்தது போல் நடக்கிறேன்.

மேற்கு மலைத் தொடர் என்னோடேயே நடந்து வருகிறது.

அந்த ஒற்றையடிப் பாதை என் முன்னால் ஓட்டமாகப் போகிறது.

தனிமையும்நானுமாகநடந்து செல்கிறோம்.

ஒரு மைல் நடந்திருப்பேன். இனி கிராமம் மறைந்துவிடும்.

என்கண்கள்இன்னும் சமுத்திரங்கள் தான். என் பார்வை மறைக்க, இதோ கண்ணீரில் ஊடுருவித் தெரிவது யார்?

சுவர்க்காவா?

கண்களை அவசரம் அவசரமாகத் துடைத்துப் பார்க்க... யார்? யார் அது?

சுவர்க்கவா? இல்லை! சுவாதி!

சுவாதிதான் ஒரு தீன அபலையாய் நிற்கிறாள்.

அவள் கையைப் பிடித்து ரகுவீரா பரந்த விழிகளோடு என்னையும் எதிர்காலத்தையும் பார்த்து நிற்கிறான்.

பிரமித்து என் கண்கள் சுவாதி மீது விழ, அவளுடைய கண்கள் நட்சத்திர சுவாதியாக என்னைப் பார்க்கிறது. சின்னக் கனவு ஒன்று அதில் ஜனித்திருக்கிறது. என் கண்களை அவள் தேடுகிறாள். அதில் அவள் ஒரு விடையை, ஒரு முடிவை, ஒரு விடுதலையைத் தேடுகிறாள்.


இமைகள் மீண்டும் என் கண்களை மூடுகின்றன. என் சமூகத்தின் குரல் ''யாராவது கன்னிப் பெண்ணை அழைத்து வந்தா...'' என்று கேட்கிறது.

திரும்பிப் பார்க்கிறேன்.

நான் நிற்பது நாற்சாலை!

எங்கே திரும்புவேன்?

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

வளரும் குழந்தை-களுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச் சத்துக்கள்—அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர்கள், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.


இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

''குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி''
50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக:
தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

GLC-6-2012 TM

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

சரணம் கணேசா!



ஐயோ, அம்மா! வயிற்றின் எரிச்சல் தாங்க முடியவில்லையே ... ஹா... ஹா...
உன் தந்தை விஷம் உண்ட போது தடுத்த நான் நீ உருண்டைப் பைச் சாப்பிடும் போது தடுக்காமல் இந்த அவதிக்கு உன்னை ஆளாக்கி விட்டேனே.
வருந்தாதே அம்மா. நிறைய அருகம் புல்லைப் பறித்து வரச் செய்து என் மீது தூவுங்கள். தாபம் முழுதும் அடங்கும்.
அப்படியே செய்கிறேன் கண்ணா.
அப்பாடா! போதும் போதும். தாபம் நீங்கிற்று. குளிர்ந்தேன். உள்ளே சென்ற அனலன் அணைந்தே போனான்...
ஆனாலும் பூதகணங்கள் நிறுத்தவில்லை.
உஷ்ணம் அடங்கி, சீதளம் அதிகமாகி விட்டது. ஆகவே வெள்ளருக்கு இலை, பூ, வன்னி இலை ஆகிய வற்றைக் கொண்டு வந்து என் மீது கொட்டுங்கள்.


கதை: ரா. கணபதி
படக்கதை அமைப்பு: வாண்டுமாமா
சித்திரம்: வினு
இனி அருகம்புல், எருக்கு, வன்னி ஆகியவை என் அர்ச்சனைக்கு மிகவும் உகந்தவையாகும்.
பிரம்மதேவரே, ஏதோ ஒரு மாதிரியாகப் பார்க்கிறீரே? தாய்ச்சலுக்கும் சீதளத்துக்கும் ஆளாகும் சாமானியப் பிறவி நானே என்று நினைக்கிறீர் இல்லையா?
இதோ பாரும் என்னுடைய இன்னொரு விளையாட்டை....!
விநாயகரால் விழுங்கப்பட்ட பிரம்மா கணேசனின் வயிற்றினுள் கண்ட காட்சிகள் மலைப்பூட்டுவனவாக இருந்தன.
அத்தி மரத்தில் பழங்கள் என்றல்லவா எண்ணினேன். இவ்வொரு பழமும் ஓர் உலகமாகவல்லவா காட்சியளிக்கிறது.
ஒரு பழத்தை உற்றுப் பார்த்தார் பிரம்மா.
அடேயப்பா! இதில் கடல், வானம், அதோ கைலாசமும் கூடத் தெரிகிறதே. அங்கு ஒரு விநாயகர். ஐயோ, அவர் வயிற்றுக்குள் ஒரு பிரம்மா வேறு.
தொடரும்...

புஷ்பாவிடம் கொஞ்சம் இரக்கம்

இருட்டத் தொடங்குகிற நேரம்....

இரவு டிபனை ஹோட்டலில் முடித்துக் கொள்ள... அடுத்த தெருவில் இருக்கும் ஹோட்டலை நோக்கி இதமான காற்றின் இனிமையை ரசித்தபடி சற்று மெதுவாகவே நடந்து கொண்டிருக்கிறேன்.

என்னைத் தாண்டி ஒரு ஸ்கூட்டர் செல்கிறது. பின்னால் நன்றாக உடுத்திக் கொண்டு நல்ல அழகில்... நல்ல நிறத்தில்... ஒருத்தி... முகத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் ரவிக்கைக்கும் புடவைக் கட்டுக்கும் இடையே ஒரு முழ இடைவெளி... அதை நன்றாகப் பார்க்க முடிகிறது. அந்த இலேசான இடைவெளிச்சத்திலும் பளிச்சென்று தெரிகிறதே...

ஸ்கூட்டர் ஏன் நிற்கிறது? அவள் ஏன் இறங்குகிறாள்?

நான் அவர்களை நோக்கிச் சற்று வேகமாகவே நடக்கிறேன்.

''சரி... கிளம்பலாம்... நடு ரோட்டில் நின்றுகொண்டு....''

''நீ வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பேசுவாய்... நான் உன்னை ஜாலியாக ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு 'பீச்'சிற்குப் போகணுமா?.... இன்றைக்கு பீச் கிடையாது. திரும்பி வீட்டுக்கு நடந்து போ. நான் கிளம்பறேன்.''

''எவ்வளவு தூரம் நடக்கிறது?''

''பஸ்ஸில் போ.''

''ஏன் இப்படி மடத்தனமாகப் பேசுகிறீர்கள்? சண்டை போட நடு ரோடுதானா கிடைத்தது? இப்போ வண்டியை எடுக்கப் போகிறீர்களா இல்லையா?''

''முடியாது. உன்னை இங்கேயே உதறி விட்டுப் போகப் போகிறேன். நீ தவித்துத் தடுமாறித் திணறி வீடு வந்து சேரணும். அதுதான் உன் வாய்க் கொழுப்பிற்குச் சரியான தண்டனை.''

''அப்படி மட்டும் நீங்க விட்டுட்டுப் போங்கள்... நான் ஏன் உங்க வீட்டிற்குத் திரும்பி வரேன். நேரே பஸ்ஸைப் பிடித்துத்தாம்பரம் போறேன்.''

''ஓ....அப்பன்வீட்டுக்கா?''

''ஏன் போக மாட்டேன் என்று நினைக்கிறீர்களா? இவ்வளவு தூரம் நடு ரோட்டில் நிறுத்தி வைத்து நீங்கள் என்னைத் திட்டிக் கேவலப் படுத்திய பிறகு நான் திரும்பவும் உங்களுடன் வருவேன் என்று நினைக்கிறீர்களா? தனியா அப்பன் வீட்டுக்கு என்ன... அமெரிக்காவுக்குக் கூடப் போவேன். அந்தத் தைரியம் இந்த புஷ்பாவுக்கு இருக்கு.''

ஓ... பெயர் புஷ்பாவா! இந்தப் புஷ்பம் இவனிடம் என்ன பாடு படுகிறது!

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. 'பளார்' என்கிற சப்தம் என் காதில் 'சுளீர்' என்று பாய்கிறது. அடுத்து ஸ்கூட்டரில் பறக்கிறான் அவன்.

அவள் அடிபட்ட அவமானத்தையும்... பொங்கி வரும் விழி நீரையும் அடக்கியபடி நின்று கொண்டிருக்கிறாள். அவள் நிலை ரொம்ப ரொம்பப் பரிதாபத்துக்குரியது. இருட்டுகிற நேரத்தில் அழகான வயதுப் பெண் தனியே நின்று கொண்டிருக்கிறாள்.

நான் நல்ல மனத்துடன் அவளை நெருங்குகிறேன்.

அவள் விம்முகிறாள்.

''அழாதீர்கள். ரோட்டில் நடப்பவர்கள் உங்களை வேடிக்கையாய்ப் பார்த்து விட்டுப் போகிறார்கள். இப்போ என்ன செய்யப் போகிறீர்கள்?''

''புரியலை ஸார்... திரும்ப அவர் வீட்டுக்குப் போகத் தன்மானம் இடம் தரலை.''

''அப்போ தாம்பரம் போங்கள்... பஸ் ஏற்றி விடுகிறேன்.''



லீலா கிருஷ்ணன்

''ரொம்ப நன்றி ஸார்... ஆனால் இந்த நேரத்தில் தாம்பரம் போய் என்ன செய்கிறது?''

''ஏன் தாம்பரத்தில்தானே உங்க ஃபாதர் இருக்கிறார்?''

''தாம்பரத்தில் இறங்கி மூணுமைல் நடக்கணும். பக்கத்துக் கிராமம் ஒன்றில் எங்கள் வீடு. இந்த ராத்திரி நேரத்தில் அந்த இருட்டுப்பாதையில்... நான் எப்படித் தனியாக நடந்து போவேன்? அதை நினைத்துத்தான் தவித்துக் கொண்டிருக்கிறேன்.''


அவள் கலவரத்தோடு என்னைப் பார்க்கிறாள்.

''ஸார்... உங்களுக்கு ரொம்ப இளகின மனம். அதனால்தான் துணிந்து கேட்கிறேன். என்னை உங்கள் வீட்டுக்குக் கூட்டிப் போங்கள். விஷயத்தை உங்கள் மனைவியிடம் விளக்கமாய்ச் சொல்லுங்கள். பெண்ணுக்குப் பெண் இரக்கம் காட்ட மாட்டாங்களா? இன்றைய இரவைக் கழிக்க எனக்கு ஒரு பாதுகாப்பான இடம் தேவை.''

அவளது விழிக் குளங்களில் நீர் ததும்பிப் பின் வழிந்தது.

''ஸாரி... என் மனைவி ஊரில் இல்லே. அதனால்தான் ஹோட்டலில் டிபன் சாப்பிடக் கிளம்பி இப்படி ஒரு சங்கடத்தில் மாட்டிக் கொண்டு நிற்கிறேன்.''

''ஸார், பிளீஸ்! உங்களை நான் நம்புகிறேன். உங்கள் வீட்டு வாசற்படியில் கிடந்து இந்த இரவைக் கழித்து விட்டு விடிந்ததும் கிளம்பிப் போய் விடுகிறேன். எனக்கு உதவுவீர்களா ஸார். உங்கள் தங்கைக்கு இப்படி ஒரு கதி என்றால் விட்டு விடுவீர்களா?''



''வா, போகலாம்.''

''எங்கே?''

''என் வீட்டுக்குத்தான். முன் வராந்தாவில் படுத்திரு. காலையில் பால்காரன் வருவான். வேலைக்காரி வருவாள்.... இவர்கள் எல்லாம் வருமுன் நீ எழுந்து போய்விட வேண்டும். வந்த சுவடு தெரியக் கூடாது.''

''ரொம்ப நன்றி ஸார். இந்த உதவியை நான் என்றைக்குமே மறக்க மாட்டேன்'' என்றபடி பையுடன் நடக்கிறாள்.

''அதென்ன கையில் பை?''

''ஸ்கூட்டரில் இருந்தபோது மடியில் இருந்த பை. கிளம்பும்போது எங்கள் பிளான்.... பீச்சில் ஜாலியாகப் பொழுதைக் கழிப்பது. அங்கேயே டிபன் சாப்பிடுவது என்று. வீட்டில் இட்லி எல்லாம் தயார் செய்து கொண்டு வந்தேன்.''

''அதனால் என்ன?... பீச் என்று நினைத்துக் கொண்டு எங்கள் வீட்டு வராந்தாவில் வைத்துச் சாப்பிடு என்கிறேன்.''

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறோம். தோட்டத்தைக் கடந்து பூட்டியிருந்த வீட்டின் கதவைத் திறக்கிறேன். அவள் வராந்தாவிலேயே நின்று விடுகிறாள். ''இந்த இடம் போதும் ஸார். உங்களுக்குச் சிரமம் கொடுக்காமல் விடிந்ததும் கிளம்பிப் போய்விடுகிறேன்.''

நான் உள்ளே சென்று கதவை உட்புறமாகத் தாழிட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் பசி வயிற்றைக் கிள்ளுவது தெரிகிறது. மறுபடியும் சட்டையை மாட்டிக் கொண்டு கதவைத் திறந்து வெளியே வருகிறேன்.

''என்ன ஸார்'' — அவள் பதறிப்போய் நிற்கிறாள்.

''ஒன்றுமில்லே. நான் ஹோட்டல் வரை போய் டிபன் சாப்பிட்டு விட்டுச் சீக்கிரமாய் வந்து விடுகிறேன். இங்கேயே இரு....''


''தனியாக இருக்கப் பயமாக இருக்கே ஸார்... இந்தப் பையில் நிறைய இட்லி இருக்கு. நீங்கள் இஷ்டப்பட்டால் இதையே சாப்பிடலாமே...''

''வேறு வழி... சாப்பிடுகிறேன். இரு. ப்ளேட் கொண்டு வருகிறேன். மூன்று இட்லிகள் மட்டும் வை போதும்...'' உள்ளே சென்ற நான் அடுத்த நிமிடமே 'பிளேட்' டுடன் வருகிறேன்.

அவள் பக்குவமாய்த் தட்டில் இட்லிகளைச் சட்னியுடன் வைத்து என் முன் நீட்டுகிறாள். அதை வாங்கிக் கொண்டு உள்ளே போய்க் கதவைத் தாழிட்டுக் கொள்கிறேன்.

இரவு மணி பத்தைத் தாண்டி விடுகிறது. மறக்காமல் ஒரு ஃபோன் பேசி விட்டு. ஒரு வேளை எழுந்து போயிருப்பாளோ என்கிற நினைவு வரவே எழுந்து ஜன்னல் வழியாகப் பார்க்கிறேன். டிபன் பையைத் தலைக்கு வைத்துக் கொண்டு தன்னை அட்டையாய்ச் சுருட்டிக் கொண்டு படுத்திருக்கிறாள்.

நான் திரும்பவும் படுக்கையில் வந்து சாய்கிறேன். தூக்கம் கண்களைச்



தூத்துக்குடியிலுள்ள பனிமய மாதா ஆலயம் 400 ஆண்டு-களுக்கு முன் நிறுவப் பெற்றது. ரோமன் கத்தோலிக்கர்களால் உருவாக்கப் பெற்ற இந்த ஆலயத்தை தூத்துக்குடி மக்கள் பெரிய கோயில் என்றே அழைக்கிறார்கள்.

மணிலாவிலிருந்து சான்டா க்ரூஸ் என்ற கப்பலில் அனுப்பப்பட்ட பனிமய மாதா திருவுருவச் சிலையை பல்வேறு இன்னல்களுக்கிடையே காப்பாற்றி தூத்துக்குடியில் ஆலய நிர்மாணம் செய்தனர்.

திருவிழா ஆண்டுதோறும் ஆகஸ்ட் 5ம் தேதி வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

1806ல் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் 60 அடி உயரத்தில் தயாரிக்கப்பட்ட இந்த தங்கத்தேர் 12 வது முறையாக இந்த ஆண்டும் பனிமய மாதாவை தாங்கிக் கொண்டு பவனி வந்தது.

—என். எஸ். முத்துகிருஷ்ணராஜா

கத்துகிறது. வராந்தாவில் சத்தம். அவள் எதையோ விரட்டுவது தெரிகிறது. மணியைப் பார்க்கிறேன். பதினொன்று பத்து.

''ஸார்.....''

''என்ன?'' என்றபடி கதவைத் திறந்து விட்டைப் போடுகிறேன். ''பெருச்சாளி ஸார்... பன்றிக் குட்டி அளவில் என்னவோ சுற்றிச் சுற்றி வருகிறது. கடிச்சுடுமோன்னு பயமா இருக்கு.'' முகம் வெளிரப்பரிதாபமாக எழுந்து நிற்கிறாள். நனைந்த கோழிக் குஞ்சாய்ப் பயத்தில் வெட வெடக்கிறாள்.

தயக்கத்துடன் வேறு வழி தோன்றாது கதவைத் திறந்து விடுகிறேன். சிறிய சாப்பாட்டு அறையின் ஒரு மூலையில் சுருண்டு கொள்கிறாள்.

மீண்டும் படுக்கைக்கு வருகிறேன்.

விடிந்தது கூடத் தெரியாமல் என்னை மறந்து சூழ்நிலையே மறந்து தூங்கி இருக்கிறேன்.

வேலைக்காரி வீட்டினுள் வந்து கூப்பாடு போடுகிறாள். ''இப்படியா வீட்டைத் திறந்து போட்டு விட்டுத் தூங்குவது? அம்மா பகல் நேரத்தில் கூட வாசல் கதவைப் பூட்டி வைப்பார்கள்'' என்னைப் பார்த்துக் கத்தி விட்டு உள்ளே போனவள் பெரிதாக அலறுகிறாள்.

''அய்யா... சீக்கிரம் வாங்க... அம்மா பீரோ எல்லாம் திறந்து கிடக்கு. புடவைகள் எல்லாம் தாறுமாறா இறைஞ்சு கிடக்கு....''

ரங்கம்மாவின் குரல் என்னை ஒரே உலுப்பாக உலுப்புகிறது. தூக்கத்தை உதறிவிட்டு ஓடிவந்தவன் திடுக்கிட்டு நிற்கிறேன். என் மனைவியின் முப்பது பவுனுக்கு மேல் மதிப்புள்ள நகைகள். என்னை மணிக் கணக்கில் ஜவுளிக் கடையில் காக்க வைத்து அவள் பார்த்துப் பார்த்துப் பொறுக்கி எடுத்த அத்தனை பட்டுப் புடவைகள்... எல்லாம் எங்கே?

எல்லாம் நான் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது. ஆனால் சரியான நேரத்தில் நான் எப்படித் தூங்கினேன்? புரிகிறது. டிபன் கொடுத்தாளே அப்போது சட்னியுடன் தூக்க மருந்தைக் கலந்திருக்கிறாள்.


''அய்யோ எல்லாம் போச்சே... அம்மா வந்து கேட்டால் என்ன பதில் சொல்றது. கலி ரொம்பத்தான் முத்திப் போச்சு... இல்லேன்னு போலீஸ் அதிகாரி வீட்டிலேயே இப்படித் திருட்டுப் போகுமா? வேலைக்காரி பெரிதாகப் புலம்பவே... அவளை ஒரு பார்வையில் அடக்கினேன்.

போன் அலறுகிறது... எடுக்கிறேன்.

''ஸார்... நீங்க சொன்னபடி உங்க வீட்டுக்கு வெளியே சுவர் ஓரமாகக் காத்திருந்தோம். ஆள் சரியா மூணு மணி அளவில் வெளியே வரும்போது 'கப்' என்று பிடித்து விட்டோம். அந்தப் பெண் லாக்-அப்பில் இருக்கிறாள். அங்கிருந்து திருடப் பட்ட பொருள்கள் பத்திரமாக இருக்கின்றன!''

''ரொம்ப நல்லது. இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் அங்கு வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் போனை வைக்கிறேன். ஏதாவது நாடகமாடி வீட்டினுள் புகுந்து திருடும் ஜோடியைப் பிடித்து விட்ட பெருமிதம் எனக்கு.

நல்லாசி பெறும் நால்வர்



✕ ஆர். சீனிவாசன்



✕ பிரதிபாராஜகோபாலன்



✕ ஆர். கோபிநாத்



✕ ஆர்வி. சம்பத்

'போடு பத்திரிகை' என்ற கட்டுரையில் அமரர் கல்கி கதைகளை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுபற்றி வேடிக்கையாய் எச்சரிக்கை செய்கிறார்:

''கதைகளில் வரும் கதாநாயகர்கள், கதாநாயகிகளின் பெயர்களை ஜாக்கிரதையாகச் சோதனை செய்ய வேண்டும். இந்தச் சோதனை செய்யாத காரணத்தால் ஒரு பத்திரிகாசிரியர் அடைந்த கஷ்டத்தைக் கேள்! எட்டுச் சிறு கதைகள் அந்த இதழில் வெளியாகியிருந்தன. அவை ஒவ்வொன்றிலும் கமலாதான் கதாநாயகியாக இருந்தாள். அன்றிரவு அவருடைய தூக்கத்தில் மாமியாருடன் மயிரைப் பிடித்துக்கொண்டு சண்டையிட்ட கமலாவும், குழந்தையைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரை விட்ட கமலாவும், சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்த கமலாவும் விவாக ரத்துச் செய்து பெண் குலத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டிய கமலாவும், மாதர் சங்கத்தின் காரியதரிசியான வாயாடிக் கமலாவும் பிச்சைக்காரனை விளக்குமாற்றால் அடித்துத் துரத்திய கமலாவும், காதல் — கற்பரசி கமலாவும் தாசி கமலாவும் மாறி மாறி கனவிலே வந்து அவரைப் படுத்திய பாடு அந்தக் கமலாசினியின் பதியாகிய கருணாகரக் கடவுளுக்கே வெளிச்சம்!'' (ஆனந்தவிகடன் 8–4–34)

அமரர் கல்கி நினைவுச் சிறு கதைப் போட்டிக்கு வந்த சிறு கதைகளில் இந்த விதமான குழப்பங்கள் நீதிபதிகளுக்கு ஏற்படவில்லை! ஆனால் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்க அவர்கள் ரொம்பவும் சிரமப்பட்டுப் போனார்கள் என்பதென்னவோ வாஸ்தவம்தான். ஒன்றோடொன்று தரத்தில் போட்டியிட்ட, கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் போல் திரண்டு கடைசி மறு பரிசீலனைக்கு வந்து சேர்ந்த சுமார் பத்துக் கதைகளுள் பரிசுக்குரிய நான்கினைத் தேர்வு செய்ய நீண்ட நேர விவாதங்கள் நடந்தன.

● ● ●

'ஊமைச் சனங்களடி' முதல் பரிசுச் சிறு கதையைப் படைத்துள்ள ஆர். சீனிவாசன் திருச்சி மாவட்டத்தில் பிறந்து, தஞ்சையில் வளர்ந்து, நெல்லையில் வங்கியொன்றில் பணி புரிபவர். பணிபுரிந்து கொண்டே இவர் மதுரை பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி இளங்கலை ஆங்கில இலக்கியம் மூன்றும் ஆண்டு படிப்பவர்!

திரு சீனிவாசன் கதை உலகுக்குள் புகுந்தது 6.8.78 ஆனந்த விகடன்' இதழில் 'நரசிம்மம்' என்ற சிறுகதை வாயிலாக. இரண்டு ஆண்டு துறவறம். பிறகு வாஸன் சிறு கதைப் போட்டியில் இவரது நீர்க்கோலம் மூன்றாவது பரிசு பெற்றது. இவரது மூன்றாவது சிறு கதை 'ஊமைச் சனங்களடி' கல்கி சிறு கதைப் போட்டியில் முதல் பரிசு பெறுகிறது! இந்தக் கதை இவர் பின்னால் எழுத உத்தேசித்திருக்கும்

நாவலில் இடம்பெறப் போகும் ஓர் அத்தியாயமாம்!

• • •

'பொறம்போக்கு' — இரண்டாம் பரிசுக் கதையை எழுதிய 'பிரதிபா ராஜகோபாலன் இதுவரை 250 சிறுகதைகளும் எட்டு நாவல்களும் எழுதிப் பண்பட்டவர். ஆறு சிறுகதைத் தொகுப்புக்கள், ஐந்து நாவல்கள், 'காந்தங்கள்' என்ற கவிதைத் தொகுப்பு எல்லாம் புத்தக உருவில் வந்துள்ளன.

கோவைக்கு அருகில் உள்ள உப்பிலிபாளையம் என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்த பிரதிபா ராஜகோபாலன் எழுதிய முதல் கதை 'செடியும் கனியும்' அச்சேறாத துர்ப்பாக்கியம் கொண்டது! அதனால் ஏழு வருஷ அஞ்ஞாதவாசம். மீண்டும் 1967ல் முழு மூச்சுடன் எழுதத் தொடங்கிப் பல சாதனைகளைக் கண்டார்! இதுவரை அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இவரது கதைகள் பிரசுரத்துக்கு உரியனவாகவே அமைந்தன. இந்தத் தடவை இரண்டாம் பரிசு இவரை வந்தடைந்துள்ளது!

இவரது இலக்கியச் சாதனைகள்: 'கலைமகள் சிறுகதைப் போட்டி முதல் பரிசு; அமுதசுரபி சிறுகதைப் போட்டி மூன்றும் பரிசு; ஆனந்தவிகடன் பொன்விழா சிறுகதைப் போட்டி இரண்டாம் பரிசு. 'ஒரு தேவதையின் பகல் நேரங்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பு தமிழக அரசின் பரிசைப் பெற்றிருக்கிறது. 45 பத்திரிகைகளில் வெளிவந்துள்ள இவரது கதைகளையும் நாவல்களையும் தமிழ்ப் பேராசிரியர் மா. நடராசன் பி.எச்.டி. பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்ய முன் வந்திருப்பது இவருக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

• • •

மூன்றும் பரிசு பெற்ற ஆர். கோபிநாத ஆத்ரேயன் தம் வாழ்க்கைக் குறிப்பைச் சமர்ப்பிக்கையில் தமக்கு நகைச்சுவையாகவும் எழுதவரும் என நிரூபிக்கிறார்:

''என் இயற்பெயர் ஆர். கோபிநாத். 2–5–62ல் என் தவப்பயனால் திரு இராமமூர்த்தி — இந்திராணி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தேன்! சின்ன வயதிலேயே நல்லா படம் போடுவேன்! (நம்புங்கள்!)

''சௌராஷ்டிர நடுநிலைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியும் சிறுமலர் உயர்நிலை (இப்போ மேல் நிலை) பள்ளியில் எஸ். எஸ். எல். சி.யும் முடித்தேன். (அப்பாடா! ஸ்கூலுக்கு நல்ல பெயர் வரும் நல்ல காரியம் பண்ணியாகி விட்டது!) திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி.எஸ்.ஸி. (ஜுவாலஜி) படித்தேன். மதுரை காமராசர் பல்கலைக் கழக முதுகலை (எம்.ஏ.) தமிழிலக்கியம் முடித்திருக்கிறேன்.

''தொழில்: படித்தது எம். ஏ. ஆனாலும் பார்ப்பது விவசாயம்! (கட்டாயத்தால் அல்ல, இயல்பான ஆசையால்!)

''திருமணம்: இதுநொடிவரை ம்ஹூம்; இல்லை!

''குறிக்கோள்: தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒளி வட்டத்துடன் சின்னதாக ஓர் இடம் பெற வேண்டுமென்ற சின்டெரல்லா கனவு!

''சாதனைகள்: பல மாவட்டப் போட்டிகளில் ஓவியத்துக்கான முதல் பரிசு!

''கடைசியாக, ரொம்ப போரடிக்கிறேனில்லே! ஸாரி, உங்கள் பொறுமைக்கு ரொம்ப ரொம்ப வந்தனங்கள். குட்பை!

• • •

மூன்றும் பரிசு பெற்ற மற்றொரு எழுத்தாளர் ஆர்சி. சம்பத். இருபத்திமூன்று வயதாகும் இவர் பட்டதாரி.

77-ம் வருஷம் இவரது முதல் சிறுகதை தாமரை இதழில் பிரசுரமாயிற்று! 1976ல் காந்தி. சமாஜ கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்று அகில இந்திய சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்! தாமரை நடத்திய கல்லூரி மாணவர் சிறுகதைப் போட்டியில் பரிசு அடைந்திருக்கிறார்.

'தாய்' பத்திரிகையில் சில காலம் ஆசிரியக் குழுவில் பணியாற்றி இப்பொழுது இவர் திரைப்படக் கல்லூரியில் சேரவிருக்கிறார்.

இளம் பிராயத்துக் கனவும் நிகழ் காலத்திய போராட்டமும் திரு ஆர். சி. சம்பத்துக்கு எதிர்காலத்தில் ஒரு திரைப்பட இயக்குனராக வரவேண்டும் என்ற ஆசையைத் தோற்றுவித்திருக்கிறது!

1982 சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற நால்வருக்கும் நல்வாழ்த்துக்கள்! அமரர் கல்கியின் பரிபூரண ஆசி பெற்றவர்களாகிறார்கள்.

—பி.எஸ்.எம்.



இரண்டாவது ருஷ்ய விண்வெளி வீராங்கனை ஸ்வெத்லானா விமான ஓட்டி; ஸ்கை டைவிங் கலையிலும் வல்லுநர்! பாரசூட்டைப் பிரிக்காமலே வெகு தூரம் கீழே விழுந்து—தரையை நெருங்கும் போது பாரசூட்டைத் திறப்பது ஸ்கை டைவிங் என்ற ஆபத்தான விளையாட்டு. அவள் இவற்றில் பயிற்சி பெற்று வந்தது அவளது குடும்பத்தினருக்கே தெரியாது! யதேச்சையாகத் தந்தை அவளிடமிருந்த பாரசூட் கத்தியைப் பார்த்துவிட்ட போது அவளது ரகசியம் அம்பலமாயிற்று!

புதிய
கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



MFP FLUORIDE



ஃப்ளோரிகார்டில் உள்ள எம்

எ.ஃப்பி.ஃப்ளோரைட் எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM

வலியிலிருந்து விரைவில் நிவாரணம் பெறவே



புதிய அனாஸின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

உலகெங்கும் டாக்டர்கள் மிக் அதிகமாக சிபாரிசு செய்யும் வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது புதிய அனாஸின். தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, முதுகு வலி, தசைவலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது. அனாஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்

இப்போது பாதுகாப்பான புதிய உறையில்.



சக்தி வாய்ந்த நம்பகமான
மேனர்ஸ்
அனாஸின்*

இந்தியாவின் புகழ்பெற்ற
வலி-நிவாரணி மருந்து

*ட்ரேட் மார்க் உரிமை பெற்று உபயோகிப்பவர்கள் : ஜெஃப்ரி மேனர்ஸ் & கம். லிட்.

GM-1-82 TM



பிறந்த நாள் செப்டம்பர் 8ந் தேதி

லக்ஷ்மி

நான் ஆப்பிரிக்கா பயணமாகுமுன் சுமார் 15 ஆண்டுகள் தேவன் அவர்களோடு எழுத்தாளர், ஆசிரியர் என்ற முறையில் பழக வாய்ப்பிருந்தது. என் எழுத்துக்களில் தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்தம் செய்வார். என் கதைக்கு வந்துள்ள கடிதங்களை அனுப்பி உற்சாகப்படுத்துவார். பேசும்பொழுது நகைச்சுவை கொப்பளிக்கும். ''உங்கள் கதையில் முதல் அத்தியாயத்திலேயே விறுவிறுப்பு வரவில்லை என்று வாசகர் குறை கூறியிருக்கிறாரா? கவலைப்படாதீர்கள். அடுத்த அத்தியாயத்தை எழுதும்போது கதாநாயகன் அலமாரியில் கை வைத்தான். தேள் கொட்டி விட்டது... என்று விறுவிறுப்பாக ஆரம்பியுங்கள்'' என்று வேடிக்கை செய்வார். அவர் எழுதிய கதைகளில் நகைச் சுவையைப் போல பக்திச் சுவையும் பரிமளிக்கும். அவர் ஒரு முருக பக்தர். திருச்செந்தூர் தெருவெல்லாம் பன்னீர் வாசம் வீசியது என்று எழுதிய போது எனக்கு உடனே திருச்செந்தூர் சென்று முருகனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

பெ. நா. அப்புசாமி

தேவனை எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்திய கல்கி அவர்களுக்கு நன்றி கூற வேண்டும்.

விகடன் ஆசிரியர் தேவன் யார் மனமும் புண்படும்படி பேசமாட்டார்.

நான் அப்போது ஆனந்த விகடனில் அறிவியல் கட்டுரைகள் அதிகமாக எழுதிக்கொண்டிருந்த சமயம்.

வாசகர்கள் அறிவியல் கட்டுரைகளை அவ்வளவாக விரும்பவில்லை. உடனே தேவன் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், ''நீங்கள் ஏன் கதைகள் அனுப்புவதில்லை?'' என்று கேட்டு அதன் மூலம் அறிவியல் கட்டுரைகள் வேண்டாம் என்று நயமாகச் சமாளித்ததைக் கண்டு வியந்தேன்.

ஆர். சுந்தரம்
(தேவன் அறக் கட்டளை)

ஒரு சமயம் அவருக்கு உடல் நலக் குறைவு உண்டானபோது அவருக்கு 'ஃபீனோ பார்பிடோன்' என்ற மருந்தைக் கொடுத்தேன். கொடுக்கும்போதே 'இதைக் கவனமாக உபயோகியுங்கள்; சிறிது அதிகமானாலும் உயிருக்கு ஆபத்து' என்றேன். உடனே அதை வைத்து 'ஜஸ்டிஸ் ஜகந்நாதன்' என்ற நாவலை உருவாக்கினார்.

குழந்தை சுபாவம் கொண்டவர். சில சமயம் தாம் எழுத நினைத்திருக்கும் கதையின் கருவை என்னிடம் சொல்லிக் கொண்டே வருவார். அப்போது நான் கதையின் முடிவை அனுமானித்து அவரிடம் கூறினால் ''முடிவை நான் சொல்வதற்குள் உனக்கு என்ன அவசரம்'' என்று கோபிப்பார்!

ஒரு நாள் நானும் அவரும் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு நண்பர் வந்து ''என் கதைகள் திரும்பி வந்து கொண்டிருப்பது ஏன்?'' என்று கேட்டார்.

அதற்கு தேவன் ''தாங்கள் திரும்பி வந்த கதைகளை எங்காவது மறைவில் வைத்திருந்து பல நாட்கள் கழித்துத் தாங்களே அதைப் படியுங்கள் அதில் உள்ள தவறுகள் தங்களுக்கே புரியவரும்'' என்று இதமாகக் கூறி அனுப்பினார்.

காஞ்சிப் பெரியவர் ஒரு வெள்ளி வேலை தேவனிடம் அளித்துப் பூஜித்து வரும்படி சொன்னார். அவர் மறைவுக்குப் பின் காஞ்சி பெரியவாளின் உத்தரவின் பேரில் அதை வடபழனி கோயிலுக்கு அளித்தோம்.

சுஜாதா

அமரர் தேவனின் கதைகளை ஏறக் குறைய ஒன்று விடாமல் படித்தவன் நான். என்னைப் போன்ற எழுத்தாளர்களுக்கு ஒரு முன்னோடியாகவும், மானசீக குருவாகவும் இருந்திருக்கும் திரு கல்கி, திரு தேவன் போன்றவர்களை எங்களால் மறப்பது சாத்தியமில்லை.

தேவன் என்றைக்குமே இருப்பார். இளம் எழுத்தாளர்களை, வளரச் செய்ய அவரைப் போன்றவர்கள் என்றும் நம்மிடையே இருப்பார்கள்.

தொகுப்பு: **தியாகு**

கைலி கட்டும் ஸ்ரீரங்கநாதர்


ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோயிலில் அர்ஜுன மண்டபத்தில் 'துலுக்க நாச்சியார்' சந்நிதி ஒன்று இருக்கிறது.

அமாவாசை, மாதப்பிறப்பு ஜன்ம நட்சத்திரம் ஆகிய தினங்களில் துலுக்க நாச்சியாருக்காக உற்சவ மூர்த்தி ஸ்ரீரங்க நாதருக்கு திருமஞ்சனம் செய்து கைலி கட்டி அலங்கரிக்கிறார்கள்.


— ஆர். கோபாலன், திருச்சி.

ஷூட்டிங் இல்லாத போது!











படம் 1: ''இன்னிக்கு நமக்கு ஷூட்டிங் இல்லே. அதனாலே டைரக்டரிலேருந்து ஏதாவது ஒரு ஆளை செலக்ட் பண்ணி நம்ம படம் பார்த்தாரா நம்மைப் பத்தி ஜெனரல் ஒபீனியன் என்னன்னு கேட்போம். ம்... ஓ.கே. கல்யாணசுந்தரம்...''

படம் 2: ''ஹலோ... மிஸ்டர் கல்யாணசுந்தரம் இருக்காரா?''

''ஸ்பீக்கிங்.''

''நான்தான் எஸ். வி. சேகர் பேசறேன்... யாருக்காவது போன் பண்ணி சும்மா பேசலாம்னு தோணிச்சு. கடைசியா நம்ம படம் என்ன பார்த்தீங்க?''

''ம்.... கடைசியாபார்த்தது அன்பே வா''

''சார்... நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டு இருக்கீங்க போலிருக்கு. நான் எம். ஜி. ஆர். இல்லே. எஸ். வி. சேகர்.''

''தெரியும்பா சேகர். எனக்குத்தான் ரொம்ப நாளா கண் பார்வை மங்கி வெளிலே வாசல்லே போக முடியாம வீட்டோட இடக்கிறேனே. கடைசியா நான் பார்த்த சினிமாவே அன்பே வா தான்!....''

படம் 3: ''ம்....என்ன இழவுடா இது? முதல் கேஸே அபசகுனமா இருக்கு? வேற நம்பர் டிரை பண்ணுவோம்.''

படம் 4: ''அடடே! நீங்கதானு மிஸ் வனஜா. அந்த இன்லெண்ட் லெட்டர் எழுதினதெல்லாம்?''

''ஆமாம் மிஸ்டர் சேகர். உங்களோட ரசிகை நான்.''

''தாங்க்யூ. யூ ஹாவ் எ ஸ்வீட் வாய்ஸ்!''

''உங்க ஷூட்டிங் ஒண்ணு பாக்கணும். வரலாமா?''

''மிஸ் வனஜா, நிச்சயமா வரலாம். உங்களுக்கு நானே போன் பண்ணிச் சொல்றேன்.''

''மணல் கயிறு பிரமாதம். நிஜ வாழ்க்கையிலேயும் எட்டு கண்டிஷன் போட்டீங்களா?''

''விளையாடறீங்களா?என் ஒய்ஃப் போட்ட எட்டு கண்டிஷனுக்கும் ஒத்துக்கிட்டு பேசாம கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆமாம்... மிஸ் வனஜா, உங்க கல்யாணத்துக்கு என்னை இன்வைட் பண்ணுவீங்களா?''

''சே! எப்பவுமே உங்களுக்கு ரொம்ப குறும்பு சேகர்.''

''ஏன்?''

படம் 5: ''நாப்பத்தி மூணு வயசாறது. இனிமே எங்கே கல்யாணம் பண்ணிக்கப் போறேன்?''

படம் 6: ''இதை மொதல்லே சொல்லியிருக்கிறதுதானே? போனை வை.''

படம் 7: ''ஹலோ யாரும்மா பேசறது?''

''நான்தான் செல்வி பேசறேங்க.''

''செல்வி... என்னம்மா வயது?''

''யாருங்க பேசறது? என் வயசு 20. ஏன்?''

''நான்தான் எஸ்.வி. சேகர் பேசறேன்.''

''என்ன சார் வேணும்?''

''என்ன' வேணுமா? சேகர்மா... படம் ஏதாவது பார்த்திருக்கியா? அதைப் பத்தி சும்மா பேசலாம்னு போன் பண்ணினேன்.''

''வீட்டிலே யாரும் இல்லீங்க. அப்புறம் போன் பண்ணுங்க.''

(போன் அடிக்கிறது)

படம் 8: சேகர்: ஹலோ.... --

குரல்: நான்தான் சேகர் பேசறேன்.

சேகர்: யாருப்பா அது?

குரல்: சொன்னேனே. எஸ். வி. சேகர். ஆமா ஸ்பரிசம் பார்த்தீங்களா? எப்படி?

சேகர்: எனக்கு வேணும் சார்... நீங்க யாருன்னு சொல்லிடுங்க. ஏன்னு நான்தான் சேகர்!

படம் 9: குரல்: ஏமாந்தியா சேகர்! நான்தான் சுந்தா. டயம் இடைச்சா யாருக்காவது போன் பண்ணி அறுப்பியே! அதே மாதிரி உனக்கு நான் போன் பண்ணினேன். டிராமாவுக்கு டயமாச்சு எல்லாரும் உனக்காகக் காத்திருக்காங்க. கிளம்பி வா சீக்கிரம்!

கற்பனை: **கோபு ராமசாமி**

படங்கள்: **க. வெ. ரா. மோகன்**

பேரன் = மகன் + அப்பா

உடம்பின் அணுக்களெல்லாம் 'விண்' என்று வலித்துத் துடிக்க வைத்த அந்த வேதனையிலிருந்து 'விசுக்' என ஏற்பட்ட விடுதலையாய் ஒரு புதிய மறு ஜன்மத்திற்குள் சுகமாகக் கண் விழித்த சுகன்யாவுக்கு, நர்ஸ் லதாவின் குரல் தெளிவாகக் கேட்டது:

''சுகு! ஆண் குழந்தைடி...'' என்று மகிழ்ச்சியில் துளும்பிய தோழியின் கைகளில் தவழ்ந்த அந்தச் சிறு உயிரைப் பார்த்தபோது, சுகன்யாவின் புண்பட்ட உடலெங்கும் புளகாங்கிதம் ஓடிப் பிரவகித்து ஆனந்தப்படுத்தியது.

ஆனால் சட்டென்று அந்த மகிழ்ச்சி ஒளியை மறைப்பது போல் அவளுடைய முகத்தில் திரண்ட வருத்தத்தின் நிழல், நர்ஸின் கூர்மையான பார்வைக்குத் தப்பவில்லை.

''என்னடி சுகு! ஏன் உன் முகம் ஒரு மாதிரியா இருக்கு? ஆண் குழந்தை பிறக்கணும்னுதானே உலகத்தில் எல்லாத் தாய்மார்களும் ஆசைப்படுவாங்க?'' என்று சிரித்தாள் லதா.

மற்ற தாய்மார்கள் எப்படியோ — ஆனால் சுகன்யா தனக்குப் பெண்தான் பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அதற்காகக் கற்பகாம்பிகையை எத்தனை தடவை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாள்? அவளது வேண்டுதலை நிறைவேற்றவில்லையே?

அவளுடையதை நிறைவேற்றுவதைவிட, சுந்தரத்தின் பிரார்த்தனையை அம்பாள் நிறைவேற்றி விட்டதைப் போன்று ஏற்படும் பிரமையைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தான் ஆண்குழந்தை பெறக்கூடாது என்று நினைத்த காரணத்தை சுகன்யா தோழியிடம் சொல்ல முடியுமா?

''அப்படியில்லே, லதா! தலைச்சன் பெண்ணாகப் பிறந்தால் நல்லதுனு நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனால்....''

''சுகு, முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்திட்டா, அதுக்குச் சமாதானம் பண்ணிக்கிறதுக்காக, அப்படிச் சொல்லிக்கிடுவாங்க. அவ்வளவுதான்!'' என்று பச்சிளம் தாயின் கன்னத்தை மெதுவாகக் கிள்ளிய லதா ''யூ ஆர் ஆல்வேஸ் லக்கி, சுகு! கண்ணிறைந்த கணவன்: தாய் தகப்பனுக்கு ஒரே பிள்ளை அவர். பூர்வீகச் சொத்தோட கை நிறையச் சம்பாதிக்கிற ஆபீசர். மாமியார் — மாமனார் நச்சரிப்பு இல்லாம, நாலைந்து வருஷம் ஜம் ஜம்முனு ஹனிமூன் கொண்டாடிட்டே... இனிமேல் உங்க ஜாலிக்குத் தடையாய் வந்திட்டான் பேபிப் பயல்!'' என்று கேலி செய்தாள்.

லதாமட்டுமல்ல— மற்ற எல்லோருமே சுகன்யாவின் குடும்ப வாழ்க்கையைப் பார்த்துப் பொறாமைப்படத்தான் செய்வார்கள். அழகும், படிப்பும் நிறைந்த சுகன்யாவை, கணவன் தரையிலே நடக்கவிடவில்லை. தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினான்.

கல்யாணம் ஆனவுடனேயே அதுவரை கூட இருந்த தாய் தந்தையரைச் சொந்தக் கிராமத்துக்கு அனுப்பிவிட்டான் அவன்:

''அப்பா! கிராமத்திலே நிலமெல்லாம் கவனிப்பார் இல்லாம மோசமாய்ப் போயிட்டுது அப்பா! குத்தகைக்காரங்க நிலத்தையும் கவனிக்கிறதில்லே, ' பங்கையும் சரியாகக் கொடுக்கிறதில்லை, நீங்க போய் நேரிலே கவனிச்சாத்தான் சரிப்படும்'' என்று சுந்தரம் சொன்னதும் வைத்திலிங்கம் விழித்தார்:

வைத்திலிங்கம் ஓய்வு பெற்ற ஹைஸ்கூல் ஆசிரியர். அவருக்கு சைனேபிலியா கம்ப்ளெய்ண்ட் இருந்தது. அடிக்கடி சளி, இருமல், மூச்சுத் திணறல் என்று தவிப்பார்.

திருச்சியில் சுந்தரத்தின் வீடு இருந்த தெருவில் நாலைந்து டாக்டர்கள் இருந்தார்கள். அவசரத்துக்கு மருந்து, இன்ஜெக்ஷன் என்று உதவ அங்கே டாக்டர்கள் இருந்தது அவருக்கு ரொம்ப சௌகரியமாயிருந்தது.

கிராமத்துக்குப் போய்விட்டால் அவசரமாய் டாக்டரைப் பார்க்க வேண்டுமென்றால் எழெட்டுக் கிலோ மீட்டர் தாண்டி காரைக்குடிக்குப் போயாக வேண்டும்.

''சுந்தரம்! இங்கே இருந்தா எனக்கு டாக்டர்களைச் சட்டென்று கன்ஸல்ட் பண்ண முடியும். கிராமத்துக்குப் போயிட்டா—''

''அதுக்காகக் கவலைப்படாதீங்கப்பா! நமக்கு ஒரு மாட்டு வண்டி வாங்க ஏற்பாடு பண்ணிட்டேன். உங்களுக்கு ஏதாவது காய்ச்சல், தலைவலி, இருமல், ஜலதோஷம்னு, ஐந்து நிமிஷத்திலே மாட்டு வண்டியிலே காரைக்குடிக்குக் கூட்டிக்கிட்டுப் போக, வீட்டோட ஒரு வண்டிக்காரனையும் நியமிச்சிட்டேன்...'' என்றான் உத்தம புத்திரன்.

நிலம், வீடு, வாசல் மீது ஏக புத்திரனுக்கு ஏற்பட்டுள்ள அக்கறையைப் பார்த்துத் தாய் பூரித்துப் போனாலும் அவர்களைக் கிராமத்துக்கு அனுப்பி வைத்ததில் சிறு குறைதான்.

கணவனுடைய செய்கை, சுகன்யாவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

''ஏங்க, மாமாவையும் அத்தையையும் ஏன் இப்படி விரட்டறீங்க?'' என்று சிணுங்கினாள் அவள்.

''சுகு! இது ரொம்ப சின்ன வீடு. அவங்களும் இங்கே இருந்தா நாம் ஜாலியாய் சுதந்திரமா இருக்க முடியாது. புரியுதா?'' என்று குறும்பாக அவளது இளம் இடுப்புச் சதையில் விஷமம் செய்தான் புது மாப்பிள்ளை.

பெற்றோரை ஊருக்கு அனுப்பிய பிறகு அழகு மனைவியை அழைத்துக் கொண்டு தின



அய்க்கண்

சரி சினிமா, நாடகம், கடைத் தெரு என்று உலா வந்தான் சுந்தரம்.

''என்னங்க, சீக்கிரம் ஒரு பெரிய வீடு பாருங்க... மாமாவையும் அத்தையையும் இங்கே கூட்டிக்கிட்டு வந்திடலாம்'' — ஒரு நாள் அவனிடம் நினைவூட்டினாள் சுகன்யா.

''அட அசடே! எதுக்குப் பெரிய வீடு? அப்பாவை ஏமாத்தி அனுப்ப அப்படி ஒரு டூப் அடிச்சேன். இந்தச் சின்ன வீட்டுக்குள்ளே இந்தச் சின்னப் புறாக்களின் இன்ப சாம்ராஜ்யம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் தெரியுமோ?'' என்று அவளை அலாக்காகத் தூக்கி விளையாடினான் அவன்.

ஐந்து ஆண்டுகள் இப்படித் தேனிலவுத் தம்பதிகளாய் இனிமையான வாழ்க்கை நடத்திய பிறகு சுகன்யா கர்ப்பமானாள்.

வாரந்தோறும் அவளை அழைத்துக் கொண்டு கற்பகாம்பிகை கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்துவிட்டு வருவான் சுந்தரம்.

அன்று அம்மா சந்நிதியில் கண்களை மூடி நெடு நேரம் பிரார்த்தித்துக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள் சுகன்யா.

''என்னங்க, அம்மன் கிட்டே என்ன வேண்டிக்கிட்டீங்க?'' என்று மெதுவாகக் கேட்டாள் அவள்.

''எனக்கு ஆண் குழந்தை பிறக்கணும்னு பிரார்த்தனை பண்ணிக்கிட்டேன். நீ என்ன வேண்டிக்கிட்டே?''

ஒரே மகனான சுந்தரம் தன் பெற்றோரிடம் நடந்து கொள்ளும் முறை, அவளுடைய இதயத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

முதல்வரின் சத்துணவுத் திட்ட நிதி

உங்கள் காணிக்கையை அனுப்பி விட்டீர்களா?

''முதல்வரின் சத்துணவுத் திட்டக் கணக்கு'' என்று குறிப்பிட்டு உங்கள் நன்கொடையை

**''நிர்வாகி,
கல்கி — மங்கையர் மலர்,
சென்னை - 32''**

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.



''நான் பெண் குழந்தை பிறக்க வேணும்னு வேண்டிக்கிட்டேன்'' என்று நிதானமாகச் சொன்னாள் சுகன்யா.

''ஏன், ஆண்குழந்தை பிடிக்கலியா?'' என்று சிரித்துக் கொண்டே கிகிகித்தான் சுந்தரம்.

அவனை ஏறிட்டு ஆழமாக நோக்கினாள் அவள்:

'ஆம்... நீங்கள் ஒரு ஆண்பிள்ளை, உங்கள் பெற்றோரை நீங்கள் எப்படி வைத்திருக்கிறீர்கள்? ஆண்குழந்தையை விட பெண் குழந்தைதான் பெற்றோரிடம் பிரியமாய் இருக்கும்' என்று சொல்ல நினைத்தவள், சொல்லாமல் நிறுத்திக் கொண்டு விட்டாள்.

''எனக்குப் பெண் குழந்தைதான் பிறக்கும். நிச்சயம் அம்பாள் என் பிரார்த்தனையை நிறைவேற்றுவாள்'' என்று அழுத்தமாகச் சொன்னாள் சுகன்யா.

ஆனால்... கடைசியில் அவளுடைய பிரார்த்தனை வீணாகிவிட்டதே!

முகமெல்லாம் ஆனந்தம் பொங்க உள்ளே துள்ளி ஓடிவந்தான் சுந்தரம்.

''சுகு! நல்லாயிருக்கியா? பாத்தாயா, நான் வேண்டிக்கிட்டபடி, ஆண்குழந்தையே கற்பகாம்பிகை கொடுத்திட்டா...'' என்றவன், குழந்தையின் முகத்தை உற்று நோக்கியபடி ''பையனைப் பார்த்தியா சுகு? இவனோட ஜாடை, அப்பா மாதிரியே இல்லே?'' என்று சிரித்தான்.

முகத்தில் சலனமே இல்லாமல் அவனைப் பார்த்தாள் சுகன்யா.

'தந்தையின் ஞாபகம் இப்போதாவது வந்ததே!'

''சுகு! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தந்தி கொடுத்து உடனே வரச் சொல்லியிருக்கேன். இனிமேல் அவங்க நம்மளோடேதான் இருக்கப்போறாங்க'' என்று சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போனாள் சுகன்யா.


''ஏன் அவங்களைக் கூப்பிடறீங்க? அவங்க வீட்டிலே இருந்தா, நம்ம ஜாலி வாழ்க்கைக்குத் தடையாய் இருக்க மாட்டாங்களா?''

''அப்படி நினைச்சது என் தப்புத்தான் சுகு! ஒரு மகன் தன் பெற்றோர் கிட்ட அப்படி நடந்துக்கக் கூடாதுன்னு இப்போ புரிஞ்சுக்கிட்டேன்...''

''இப்போ எப்படித் திடீர்னு ஞானோதயம் பிறந்தது?''

''உன் மகன் பிறந்ததும்தான் எனக்கும் ஞானோதயம் பிறந்தது. நான் என் பெற்றோரை நடத்துகிற மாதிரிதானே பிற்காலத்தில் என் மகனும் என்னை நடத்துவான் என்கிறதை நினைச்சுப் பார்த்தேன். எனக்குப் புத்தி வந்திட்டது... ரிட்டயர்ட் வாத்தியாரோட பேரன், பிறந்தவுடனேயே எனக்கு ஒரு நல்ல பாடம் கத்துக் கொடுத்திட்டான்!'' என்ற கணவனின் மன மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தாள் சுகன்யா.

'கற்பகாம்பிகே! நீ என் பிரார்த்தனையை அலட்சியப்படுத்தவில்லை. அதையே வேறு வழியில் நிறைவேற்றிவைத்துவிட்டாயம்மா!' என்று நினைத்த சுகன்யாவின் விழிகளில் ஈரம் கசிந்தது.



விளங்குவீர் நியூட்ரமுல் 'வஸ்தாத்'தாக.
தாராசிங் பலப் பயிற்சித் திட்டம்
உயரம் ஏற்றும் உடற்பயிற்சிகள்
நியூட்ராமுல் துணையால்... கட்டுடல், தெம்பு, தொட்ட தெல்லாம் பலிதம், உச்ச உணர்வு...உன் பெயரைச் சொல்லுதடா 'நியூட்ராமுல் வஸ்தாத்' !
daCunha/GCM/69/82/TM
Nutramul
அமுல் படைப்பு
நியூட்ரமுல்

குடும்பம் ஒரு கதம்பம்:

சமுதாய அந்தஸ்து எங்கே?



'...ஓர் ஆரோக்கியமான முன்னேற்றம் இளைஞர்களிடையே காணப்படுகிறது. அது தான் ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்துகொண்டு உத்தியோகம் பார்க்கும் ஆசை கொஞ்சம் (ரொம்பக் கொஞ்சமோ?) மறைந்திருப்பது. எந்த வேலையாயினும் சரி, வேலை என்ற ஒன்று கிடைத்தால் போதும், செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

'மத்திய பிரதேசத்தில் எம். ஏ. படித்த இளைஞர் கட்டிட வேலையில் (ஸூபர்வைசராக அல்ல; கொலுத்து ஆளாக) ஈடுபட்டிருக்கிறார் என்பது பேப்பர் செய்தி. இங்கே மட்டும் என்ன? நமக்குத் தெரியாமல் பலரும் அப்படி இருக்கலாம். எப்படியோ, உடலுழைப்புக்கும் மரியாதை கிட்டிவிட்டது. இப்போது கடனே என்று செய்வார்கள், இன்னும் கொஞ்ச நாளில் அதிலேயே பற்று வந்து, அந்தத் தொழிலிலேயே முன்னேற்றம் அடைவார்கள். எதிர்கால இந்திய இளைஞர்கள் இதுபோல் போலி கௌரவம் எல்லாம் பார்க்காமல், கையை நம்பி உழைத்து முன்னேற்றம் அடைந்து...'

கல்லூரி நாட்களில் இப்படி ஒரு நாள் மாணவ, மாணவியரிடையே ரொம்ப சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தேன். அவ்வளவு நேரம் என் பிரசங்கத்தை ரொம்ப அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மிகவும் நிதானமாக என்னைக் கேட்டார்.

''ரொம்ப சந்தோஷம். இத்தனை காலம் போலிக் கௌரவத்தில் திளைத்திருந்த இளைஞர்கள் இப்போது சுகபோக வாழ்க்கையை விட்டு விட்டார்கள். ஏதோ ஒரு வேலை என்று கிடைத்தால் போதும் என்று எந்த வேலைக்கும் தயாராக இருப்பது உண்மை தான். சரி. உங்கள் வர்க்கம் எங்களுக்குச் சமூக அந்தஸ்து தரத் தயாரா?''

''சமூக அந்தஸ்து? சார்... நீங்க... என்ன...?''

''ஓ, புரியலையா? என்னையே உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம். சேலம் பக்கத்துக் கிராமத்தில் இருந்து வந்து இதோ எம். ஏ. படிக்கிறேன். அடுத்த வருஷம் கண்டிப்பாக வேலை கிடைக்கப் போவதில்லை. பேங்க் எக்ஸாம் எப்போது என்ற பேப்பரைத் தேட்டை போடாமல் கிராமத்துக்குப் போகிறேன். உடலுழைப்புக்கு மதிப்புக் கொடுத்து வயல் வரப்பில் இறங்குகிறேன். நவீன கருவிகளைப் பயன்படுத்தி நல்ல மகசூலைத் தருகிறேன். ஆனால் நீங்கள்...? உங்கள் புருஷனாகத் தேர்ந்தெடுப்பது விவசாய வேலை செய்யும் என்னையா? ஒரு பேங்க் அதிகாரியையா? ம்... சொல்லுங்கள்...''

நாங்கள் மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்தோம். உண்மைதான். படித்த படிப்புக்கு வேலை இல்லையே தவிர, பிழைக்க வழியில்லாமல் இல்லை என்று சொல்லலாம். வேலையில்லாப்பட்டதாரிகளுக்கு வங்கிகளும், பல கூட்டுறவுச் சொஸைட்டிகளும் கடன் கொடுத்து டீக்கடை வைக்க உதவி செய்யலாம். அவர்களும் மாதம் குறைந்தது ஐநூறு ரூபாய் சம்பாதிக்கலாம்.

இவர்கள் சமுதாயத்தில் வந்து நிற்கும் போது?

''ஹா....ஹா...ஹா... என்ன புரோக்கர் மாமா, டீக்கடை நடத்தும் பையனுக்கா






என் பெண்ணைக் கேட்கிறீர்கள்? நன்றாக வந்தீர்கள். போங்கள். ஏதாவது 'பர்மனென்ட் ஜாப்' இருக்கிற பையனைப் பாருங்க சார். கவர்ன்மெண்ட்லே இல்லேன்னு பாங்க்லே இருக்கிற பையனா இருக்கானு... வர்ற தையில முகூர்த்தம் வச்சுக்கலாம்...''

இதுதான் நிலைமை.

கொஞ்சம் சாதாரண வசதியுள்ள பெண்ணின் அப்பாகூட கடனை உடனை வாங்கியாவது உத்யோகத்தில் இருக்கும் வரனைப்பார்த்துத்தான் கல்யாணம் செய்ய நினைக்கிறார். துடிப்பும், கற்பனா சக்தியும், தன் உழைப்பில் நம்பிக்கையும் வைக்கும் இளைஞனை யாரும் லட்சியம் செய்வதில்லை.

ஒன்றாந் தேதியானால் 847 ரூபாயும், 68 பைசாவும், வருடம் ஒரு போனஸும்



இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இன்க்ரிமெண்டும்... இதுவே பெண் தனக்கு வரப் போகும் கணவனிடம் எதிர்பார்ப்பது.

மேலை நாட்டைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறோம். ''பாருங்க ஸார், அங்க சாதாரண கூலித் தொழிலாளி கூட சலவை உடுப்பு மாறும் கார்ல வந்து பெருக்கிட்டுப் போறான். அவனுக்குக் கூட அங்க ஆயிரம் ரூபாய்க்கு மேலே சம்பளம்...ம்.... பெரிய சூபரின்டெண்டெண்ட்னு பேருதான். தொள்ளாயிரத்துச் சில்லறைக்கே கிங்கியடிக்கிறது. வாரத்துக்கு ஒரு வாட்டி சட்டையை இஸ்திரி போட்டாப் போறுதான்னு இடிக்கிற வீட்டுக்காரி....''

இடிக்காமல் பின்னே என்ன செய்வான்?

மேல் நாட்டில் குப்பை கூட்டும் தொழிலாளியை வினோதமாகப் பார்ப்பதில்லையே! 'வேலைக்காரியாவா இருக்கா அவ? அவஸ்டைலும் போக்கும்... பெரிய சினிமா ஸ்டார்னு நினைப்பு...' என்று முகவாய்க் கட்டையில் இடித்துக் சொல்வதில்லை. உறவினர்கள், நண்பர்கள் என்று கூடும் இடங்களில்,

''தெரியுமா சார் சேதி. நம்ப சந்துருவோட பிள்ளை எல்லா இடத்துலயும் முட்டி மோதிட்டு, கடைசில ஒரு வேலையும் கிடைக்கல. இப்ப வீடு வீடாய்ப் போய் பேப்பர் விக்கறானாம்....''

வழுக்கைத் தலை வாயைப் பொத்திக்கொண்டு சிரிக்கும். அதிலேயே அவன் பெரிய ஏஜன்ஸி எடுத்து, நாளை பெரும் நிர்வாகியாகப் போகிறான் என்பது இவர்களுக்கு எங்கே தெரியும்?


இந்தப் பேச்சுக்களும் நமட்டுச் சிரிப்பும் தான் இளைஞர்களைத் தயங்க வைக்கும் ஆயுதம். ''டேய், இதெல்லாம் நம்ப குடும்பத்துக்கு ஆகாதுடா. நிரந்தர வருமானத்தைத் தேடிக்கோ. இந்த வியாபாரமெல்லாம் எவ்வளவு நாளைக்கு சாசுவதம்'' என்பார் அப்பா.

''ஆகா, வரதட்சிணைக் கொடுமை, பார்'' என்று முழக்கமிடும் கூட்டத்தினைக் கவலையோடு செவிமடுக்கும் பெண்ணும் கூட ஒரு நிமிஷம் சிந்திக்க வேண்டும். எல்லோரும் பேங்க் ஆபீசர்தான் மணாளனாக வேண்டும் என்று ஆசைப்பட்டால் இயற்கையாக ஆபீசர்களுக்குக் கிராக்கி ஏற்படுகிறது. 'ரேட்'டும் ஏறுகிறது.

பாதுகாப்பான எதிர்காலத்துக்கு ஆசைப்படுவதில் தவறென்ன? அது கணவனின் உயர் உத்யோகத்தில்தான் இருக்கிறது என்றெண்ணுவதுதான் தவறு. முன்னேறத் துடிக்கும் இளைஞர்களை மதியுங்கள் என்று சொல்ல வருகிறேன். ஆயிரக்கணக்கான சுய வேலை வாய்ப்புக்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டும் போதாது.

'நம்முடைய குடும்பத்தில் சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றும் மகன்' என்று பெருமை கொள்ளுங்கள். அவனே எதிர்காலத்தில் பெரும் தொழில் அதிபர் ஆகலாம்; அதனால் இன்றைக்கே அவனை மதித்து அவனுக்குச் சமுதாய அந்தஸ்தைக் கொடுங்கள்.

—மஞ்சுளா ரமேஷ்





NDE-468-82.TAM

உயிர்

''என்னாலே வலியைத் தாங்கவே முடியலியே'' என்றார் ஹரிஹரன். கண்ணீர் கஷ்டமில்லாமல் வடிந்து கொண்டிருந்தது. உடல் முறுக்கிக் கொண்டது. முகத் தசைகள் வெவ்வேறு கோணங்களில் இருகின. நெற்றி சுருங்கியது. வலி. டாக்ஸியின் பின் சீட்டில் முடங்கியிருந்தார்.

''தாங்கலியே... ஐய்யோ, அம்மால்... என்னைக் கொன்று போட்டுடேன் சேகர்.''

தந்தையின் தலையை மடியில் கிடத்தி, காரின் குலுக்கல் அவரைப் பாதிக்காதவாறு அணைவாய்ப் பற்றியிருந்தான் சேகர்.

''என்னை இப்படி யெல்லாம் கஷ்டப் படுத்தாதேடா ஆண்டவனே.. பிராணனை எடுத்துக்கிட்டு வலியிலிருந்து நிம்மதியைத் தாயேண்டா அப்பனே....''

அவரின் கைகளை ஆதரவாய்ப் பற்றியிருந்தாள் மாலதி. சேகரின் மனைவி.

''மாலதி, நீயாச்சும் தூக்க மாத்திரையை மொத்தமாக் கொடுத்திடேம்மா செத்துடறேன்'' என்றார்.

அவளுக்கு இப்பவோ அப்பவோ என்றிருந்தது கண்ணீர். அடக்கிக் கொண்டு சேகரிடம், ''நீங்களே அழுதா எப்படிங்க?'' என்று கிசுகிசுத்தாள்.

அவன் வெளியே பார்த்தபடி, ''டிரைவர் கொஞ்சம் சீக்கிரம் போப்பா'' என்றான்.

கார் ஜி. எச்.சுக்குள் நுழைந்தபோது மணி ஒன்பதுக்கு மேல் ஆகியிருந்தது. நிசப்தமான இரவுத் தன்மை கலக்கமூட்டுவதாய் இருந்தது. நடைபாதைகள் இருட்டாய் இருந்தன. அங்கங்கே விளக்குகள் மெலிதாய் வெளிச்சம் போட்டன.

உள்ளே வந்து காக்கி உடையில் இருந்தவனிடம், ''ஸ்ட்ரெச்சர் வேணும்'' என்றான் மகன். ஸ்ட்ரெச்சர் வரத் தாமதமான ஒவ்வொரு விநாடியும் அவனுக்குக் கோபம் வந்தது. இதயம் வேகமாய்த் துடித்தது. வேர்த்தது.

ஸ்ட்ரெச்சர் வந்ததும் டிரைவரின் உதவியுடன் அவரைத் தூக்கி ஸ்ட்ரெச்சரில் வைத்தான். ''காஷுவாலிட்டி போப்பா'' என்றான்.

காஷுவாலிடியில் இருந்த டாக்டர் இளமையாய், மென்மையாய் இருந்தார். பரிசோதிப்பதில் கொஞ்சம் பரபரப்பு இருந்தது. இப்போதுதான் கோர்ஸை முடித்திருக்க வேண்டும்.

''எப்படி ஆரம்பிச்சது?''என்றார் டாக்டர்.

''என்னாலே தாங்க முடியலியே...''

''நீங்க சொல்லுங்க'' என்றார் சேகரிடம்.

''முதலிலே முழங்காலுக்குக் கீழே சின்னக் கட்டியாத்தான் ஆரம்பிச்சுச்சு. வெறும் கட்டின்னு அசட்டையா இருந்துட்டோம். இப்பக் கொஞ்ச நாளா வலி இருந்திருக்கு. யார் கிட்டயும் சொல்லல்லே. தாங்க முடியாமப் போனப்புறம்தான் சொன்னார்...''

''ஏதாச்சும் இன்ஜெக்ஷன் போட்டுக் கொன்னுடுங்க டாக்டர்...''


முழங்காலுக்குக் கீழிருந்த கட்டியைத் தொட்டுப் பார்த்தார். அசைத்துப் பார்த்தார். முழங்காலை மேலும் கீழும் மடக்கினார். பின் ஏதோ சீட்டுக்களை எழுதித் தந்தார். ''ஸ்ட்ரெச்சர் பாயைக் கூப்பிடுங்க'' என்றார். வந்ததும், ''இவங்களை இருநூத்திப் பதிமூணுக்குக் கூட்டிட்டுப் போ'' என்றார். சேகரிடம், ''அட்மிட் பண்ணச் சொல்லி எழுதியிருக்கேன். அங்கே தேவையானதைச் செய்வாங்க'' என்றார்.

''தேங்க்யூ டாக்டர்....''

இருநூத்திப் பதிமூன்று முதல் மாடியில் இருந்தது. வார்டில் அநேகமாய் எல்லாப் பேஷண்டுகளுமே தூங்கிப் போயிருந்தார்கள். பாதி தூங்கிப் போயிருந்த பெண் ஹவுஸ் ஸர்ஜன் முகத்தைத் துடைத்து, கோட்டைச் சரிபண்ணி, சேகர் தந்த சீட்டை வாங்கிக் கொண்டாள். ''ஸ்ட்ரெச்சர் பாய் அவரை அந்த கட்டில படுக்க வையுங்க'' என்றாள். ஸிரிஞ்சை எடுத்து மருந்தை லோட் பண்ணி அவரின் புஜத்தில் சுருக்கெனக் குத்த, கொஞ்ச நேரத்தில் மெல்ல உறக்கத்தின் வயப்பட்டார்.

''என்ன டாக்டர்?''

என்றான் சேகர்.



''வலியை ரிலீவ் பண்ண ஊசி போட்டிருக்கேன். நாளைக்குப் பெரிய டாக்டர் வந்து தான் மத்ததெல்லாம் பண்ணணும்.''

''எப்போ வருவார்?''

''பத்தரை மணிக்கு....''

''மாலதி, வா, போகலாம்'' என்றான் சேகர்.

மறுநாள் சிலருக்கு என்றாவது ஒரு நாளாயும் பலருக்குஎன்றும்போல் ஒருநாளாயும் விடிந்திருந்தது.

நர்ஸ்கள் ஷிப்ட் மாறியிருந்தனர். சிலர் மரணித்திருந்தனர். சிலஉயிர்கள் புதிதாய்ப் பூமிக்கு வந்திருந்தன. மனப் பாரங்கள் கர்ப்பமாயிருந்தன. கனவுகள் கலைந்து போயிருந்தன. சந்தோஷங்கள் கைகுலுக்கிக் கொண்டன. வெளியிலிருந்து பார்க்க ஜி. எச். வித்தியாசமின்றி வழக்கம் போல இருந்தது.

சேகர் வந்தபோது, பக்கத்துக் கட்டில் காரரிடம் ''அடக்கப் பணித்தார், அறுசுவை உண்டார்; மடக்கொடியாளுடன் மஞ்சனம் கொண்டார்; இடப் பக்கமே சற்று இரை நொந்ததென்றார்; கிடக்கப் படுத்தார், கிடந்தொழிந்தாரே....'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் ஹரிஹரன். ''பட்டினத்தார் அப்பவே ஹார்ட் அட்டாக்கை எப்படி கரெக்டா சொல்லியிருக்கார் பாத்தீங்களா?''

''அப்பா, இப்போ எப்படி இருக்கு?'' என்றான்.

அவன்புறமாய்த் திரும்பி, ''சேகரா? கண்ணெல்லாம் சிவந்திருக்கு. ராத்திரி ஒழுங்கா தூங்கினியா?'' என்றார்.

''எப்படி இருக்கு?'' என்றான்.


''பரவாயில்லே. கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒரு டாக்டர் ஊசி போட்டுட்டுப் போனார். மறுபடியும் வந்தா அந்த வலியைத் தாங்க முடியாது. அதுக்குச் செத்துடலாம்.''

''ஏதேதோ பேசாதீங்க'' என்றான்.

''வாழ்ந்தது போதா? இனிமே என்ன பாக்கி இருக்கு? கண் குளிர உன் பிள்ளைகளையும் பார்த்தாச்சு. இனி போய்ச் சேர வேண்டியதுதானே... நீ ஆபீசுக்குப் போகலியா?'' என்றார்.

''லீவு போட்டிருக்கேன்.''

''ஸார், சீஃப் வர்றார். கொஞ்சம் வெளியில வெயிட் பண்றீங்களா?'' என்றாள் நர்ஸ்.



சீஃப் முன்னால் நடந்து வர ஏழெட்டுப் பேர் வாலாய்த் தொடர்ந்தனர். டாக்டர்கள், நர்ஸ்கள், பின் தொடர வந்த சீப் கொஞ்சம் குள்ளமாய் இருந்தார். தலையில் முடிகள் அநேகமாய் உதிர்ந்திருந்தன. பளபளவென்றிருந்தது. ஒன்றிரண்டு முடிகள் கடந்த காலத்தை நினைவுபடுத்தின. பின்னால் வந்த பெண் ஹவுஸ் சர்ஜனை விட இளமையாய், துள்ளலாய் நடந்து வந்தார். அவரைப் பின்பற்றி நடக்க மற்றவர்கள் மூச்சுப் பிடிக்க வேண்டியிருந்தது.

முதல் படுக்கைக்கு வந்து பேஷண்டிடம், ''எப்படிய்யா இருக்கே?'' என்றார். அஸிஸ்டெண்டிடம் ''கன்டினியூ த ஸேம் ட்ரக்ஸ்'' என்று சொல்லிவிட்டு அடுத்த பெட்டிற்குப் போனார். ''இவருக்கு ஸ்யூச்சர் பிரிச்சாச்கலை. ஸஸ் ஹி ஆல்ரைட்? தென் டிஸ்சார்ஜ் ஹிம்'' அடுத்த பெட்டுக்கு வந்து ''இவருக்கு இன்னும் பேண்டேஜ் மாத்தலியா?'' என்றார். அடுத்த பெட். அடுத்த பெட். ஹரி ஹரனிடம் வந்தார்.

''நேத்திக்கு நைட் அட்மிட் ஆன கேஸ்'' என்றார் அஸிஸ்டெண்ட். தொடர்ந்து கேஸோட முழு விவரத்தையும் ஒரே மூச்சில் சொல்லி, ''ஐ ஸஸ்பெக்ட் ஆஸ்டியோ ஸார்கோமா'' என்றார்.

''பெரியவரே, கொஞ்சம் வேஷ்டியை நகர்த்திக்கங்க'' என்றார். சீஃப். சோதித்து விட்டு, ''ஐ ஸீ இங்க் ஸோ'' என்றார். ''ஏம்மா, ஆஸ்டியோ ஸார்கோமா யூஷுவலா எப்படி ப்ரஸண்ட் பண்ணும்?'' என்றார் ஹவுஸ் ஸர்ஜனிடம்.

''ஸ்வெல்லிங்'' என்றாள்.

''இங்கே ஸ்வெல்லிங் ஸஸ் நாட் ப்ராமினண்ட். அப்படீன்னு என்ன அர்த்தம்?''

''More Malignant!''

''குட்...'' என்று சொல்லிவிட்டு நடந்தபடியே, ''ருடீன் இன்வெஸ்டிகேஷன் எல்லாம் பண்ணிடுங்க. அப்புறம் லோகல் எக்ஸ்ரே, செஸ்ட் எக்ஸ்ரே'' என்றார்.

சீஃப் போன பின் அஸிஸ்டண்டிடம் வந்தான். ''எலும்புல புற்று நோயா இருக்குமோன்னு சந்தேகப்படறோம்''என்றார் அஸிஸ்டெண்ட்.

தாய்: ''உப்புமாவை வாயில் போட்டதும் திறந்த வாயை மூட மாட்டேங்கிறியே? ஏண்டா, ''கல்'' இருக்கா?''
மகன்: ''இல்லே. 'ஊசி'யிருக்கு!''
-பட்டுக்கோட்டை ரவி



''என்ன?''

''ரிலாக்ஸ். இன்னும் நிச்சயமாகலே. எக்ஸ்ரே எடுத்தப்புறம்தான் முடிவாச் சொல்லலாம். நல்லதையே நெனைப்போம்'' என்றார் அஸிஸ்டெண்ட்.

''டாக்டர் என்ன சொன்னார்?'' என்றார் ஹரிஹரன்.

''இன்னும் என்னன்னு முடிவாத் தெரியலியாம்'' என்றான்.

''எதுவாயிருந்தாலும் மிஞ்சி மிஞ்சி என்ன நடந்துடப் போறது? உயிர்தானே போகும்? போகட்டுமே'' என்றார் சிரித்துக் கொண்டே.

''இன்னிக்கும் ஆபீஸுக்கு போகலியா?'' என்றார் ஹரிஹரன்.

''இல்லே'' என்றான் சேகர்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கே? என்னைப் பத்திக் கவலைப்படாதே. இது போற கட்டை. ஒன்னோட ஒடம்பைப் பார்த்துக்கோ.''

''நேத்து எப்பவாச்சும் வலி வந்துச்சா?'' என்றான்.

''ரொம்ப வாடிப் போயிருக்கே சேகர். எண்ணெய் கூடத் தேய்ச்சுக்கலே. ஒழுங்கா சாப்பிடுறியா?'' என்றார்.

''நேத்து வலி வந்துச்சா?''

''வலியா? அதுபாட்டுக்கு வருது, போகுது அவ்வளவு சிரமமாயில்லே. குழந்தைகளைப் பார்த்து ரெண்டு நாளாச்சு. ரகுவையும், கலாவையும் நாளைக்குக் கூட்டி வர்றியா?'' என்றார். பேரக் குழந்தைகள்.

''சீஃப் வர்றார்.''

நடையில், பேச்சில் விரைவாய் இருந்தார். உடையைத் தவிர்த்து மற்ற எல்லா விஷயங்களிலும் நேற்றைய பதிப்பாய் இருந்தார்.

ஹரிஹரன் பெட்டுக்கு வந்ததும், ''எக்ஸ்-ரே வந்துருச்சா?'' என்றார்.

''வந்துருச்சு சார்...'' என்றார் அஸிஸ்டெண்ட். ''லோகல் எக்ஸ்ரே கொடுங்க'' அஸிஸ்டெண்ட் தந்ததை வாங்கி மேலே உயர்த்திப் பார்த்தார். ''ஆஸ்டியோ ஸார்கோமாவேதான். ஸன்-ரே (Sun-ray) அப்பியரன்ஸ் இருக்கு. காட்மன் ட்ரை ஆங்கிள் தெரியுது. செஸ்ட் எக்ஸ்ரேயைக் கொடுங்க'' வாங்கி அதையும் உயர்த்திப் பிடித்தார். ''லுக்... கேனன் பால்ஸ் ஆல் ஓவர் தி லங் ஃபீல்ட்ஸ். Multiple secondaries,'' என்றார். அடுத்த பெட்டுக்கு நகர்ந்து கொண்டே, ''ரிலேடிவ்ஸுக்குத் தெரியப் படுத்திட்டு ரேடியேஷனுக்கு எழுதித் தாங்க'' என்றார்.

சீஃப் போன பின் அதுவரை இருந்த அமைதியும் போனது.

''உங்களை அஸிஸ்டண்ட் கூப்பிடுறார்'' என்றாள் ஹவுஸ் ஸர்ஜன், சேகரிடம்.

''ஸாரி''என்றார் அஸிஸ்டெண்ட்.''எலும்புப் புற்று நோய்தான் உறுதியாயிடுச்சு. அதோட புற்று நோய் நுரையீரலுக்கும் பரவிருச்சு. இனி உயிரைக் காப்பாத்த முடியாது. வாழ்க்கை இன்னும் சில மாசங்களுக்குத்தான்...''

''என்ன?'' என்றான்.

''ஆறு அவர் கஷ்டப்பட்டுச் சாகறதை வேணும்னா தடுக்கமுடியும். அதுக்குக் கரண்ட்



ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணெய்
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244, 4484 மில்ஸ் : 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR, Phone : 3107, 3745

வைக்கணும். ஐ மீன் ரேடியேஷன் தரணும். நான் எழுதித் தரேன். அதை ரேடியாலஜி டிபார்ட்மெண்ட்லே போய்க் கொடுங்க. அங்கே என்னிக்கு வரச் சொல்றாங்கன்னு கேட்டுட்டு வாங்க'' என்றார்.

தனக்குச் சம்பந்தப்படாத ஒருவர் தனக்குச் சம்பந்தப்படாத ஏதோ ஒன்றைச் சொல்லப் போவது போல் ஏதோ ஓர் உலகத்தில் இருந்தான்.

'எனக்காக மறு கல்யாணமே வேண்டாமென்று இளமை முழுவதையும் பொசுக்கிக் கொண்ட அப்பா. நான் இரவு படிக்கும் போதெல்லாம் விழித்திருந்த அப்பா. நான் ஃபெய்ல் ஆனபோது என்னை ஆறுதல் பண்ணிவிட்டு எனக்காக அழுத அப்பா. அம்மாவான அப்பா. நண்பனான அப்பா. இன்றைய 'நானு'க்குக் காரணமான அப்பா!

அழுகை வந்தது. 'உனக்காப்பா இப்படி? ஏம்ப்பா உனக்கு இப்படி வந்துச்சு? நீ யாருக்கப்பா பாவம் பண்ணினே? தும்பியைப் பிடிச்சாக்கூட உயிரைக் கஷ்டப்படுத்தக்கூடாதுன்னு பறக்க விடச் சொல்லுவியேப்பா... உனக்காப்பா இப்படி?'

வெளியே வெறுமையாய் வந்தான்.

அப்பா அடுத்த கட்டில்காரரிடம், ''ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு, பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு, சூரையங்காட்டிலே கொண்டு போய்ச் சுட்டிட்டு, நீரினில் மூழ்கி நினைவொழிந்தாரே'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். ''என்ன வாழ்க்கை... நிலையில்லாத வாழ்க்கை...''

அப்பாவிடம் போய் அந்த நிமிஷமே சொல்லிவிடலாமா என்று தோன்றியது. 'நீ சாகப்போறியாம்ப்பா. எங்களை யெல்லாம் விட்டுட்டுப் போகப் போறியாம்ப்பா' அவரைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும் போல் இருந்தது.

''என்னவாம்?'' என்றார்.

''சாதாரணக் கட்டிதானாம்'' என்றான். ரேடியாலஜிக்குப் போய் அலைந்து திரிந்து வந்தபோது மனம், உடல் இரண்டுமே சோர்ந்திருந்தது.

''ஸார்... புதன் கிழமை வரச் சொல்லியிருக்காங்க'' என்றான் அஸிஸ்டெண்டிடம்.

''ரைட்... ரேடியேஷன் முடிஞ்சப்பறம் நீங்க உங்க ஃபாதரை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்க. நோ யூஸ் கீப்பிங் ஹிம் ஆஸ்பிடல்ஸ்... மனசைத் தேத்திக்கங்க...'' என்றார்.

புறப்பட்டபோது, ''மறக்காம நாளைக்கு ரகுவையும், கலாவையும் கூட்டிட்டு வா'' என்றார் ஹரிஹரன்.

கூட்டி வந்திருந்தான்.

''ரகு, கலா, ரெண்டு பேரும் தாத்தாவைத் தொந்தரவு பண்ணாம சமத்தா உட்கார்ந்திருக்கணும்'' என்றான் சேகர்.

''சரிப்பா.''

''நேத்துக்கூட வலி நெறைய இருந்துச்சு சேகர். எப்போ வருமோன்னு பயந்துக்கிட்டே இருக்க வேண்டியிருக்கு. இதுக்கு ஒரேயடியாச் செத்துடலாம். தொந்தரவு இல்லாத ஒண்ணு. ரொம்ப நிம்மதி'' என்றார்.

மரணம் அவருக்கு ஒரு பொருட்டல்ல என்று அவனுக்குத் தோன்றியது. அவர் மரணத்தைச் சுலபமாய் ஏற்றுக்கொள்வார் என்று தோன்றியது. அந்த நினைவு மனத்தைக் கொஞ்சம் ஆறுதல் படுத்தியது.

''டாக்டர் இருக்காரான்னு பார்த்துட்டு வந்துடறேம்பா'' என்று உள்ளே போனான்.

''தாத்தா, உனக்கு டாக்டர் ஊசி போட்டாரா?'' என்றாள் கலா.

''ஆமாம்மா'' என்றார்.

''எவ்ளோ பெரிய ஊசி?''

''இவ்ளோ பெரிய ஊசி.''

''இவ்ளோவ் பெரிய ஊசியா?'' என்று கண்களை அகல மலர்த்தினாள்.

''நான் டாக்டரா ஆகி உனக்கு ஊசி போடறேன் தாத்தா'' என்றான் ரகு.

''இவனுக்கு ஊசி போடவே தெரியாது தாத்தா. இவன் போட்டா வலிக்கும்'' என்றாள் கலா.

''போடி... நான் நல்லாப் போடுவேன்ல தாத்தா...''

''சரி...சரி... சண்டையை நிறுத்துங்க... எப்படிப் படிக்கிறீங்க?'' என்றார்.

''டாடி வீட்டுப் பாடமே சொல்லித் தர மாட்டேங்கறாங்க தாத்தா'' என்றாள் கலா.

''அப்பா என்கூட கிரிக்கெட் ஆடவே வர மாட்டேங்கறாங்க'' என்றான் ரகு.

''ஏன்?'' என்றார்.

ரகு குனிந்து, ''நீதான் செத்துப் போகப் போறியாமே. அப்பாவும் அம்மாவும் பேசிக்கிட்டாங்க. அதனால ரொம்பக் கவலையா இருக்காங்க... அதான்...'' என்று சொல்லிக்கொண்டிருந்தபோது சேகர் வந்தான்.

''சேகர்.... நான் சாகப் போறேனடா'' என்றார். கண்களில் நீர் கோத்தது. குரல் கம்மியது. வார்த்தைகள் வர மறுத்து மறுபடியும் ''நான் செத்துப் போகப் போறேனடா?'' என்றார். கண்ணீர் வழிந்து கழுத்தை நனைக்க, ''நான் உங்களை யெல்லாம் விட்டுப் போகப் போறேனா? கலாக் குட்டி ரகுக் கண்ணு, நான் உங்களை யெல்லாம் விட்டுட்டுப் போறேனா?'' என்றார். தொண்டை அடைத்தது. குரல் கேவியது.

சேகர் அப்படியே அறைந்து போய் நிற்க, மறுபடியும், ''சேகர், நான் சாகப் போறேனடா?'' என்றார்.

''என் கணவர் எடுத்ததுக்கெல்லாம் அடிக்க வர்றார்டி!''

''அப்படி நீ என்னசெய்தாய்?''

''அவர் பாக்கெட்டிலிருந்து ஐம்பது ரூபாய் எடுத்தேன்!''

—கு. ரா. வேணி



குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

நீங்கள் புட்டிப்பால் கொடுக்கும் அவசியம் நேரும்போது கவனமாய் இருங்கள்.

கீழ்க்காணும் 5 முக்கியமான குறிப்புகளைப் பின்பற்றுங்கள்...

1. தொற்று கிருமிகளைத் தவிர்த்திடும் வகையில் பீடிங் பாட்டில், நிப்பிள், மற்றய பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கு சுத்தம் செய்து நீரிலிட்டுக் கொதிக்கச் செய்யவும். இல்லையெனில் பாலில் எளிதில் கிருமிகள் தோன்றிவிடும்.

2. நீரை பத்து நிமிடம் கொதிக்க வைத்து, உடல் வெப்பத்தைவிட சிறிது அதிகமாகவே ஆற வைத்த பின் பால் பவுடரைக் கலக்கவும்.

3. அதிக நீரை கலந்திடாதீர்கள், அதனால் சத்து குறைந்து விடலாம். டின்னின் மேல் கொடுத்துள்ள பால் புகட்டும் அட்டவணையைப் பின்பற்றவும்.

4. ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் புதிதாக பாலைத் தயாரிக்கவும். மீந்துவிட்ட பாலை குழந்தைக்கு கொடுக்காதீர்கள், அதில் கிருமிகள் தோன்றி கெட்டுவிடுகிறது.

5. டின்னின் மேல் கொடுத்துள்ள எல்லா விதிமுறைகளையும் பின்பற்றவும். ஏதாவது சந்தேகம் இருப்பின் டாக்டரிடம் ஆலோசனை கேட்கவும்.

வாங்குவீர் க்ளாக்ஸோ சன்ஷைன்—நம்பகமான குழந்தைப் பாலுணவு

க்ளாக்ஸோ சன்ஷைன் சரிவிகித ரீதியில் சரியான அளவு புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், இரும்புச்சத்து போன்றவற்றைக் கொண்டது. இது சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, டின்னில் அடைக்கப் படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.



க்ளாக்ஸோ

—தாய்மார்களின் நம்பிக்கைக்குரியது.

CASGLS–IR–203 TAM




உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 6. TM



விளம்பர யுகம்!





“ஒரு பொருளைத் தயாரிக்கும்போது, பொருளின் தரத்தோடு அதற்கு அளிக்கப்படும் விளம்பரமும் முக்கியமாகிறது. விளம்பரம் இல்லையெனில், பொருள் கிடங்கிலேயே இருக்க வேண்டியதுதான்'' என்கிறார் டாக்டர் ஸ்ரீதர். ஆராய்ச்சியிலும் திட்டமிடுதலிலும் ஆலோசகர் பதவியை பம்பாய் ஷில்பி விளம்பர நிறுவனத்தில் வகிக்கிறார் இவர்.

உதாரணமாகத் துவைக்கும் சோப்பை எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவு வகை! ஒவ்வொரு மாதமும் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கின்றன. இவைகளுக்கு மூலப் பொருள்கள் ஒன்றுதான். ஆனால் சில தயாரிப்புக்கள்தான் பிரபலமடைந்து முன்னணியில் நிற்கின்றன. ஏன்? இங்குதான் விளம்பரம் உதவுகிறது.

ஒரு சோப் விளம்பரத்தில் தாய் தனது பள்ளி செல்லும் மகனின் அழுக்கான துணிகளைச் சோப்பில் துவைத்து. அவன் தூய்மையாக அணிவதைப் பெருமையுடன் பார்க்கிறாள். இதை விளம்பரத்தில் காணும் தாய்மார்கள் தம்மையறியாமலே கடைக்குச் செல்லும்போது அதே சோப்பை வாங்குகிறார்கள்.

குளிக்கும் சோப்பை எடுத்துக் கொண்டாலும் ''இந்த அழகிய நட்சத்திரம் இந்த சோப்பை உபயோகிக்கிறார்'' என்று விளம்பரம் செய்கிறார்கள்.

நாம் பார்க்கும், கேட்கும் விளம்பரங்கள் நம்மை அறியாமலேயே நமது மனத்தைத் தொட்டுக் கடைக்குச் செல்லும்போது அதே 'பிராண்டை'க் கேட்டு வாங்குகிறோம்.

ஜனங்கள் பழக்கமானதையே வாங்குகிறார்கள். ஒரு 'பிராண்ட்' புகழ் பெற்றுவிட்டால் அதைத்தவிர வேறு எந்த 'பிராண்'டையும் ஜனங்கள் வாங்கத் தயங்குகிறார்கள். மின்சார விசிறிகளை எடுத்துக் கொண்டால் பிரபலமான கம்பெனியின் பெயர் அல்லது லேபிள் உள்ள விசிறிதான் வேண்டும் என்கிறார்கள். மின்சார விசிறிக்கான உதிரி பாகங்கள் பல சிறு தொழில்களில் செய்யப்பட்டு ஒரு இடத்தில் இணை சேர்த்து கம்பெனி லேபிளை ஒட்டி விடுகிறார்கள். இந்த லேபிளைப் பார்த்துப் பொதுஜனங்கள் வாங்குகிறார்கள்.

இந்த நிலைமையில் விளம்பர ஆலோசகர்களின் உதவி தேவைப்படுகிறது. மகாராஷ்டிர மாநிலத்தில் 'எனர்ஜி' என்று வாசனை ஏற்றிய பால் விற்பனைக்குக் கொண்டு வந்தார்கள். இது மாநிலஅரசால் நடத்தப்படுவது. பாட்டில் 90 பைசா விலை. தரமான பால் ஜனங்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்பதுதான் மாநில அரசின் குறிக்கோள். ஆனால் நடந்தது என்ன? நாள் ஒன்றுக்கு 5000 பாட்டில்கள் கூட விற்பனையாகவில்லை. உடனே விளம்பர ஏஜென்சியின் ஆலோசனை பெற்று ஏராளமாய் விளம்பரம் செய்து விலையையும் ரூ. 1.40க்கு உயர்த்தினார்கள். நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் பாட்டில்கள் விற்க ஆரம்பித்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது? அரசாங்கத் தயாரிப்பானாலும் தரமான பொருளாக இருந்தாலும், விளம்பரத்தைப் பார்த்து அதிக விலை கொடுத்தாவது வாங்குவதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள்.

இப்போதெல்லாம் ஒரு பொருளைத் தயாரிக்கத் தொடங்கு முன்னரே தயாரிப்பாளர் விளம்பர ஏஜன்ஸியிடம் ஆலோசனை கேட்கிறார். இவர்களும் மார்க்கெட் நிலவரம், போட்டியாக இருக்கும் பொருள்கள், அவை

களின் தரம், தன்மை இவைகளைப் பற்றி மக்களின் மனப்போக்கு முதலியவற்றை கணிக்க ஒரு வருஷம் அல்லது ஒன்றரை ஆண்டுகள் எடுத்துக் கொள்கிறார்கள். பிறகு தடபுடலாக விளம்பரம் செய்கிறார்கள். மார்க்கெட்டில் வரும் பொருள் மக்களின் மனத்தைக் கவருகின்றது.

இத்துறையில் உள்ள சிரமங்களையும் கூறுகிறார் ஸ்ரீதர்: சில சமயம் இவர்கள் புதுத் தயாரிப்புக்களை மார்க்கெட்டில் விட எடுத்துக்கொள்ளும் ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டு இடைவெளியில் அதே மாதிரியான வேறு தயாரிப்புமார்க்கெட்டில் வந்து சக்கைப் போடு போடுகிறது. இவர்கள் உழைப்பு வீணாகிறது. இரண்டாவதாகக் கடைக்காரர்கள் குறிப்பிட்ட ஒருபிராண்டில் கமிஷன் கூடக் கிடைக்கும்போது மற்ற பிரபலமான பிராண்டைக் கேட்டாலும் வாங்குபவர்களிடம் இல்லை என்று சொல்லித் தமக்கு லாபகரமான பொருளையே விற்க முயல்வார்கள். தரமான பொருள் அதிக விளம்பரம் இவை மட்டும் போதாது. கண்களைப் பறிக்கும்படி 'பாக்' செய்யவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக அமல் நடத்தி இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நிற்கிறது மகாராஷ்டிரம். இதைப் பெருமையோடு கூறுகிறார் ஸ்ரீதர். இதற்கு விளம்பரம் பெருமளவு உதவியிருப்பதை விளக்குகிறார்.

கணிதத்திலும், புள்ளி விவர இயலிலும் பட்டதாரியான ஸ்ரீதர் இப்போது கம்ப்யூட்டர் மூலம் விளம்பரத் திட்டங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இவரது பட்டதாரி மனைவி உமாவும் கம்ப்யூட்டரில் சிறப்புப் பயிற்சி பெற்று, 'ஸீமன்ஸ்'' கம்பெனியில் வேலை செய்கிறார்.

-லட்சுமி கண்ணன்



மீண்டும் சுப்ரபாதம்!

லண்டனில் மேற்படிப்புக்குப்போன தேவி திரும்பி வந்ததும், அவளுக்கு அதுவரை கார்டியனாக இருந்த இதய நோய்க்காரரான சாம்பசிவம், அவளிடம் எஸ்டேட் - பாக்டரி நிர்வாகம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக விலகிக் கொள்கிறார். லீகல் அட்வைசர் பதவி வகித்த ராஜகோபால் தாமும் விலகுவதாகச் சொல்ல, அந்த இடத்துக்கு அவர் பிள்ளை கணேஷ் நியமிக்கப்படுகிறான். தேவி இக்கட்டான சமயங்களில் மாட்டிக் கொள்ளும்போதெல்லாம் கை தூக்கி விட்டுக் காப்பாற்றுகிறான். தேவி தனது லட்சியக் கணவனாக கணேஷை அடைய நினைத்தாலும் அவன் தனக்கு அதிகம் படிக்காத, ஏழையான, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருகிற, சாப்பாட்டு நேரத்தில் தொண தொணவென்று நச்சரிக்காத மனைவிதான் தேவை என்று சொல்லி விடுகிறான். தேவி இந்தக் கண்டிஷன்களை நிறைவேற்ற முன் வருகிறாள். கிளைமாக்ஸ் சீனில் மீண்டும் சுப்ரபாதம் ஒலிக்க, கூப்பிட்ட குரலுக்கு மட்டும் ஓடிவர முடியாத தேவியைச் சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வருகிறான் அதற்குக் காரணமான கணேஷ்.

நறுக்குத் தெறித்தாற்போல் வசனம் எழுதி, இயக்கி, ராஜகோபாலன் பாத்திரத்தில் சக்கைப் போடு போட்டிருக்கும் கதாசிரியர் ரமணிக்கு மேடை நடிப்பில் இது முதல் அனுபவமாம்; நம்ப முடியவில்லை. இன்னொரு 'விசு' உருவாகி வருவதை ஒவ்வொரு காட்சியிலும் உணர்த்துகிறார்.

டெல்லி கணேஷ்தான் கதாநாயகன் கணேஷ். மிடுக்கான தோற்றமும், நயமான குரலும் கைகொடுக்க, வெகு 'காஷுவ'லாக வசனத்தைச் சொல்லியே தமது இயற்கையான நடிப்பின் மூலம் படபடப்பில்லாத அந்தப் பாத்திரத்தை வெகு அழுத்தமாகச் செய்திருக்கிறார்.

தேவியாக ஸ்ரீலேகாவும், கதிர்வேலுவாக ராஜாவும் காரக்டருக்குத் தேவையான அளவு கச்சிதமாக நடித்திருக்கிறார்கள்.

ஒரு சீரியஸ் நாடகத்தில், ஒரு டாக்டரையும், சமையல்காரரையும் சிரிப்பு வெடிகளுக்காக மட்டுமே இணைத்திருந்தாலும், முறையே எஸ். ராகவனும், மனோகரும் நாடகத்தைக் கலகலக்க வைத்திருக்கிறார்கள்.

தேவியின் பங்களூர் டிக்கட்டையும், அவளுக்கு வந்த தந்தியையும் பார்த்துவிட்டு நிச்சயதார்த்தம் அன்று அவளை மணக்க மாட்டேன் என்று கணேஷ் அறிவிக்கிற சஸ்பென்ஸை முக்கியமாகக் கதையோடு இழைத்து விட்ட ரமணியைப் பாராட்ட வேண்டும்.

'டெல்லி' கணேஷின் ஓம் கணேஷ் கிரியேஷன்ஸுக்கு இது முதல் நாடகமாம். முதல்தர நாடகமும் கூட.

- சாருகேசி


ஆர்ஜெண்ட்டா-K
தவழ்ந்துவரும்,
தழுவிநிற்கும்
மென்மை...
ஒளிபடைக்கும் பிலிப்ஸ்
உங்கள் மனநிலைக்கு ஏற்ப மென்மையான,
இதமான ஒளிதரும். தெள்ளிய ஒளி. கண்கூசாது.
உறுத்தும் நிழல்கள் ஏற்படுத்தாது. படுக்கை
அறைகள், அலங்கார கண்ணாடிகளுக்கு
மேலே, குடும்பம் கூடிப்பேசும் அறைகள்--
இவற்றுக் கெல்லாம் ஏற்றது.
ஆர்ஜெண்ட்டா-K. மாலையில் வீடுதிரும்பும்
உங்களை வரவேற்கும் கனிவான விளக்கொளி.
PHILIPS
பிலிப்ஸ்
50 ஆண்டுகட்கும் மேலாக இந்திய
வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்
பீகோ எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் எலெக்ட்ரிகல்ஸ் லி

HTB-PEI-8565

ஜெயசிங்கன் மாளிகையில் தான் தங்கிக் கொள்வதாகக் கூறி அரச மாளிகையை முத்தரையருக்கே ஒழித்துக்கொடுத்த விஜயாலயன் அவரை எதிர்கொண்டழைக்க நகர வாசலுக்கே சென்று நின்றான். கொம்புகள் முழங்க, முரசுகள் அதிர, வீரர்களின் வாழ்த்தொலிகள் விண் அளாவ நகர மாந்தர்கள் பூவிதழ்களைச் சொரிந்து ஆரவாரிக்க, கோட்டைக் கதவுகள் திறந்து கொண்டன. முத்தரையர் புரவி மீது ஆரோகணித்து நகருக்குள் புகுந்தார்.

திரும்பின பக்கமெல்லாம் மாவிலைத் தோரணங்களும் வண்ணக் கோலங்களும் பட்டொளி வீசிப் பறந்த கொடிகளும் மக்களின் வாழ்த்தொலிகளும்




சேர்ந்து அளித்த வரவேற்பைக்கண்டு அவர் உள்ளம் நெகிழ்ந்தது. தஞ்சை, விஜயாலயன் வசப்பட்டாலும் மக்களின் மனம் இன்னும் தன்வயப்பட்டுத்தான் இருக்கிறது என்று மகிழ்ந்தார். ஆனால் 'முத்தரையர் வாழ்க' என்ற கோஷத்தைத் தொடர்ந்து சோழ வீரர்கள், 'இளவரசர் விஜயாலயன் வாழ்க' என்று முழங்கவும் மக்கள் அதற்கும் 'வாழ்க! வாழ்க!' என்று எதிரொலி எழுப்பக் கேட்டதும் அவர் முகம் சட்டென்று கறுத்தது.

''வரவேணும், வரவேணும்'' என்றான் விஜயாலயன்.

''வருகிறேன், வருகிறேன்! வரவேண்டிய விதமாக மற்றொரு சமயம் வருகிறேன்'' என்றார் முத்தரையர்.

''அப்போது வரவேற்க வேண்டிய விதமாக நானும் வரவேற்கிறேன். இப்போது நண்பராய்த்தானே வருகிறீர்கள்?''

முத்தரையர் எழுப்பிய ஹூங்காரம் ''ஆமாம்'' என்று சொன்னாலும் 'யார் யாரை வரவேற்பது? எந்த இடத்தில்? எனக்கு இப்படி ஒரு நிலையா?' என்ற ஆதங்கத்தை உள்ளடக்கியுமிருந்தது.



பரணி மீது கம்பீரமாக அமர்ந்திருந்த விஜயாலயன் வந்த வழி பார்க்கத் திரும்பினான். முத்தரையரை முன்னாலும் விடாமல் பின்தங்கவும் அனுமதியாமல் உடன் வருமாறு கவனித்துக் கொண்டான்.

''மன்னவா! அரச மாளிகை தங்கள் வருகைக்காகச் சித்தமாயிருக்கிறது. உத்தமசீலியும் தங்களை வரவேற்கக் காத்திருக்கிறான்.''

''ஓ! தஞ்சைப் பெருநகரைக் கைப்பற்றிக் கொண்டாலும் அரச மாளிகையை மட்டும் எனக்காக விட்டு வைத்திருக்கிறீர்களாக்கும்!''

''தாங்கள் திரும்பிச் செல்லும் நேரம் வரும்வரை அரச மாளிகையைத் தங்கள் மனையாகவே கருதலாம். தடை ஏதுமில்லை!''

முத்தரையர் முகம் பொலிவிழந்து கடுமையுற்றது. ஆனால் வெற்றிக் களிப்பில் மிதந்த விஜயாலயனோ சிரித்துக் கொண்டே, ''தாங்கள் இத்தனை கோபமாக முகத்தை வைத்துக் கொண்டால் என் நண்பராக வருகிறீரா அல்லது என்னை விரோதியாகவே இன்னும் கருதுகிறீரா என்ற ஐயம் மக்களுக்கும் சேனை வீரர்களுக்கும் ஏற்படுவது இயல்பு'' என்றான். இருவருக்கு மட்டும் கேட்கும் குரலில் உரையாடல் நடந்தது. மேலும் கிளர்ந்தெழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வேண்டா வெறுப்பாகப் புன்னகைத்தார் முத்தரையர். கரம் உயர்த்தி அசைக்கவும் செய்தார். அதைக் கண்ட மக்கள், ''முத்தரையர் வாழ்க!'' எனவும் ''ரவிகுல திலகன் வாழ்க'' எனவும் ஆர்கலியாக ஆரவாரம் செய்தனர்.

மாமனும் மருமகனும் கம்பீரத் தோற்றத்தில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதாகப் பேசிக் கொண்டனர். சிலர் உடையலங்காரத்தில் முத்தரையரே சிறந்து விளங்

குவதாகவும் வேறு சிலர் விஜயாலயன்தான் ஆபரணங்களின் பொலிவில் கண்ணைக் கவருவதாகவும் விவாதித்தனர்.

அரண்மனை வாயிலில் மங்கல ஆரத்தி முடிந்ததும் உத்தமசீலி பாய்ந்தோடி வந்து பெரியப்பாவைத் தழுவிக் கொண்டாள். ஒரு விம்மல் வெடித்தது. அவரும் தம் கண் கலங்குவதையும் நாத் தழுதழுப்பதையும் தவிர்க்க முடியாமல் திணறி, ''அசடே! எதற்காக அழுகிறாய்? நான்தான் வந்து விட்டேனே'' என்று ஆறுதலாக முதுகை வருடினார்.

சூழ இருந்தவர்கள் ஆனந்தக் கண்ணீர் என்று அனுமானிக்க உத்தரீயத்தால் அவள் கன்னங்களை ஒற்றி எடுத்தார். சுற்று முற்றும் பார்த்த அவர் கண்கள் யாரையோ தேடுவதை விஜயாலயன் உணர்ந்தான். ''எதையாவது மறந்து விட்டீர்களா என்ன?'' புரியாதது போலக் கேட்டான்.

''உள்ளே சென்று பேசலாமே'' என்று சமாளித்தார் முத்தரையர்.

அவர்கள் தனித்து விடப்பட்டபோது அவர் கரங்களில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டாள் உத்தமசீலி. ''பெரியப்பா என்னால் உங்களுக்கு எவ்வளவு துன்பம்? உடல் வருத்தம், மனத் துயரம், பொருள் விரயம்.''

''கண்ணே! அதெல்லாம் முக்கியமில்லை. நீ ஓலையில் எழுதியிருந்ததெல்லாம் மெய் தானா? விஜயாலயனை நீ மனமாரக் காதலிக்கிறாயா? அதைச் சொல்லு முதலில்!''

அவள் பாதம் பணிந்தாள்.

''அப்படி எழுதுமாறு என்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை. நானாகவே மனமுவந்து தான் எழுதினேன். தவறானால் மன்னியுங்கள்.''

குனிந்து அவள் தோள்களைப் பற்றி உயர்த்தினார். ''அசடே! இதில் மன்னிக்க என்ன இருக்கிறது! உனக்குத் தகுதியான ஒரு மன்னனைத்தானே தேர்ந்தெடுத்திருக்கிறாய்? இதில் நீ நினைப்பது போல் எனக்கு வேதனையோ வருத்தமோ என்ன இருக்க முடியும்? திருமணம் என்பது மகிழ்ச்சிகரமான வைபவம் தானே? உன் மகிழ்ச்சிதானே எனக்கு ஆனந்தம்!''

தலை நிமிர்ந்து அவரைப் பார்த்த உத்தமசீலி, ''மெய்யாலும் சொல்கிறீர்களா? உங்களுக்குக் கொஞ்சமும் என்மீது கோபமில்லையா?'' என்றாள்.

''ஒரு விதத்தில் கோபந்தான்! என்னை விட்டுப் பிரிய இத்தனை எளிதாக முடிவு செய்து விட்டாய் அல்லவா? ஆனால் அதனால் ஏற்படும் ஏமாற்றத்தை விட விஜயாலயனின் அதிர்ஷ்டத்தை எண்ணிக் குதூகலமடைகிறேன். கலை அரசியையும் எழிலரசியையும் ஒருருவில் கண்டு ஒரே சமயத்தில் தட்டிக் கொண்டு போகிறாரே!''

அவள் நாணித் தலை குனியவும் அவர் சிரித்தார். ''இளவரசே! என் மகளைப் பொன்னே போல் போற்றி கண்ணேபோல் காத்து வர வேண்டும் நீங்கள்!''

''பொன்னைப் போற்றவும் கண்ணைக் காக்கவும் தவறினாலும் உங்கள் பெண்ணை உயிருள்ள அளவும் நேசிப்பேன்.''

''கண்ணே! உத்தமசீலி! உனக்குச் சீதனமாகத் தஞ்சைப் பெருநகரையே தரத் தீர்மானித்து விட்டேன்; ஏற்றுக்கொள்'' என்றார் முத்தரையர்.

''என்னது!'' என்று அவள் வியக்க, ''என்னது'' என்று அவன் அதட்டினான். அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாதவராக அவர் தொடர்ந்தார்: ''உத்தமசீலி! உன்னை மதித்துப் போற்றும் முகமாக நீ சீதனமாகக் கொணர்ந்த தஞ்சையையே தனது தலைநகராக்கிக் கொண்டு இனி விஜயாலயன் நாடாள்வார்!''

அவரது ராஜ தந்திரத்தைப் புரிந்து கொண்ட விஜயாலயன் சிரித்தான். ஏளனமாய் ஒலித்தது. ''என்னுடைய தஞ்சையை எனக்கே வழங்குகிறீரா? கொடை வள்ளல் தான்!''

''இழந்த ஒன்றைத் திரும்பப் பெற முயலாமல் விட்டுக் கொடுப்பதே சகைக்குச் சமம்தானே!''

''இப்படி ஆறுதல் தேடுவது கோழைத்தனம்!''

''என்ன செய்ய? புலித்தனமெல்லாம் நரித்தனமாக மாறும்போது வீரத்தனமெல்லாம் கோழைத்தனமாக மாற வேண்டியது தான்!''

பற்களை நறநறத்தான் விஜயாலயன். வார்த்தைகள் தடிப்பதை உணர்ந்த உத்தமசீலி நடுங்கினாள். ''பெரியப்பா தயவு செய்து....''

''நீ கெஞ்ச வேண்டாம் கண்ணே! நானே எனக்கு வாய்ப் பூட்டுப் போட்டுக் கொள்கிறேன். விஜயாலயா! இங்கு நான் தனிமையில் கூறியதை அவை அறியப் பேச மாட்டேன் என்று வாக்குறுதி தருகிறேன். நீங்கள் விடை பெறலாம். வேதியரை அழைத்துத் திருமண நாள் குறிக்கவும் சொல்லலாம்.''

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணிக்கு பிராமணர்கள் மீது மாறாத வெறுப்பு இருக்கின்றபோது, சமீபத்தில் கோவை சீரங்கத் தெருவில் ஒரு ஹோட்டல் வாசலில் "கி. வீரமணி பிராமணாள் ஹோட்டல்" என்ற போர்டைக் கண்டபோது மனசுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

— [illegible]

இந்த உறுதிமொழியால் சற்றே ஆறுத லுற்ற விஜயாலயன் ''வருகிறேன்'' என்றான் அழுத்தமான குரலில்.

''ஒரு காரியம்'' என்றார்.

''உம்'' என்றான். அதன் சூடு உத்தம சீலியின் நெஞ்சத்தைத் தகித்தது. பயந்தாள்.

''வாசலிலே, 'எதைத்தேடுகிறேன்?' என்று வினவினீர்களே; மெய்யாலுமே புரியாமல் தான் கேட்டீர்களா?''

''தேடியது திவாகரனைத்தானே?''

''ஆமாம்.''

''வருவான்.''

''அவன் எங்கிருக்கிறான்? எப்படி இருக்கிறான்? எப்போது வருவான்?'' — பாசக் குரலெழுப்பிப் பரிதவித்தார்.

''பாதாளச் சிறையில் எவ்வளவு வசதியாகக் காலத்தை ஓட்ட முடியுமோ அவ்வளவு சுகமாக இருக்கிறான். திருமணத்தன்று மங்கல நாண் உத்தமசீலியின் கழுத்தில் ஏறியதும் தங்கைக்கு ஆசி கூற அவசியம் வருவான்.'' அவன் வேகமாய் நடந்து விட்டான்.

''கெட்டிக்காரன்! எவ்வளவு முன்னெச்சரிக்கை! ஒருவேளை நான் வாக்குத் தவறி விடுவேன் என்பதால் திவாகரனைப் பிணையாக்கி யிருக்கிறான்'' என்ற முத்தரையர் திடீரென்று எழுந்து, சந்தேகத்துடன் உத்தமசீலியை நோக்கினார்: ''கண்ணே! உன் சகோதரனை விடுவிக்க வேண்டும் என்பதற்காக நீ தியாகம் செய்கிறாயா, என்ன?''

''அப்படி யொன்றுமில்லை பெரியப்பா!'' என்ற உத்தமசீலி நிலம் நோக்கினாள். ''எவ்வளவு சீக்கிரம் என் கழுத்தில் மங்கல நாண் ஏறுகிறதோ அவ்வளவுக்கு நான் அண்ணாவுக்காக மட்டுமின்றி எனக்காகவும் மகிழ்வேன்!''

● ● ●

ஜெயசிங்கனிடம் மானசீகமாக மன்னிப்பு வேண்டினான் விஜயாலயன். ''கொடூரமான முறையில் நீ கொல்லப்பட்டு அதிக நாட்கள் ஆகவில்லை; தெரியும் எனக்கு. 'இதற்குள் உனக்குத் திருமணமா?' என்று கேட்டு என்னை ஏசாதே. எனக்கு வேறு வழியில்லை. ராஜரீக காரியங்களில் இப்படித்தான் சில அனர்த்தங்கள் நடக்கும். திருமணத்தைத் தாமதிப்பது எனக்கோ சோழ நாட்டின் எதிர்காலத்துக்கோ நல்லதல்ல, புரிகிறதா?''

''இளவரசே! பழையாறை சென்ற தூதர்கள் திரும்பி விட்டார்கள்'' என்றான் சேனாபதி அரையன்.

''என்ன செய்தி?''

''பிரபோ! தங்கள் தந்தையாரும் பல்லவ மாதண்ட நாயகர் பாராசிரயனும் தங்கள் வெற்றிகள் குறித்தும் திருமணம் பற்றியும் அறிந்து பெரு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தங்களுக்கும் தங்கள் இதய ராணிக்கும் நல்லாசிகளை அனுப்புகின்றனர். மன்னர் நோயுற்ற உடலுடனும் மாதண்ட நாயகர் பழுதுற்ற காலுடனும் இருப்பதால் நேரில் வருவதெனில் தாமதமாகும். இதற்காகத் திருமணத்தை ஒத்திப் போட வேண்டாம் குறித்த நாளில் மங்கல வேளையில் நடந்தேறட்டும் என்று அனுமதி வழங்கி ஓலை விடுகும் அனுப்பியுள்ளனர். சிறிது காலத்தில் இங்கு நடக்கப் போகும் தங்கள் தந்தையாரின் மகுடாபிஷேகத்துக்கும் கோயில் கும்பாபிஷேகத்துக்கும் அவசியம் வருவதாக பாராசிரயன் குறிப்பிட்டுள்ளார்.'' அதிகார பூர்வமான ஓலையை நீட்டினான் அரையன். அதை மேலோட்டமாகப் பார்த்து விட்டுத் திருப்பித் தந்த விஜயாலயன் ''மேலே ஆகவேண்டியதைக் கவனியுங்கள்'' என்று ஆணையிட்டான்.

● ● ●

கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டு முத்தரையரை விஜயாலயன் எதிர்கொண்டு அழைத்த தினத்தில் காணப்பட்ட கோலாகலத்தை விடப் பல மடங்கு அதிகமாகத் தஞ்சை நகரமே அமர்க்களப்பட்டது. பரமானந்தத்தில் திளைத்த தஞ்சை மக்கள் தங்களை மறந்த நிலையில் கூத்தாடினர்; பாடினர்; சிரித்துக் கும்மாளமிட்டனர். வீதியெல்லாம் திருவிழாக் கோலம் பூண்டன. வீடுகளெல்லாம் திருமணக் கோலம் கொண்டன. ஆடல் பாடல்களும் சிலம்ப விளையாட்டுக்களும் செப்பிடு வித்தைகளும் நடந்து மக்களை மேலும் உற்சாகப்படுத்தின. குலை


கவிஞர் வாலியிடம் ஒரு நண்பர் கேட்டார் "ஏன் இந்தப் புன்னகை?" என்று. ராமாயணத்தில் வரும் வாலி போல எதிராளியின் பலத்தில் பாதியைப் பெற்றது போல, நான் பார்க்கும் அறிவாளிகளின் திறமையைப் பாதி கைக்கொள்ளவே என்று இந்தப் புன்னகையை அணிந்து கொண்டதாக வாலி விளக்கினார்.

அப்படி ஒன்றும் உங்கள் அறிவு அதிகமாக வந்துவிட்டதாக தெரியவில்லையே என்று கிண்டல் செய்தார் நண்பர்.

வாலி சொன்னார்.

"இன்னும் நான் ஒரு அறிவாளியும் சந்திக்க வில்லை என்று தெரிகிறது".

தி. உமாபதி ராஜா
புதுச்சேரி - 1




சிறுவன்: ''ஏன் அப்பா! புலிக்கும் கணக்குக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா?''
தகப்பனார்: ''கிடையாது... ஏன் கேட்கிறே?''
சிறுவன்:'' எதிர் வீட்டு ராமு அடிக்கடி 'எங்க அம்மா கணக்கிலே புலி' அப்படின்னு சொல்றான்.''

—என். எஸ். வி. குருமூர்த்தி

தள்ளிய வாழைகளும், குருத்தோலைத் தோரணங்களும் பூரண கும்பங்களும் வாசல்களை அலங்கரித்தன. பாவை விளக்குகளும் பல வகைத் தீபங்களும் நட்சத்திர மண்டலமே தஞ்சையில் வந்திறங்கி விட்டதோ என்று எண்ணும்படி இரவில் ஒளிர்ந்தன. சந்திரலேகையிலிருந்து முத்தரையரின் உற்றார் உறவினர்களும் அரண்மனை அதிகாரிகளும் வந்து சேர்ந்து விட்டனர். திருமண மண்டபத்தில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளின் வர்ணனைகளை வாய்மொழியாக ஒருவர் மாற்றி ஒருவர் கூறிவந்து வெளியே பெரு வெள்ளமாகத் திரண்டிருந்த மக்களிடையே பரப்பினர்.

உத்தமசீலியின் அலங்காரமோ நீண்ட நேரம் நீடிக்க, சிலர் அவசரப்படுத்துவதும், துரிதப்படுத்துவோரைச் சிலர் அடக்குவது மாகத் தொடர்ந்தது! இதற்கேற்ப தோழிகள் சிரித்தும் சிணுங்கியும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். உத்தமசீலி, 'போதும், போதும்' என்று கூறுவதும், கூடவே, ''இது சரியில்லை, அது பொருத்தமில்லை'' என்று அலங்காரத்தில் குறை காணுவதுமாக இருந்தாள். இதற்கேற்ப அவள் மன நிலையும் இந்த உடலுக்கு இதுவரை புரிந்திராத மர்மங்களை விடுவிப்பதிலே ஒரு எதிர்பார்ப்பும் அதே எதிர்பார்ப்பினால் விளைகின்ற ஓர் அச்சமும் இருபுறமும் இழுக்க ஊசலாடிக் கொண்டிருந்தது. விநாடிக்கு விநாடி அவள் இதயத் துடிப்பு அதிகரித்து வந்தது.



பட்டுப் பீதாம்பரங்களும் பொன்னாபரணங்களும் வைரவைடூரியங்களும் பிரகாசிக்க ரவிகுலதிலகன் கம்பீரமாக நடந்து வந்து மண மேடையை அலங்கரித்தான். சற்று நேரத்தில் தன் அருகில் நாணப் புன்னகையுடன் வந்தமர்ந்த உத்தமசீலியைப் பார்த்து நெஞ்சு வெடித்துவிடுமளவுக்குப் பூரித்துப் போனான். 'இத்தனை அழகும் அள்ள அள்ளக் குறையாத பருகப் பருகத் தெவிட்டாத இத்தனை எழிலும் எனக்கே பரிபூரணமாக இன்னும் சில விநாடிகளில் சொந்தமாகப் போகிறது' என்றெண்ணியபோது அவன் மேனி சிலிர்த்தான்.

தீயை வலம் வந்து அமர்ந்தனர். மந்திர கோஷங்கள் எழுந்தன. வாத்தியங்கள் முழங்கின. மங்கல நாண் உத்தமசீலியின் கழுத்தில் முடியப்பெற்று விம்மிய நெஞ்சகங்கள் மீதாக மேலும் ஒரு சிறப்பு ஆபரணமாகத் தவழ்ந்தது. வாழ்த்தொலிகள் திருமண மண்டபத்தை அதிரச் செய்தன.

மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்ட அந்த நேரத்தில் உத்தமசீலியும் தன்னை மறந்து இன்பக் கடலில் மிதந்த வேளையில் முத்தரையர் மட்டும் பாசத்தால் உந்தப்பட்டு மறவாமல் மருமகனை அணுகி ஆசி கூறிய கையோடு கேட்டார்:

''இப்போதாவது திவாகரனை நாங்கள் காணலாமா?''

''ஆகட்டும்'' என்றான்.

உத்தமசீலி, முத்தரையர், அவர் உற்றம் சுற்றம், அரண்மனை அதிகாரிகள் ஆகிய அனைவரது எதிர்பார்ப்பும் மையப்பட்டுக் குவிந்தன.

விஜயாலயனின் உத்தரவு பெற்ற காவலர் சிலர் மண்டபத்தின் பின்புறம் ஒரு திரையை விலக்கினர். அதன் பின்னால் அதுவரை மறைந்திருந்த ஒரு கதவைத் திறந்தனர்.

திவாகரன் வெளியே வந்தான்.

மண்டபத்தில் இருந்த அனைவரும் வாயடைத்துப் போக, 'வீல்' என்று அலறிய உத்தமசீலி மயங்கிச் சாய்ந்தாள். அவளைத் தாங்கிய விஜயாலயனை வெறுப்பைக் கக்கும் விழிகளால் சுட்டெரித்தார் முத்தரையர்.

(தொடரும்)

"எங்கள்
போர்ஹென்ஸ் ஃப்ளோரைடு
குடும்பம்!"



ரவி விரும்புவது இதன் சுவை.
அவனது தந்தைக்குத் தேவை பற்களின் உறுதி.
நானோ, இதை ஈறுகளுக்கென்றே உபயோகிக்கிறேன்.

ஈறுகளுக்கு போர்ஹென்ஸ் பாதுகாப்பு
ஈறுகள் பலமின்றி இருந்தால் உறுதியான பற்கள்கூட ஆட்டம் கண்டு விழுந்துவிடும். போர்ஹென்ஸிலுள்ள விசேட சக்திவாய்ந்த அஸ்ட்ரிஞ்ஜெண்ட ஈறுகளை பலப்படுத்துகிறது.

பற்களுக்கு ஃப்ளோரைடு பாதுகாப்பு
குழந்தைகளில் ஃப்ளோரைடு பற்களின் எனாமலை பலப்படுத்தி சொத்தை ஆவதைத் தடுக்கிறது.
பெரியோர்களில் ஃப்ளோரைடு, பற்சொத்தையை விளைவிக்கும் கிருமிகளை எதிர்க்கிறது.



போர்ஹென்ஸ் ஃப்ளோரைடு
ஈறுகள் பற்கள் இரண்டையுமே பாதுகாக்கிறது.

இது நுரை தருகிறது!



284-F 203 TAM

ஆறுவாரக் கதை

கடலலைகள், சர்ச், கோயில் வாசலில் தூங்கும் பூசாரி, தென்னந்தோப்பு, முப்பது நாற்பது வீடுகள் - இவை மணல்காடு கிராமம். கனகசபை வருகிறான். மிடில் ஈஸ்ட் சென்று மனைவி கிரிஜாவுக்காக நிறைய சம்பாதித்துப் பரிசுகளுடன் விடுமுறையில் ஆசை ஆசையாக வருகிறான். வீடு பூட்டியிருக்கிறது. திறந்து பார்த்தால் ஒரு சின்னக் கடிதம் அகப்படு கிறது. "விடிவதற்குள் வா - ர. சா."

பக்கத்து வீட்டு உன்னி, அவன் அக்கா தேவகி இருவருக்கும் கிரிஜா பற்றித் தெரியவில்லை. ஊரில் விசாரிக்க, மக்கடைக்காரர், சர்ச்சு பாதிரியார், கோவில் பூசாரி, ரத்தினசாமி, சதாசிவம் எல்லாரும் ஆளுக் கொன்று கூறத் தெளிவு பிறக்கவில்லை.

உன்னி துபாய் போகத்துடிக்கிறான். ஊராரின் மத மாற்றங்களுக்கு மதத் தலைவர்கள் துடியாயிருக் கிறார்கள்.

கிரிஜாவின் அலமாரிகளை ஆராய்ந்து எல்லா நகை களோடும் அவள் போயிருப்பதை உணர்கிறான். ஒரு ஃபோட்டோ. குங்குமத்தீற்றுடன் சாமியார். அதை எடுத்துக்கொண்டு மறுநாள் கோயில் பூசாரியைப் பார்க்கப் போகும் போது வழியில் சிறு கூட்டம். அவர்கள் கவனத்தைக் கவர்ந்திருப்பது ஒரு நாய். அதன் வாயில் ஒரு புடைவைத்துண்டு. கிரிஜாவின் புடைவையோ?

பூசாரி ஃபோட்டோவில் இருக்கும் சாமியார் பற்றி விவரம் கூற, அவரைக் காண பஸ் பிடித்து ரசவல்லி புரம் சென்றால், சாமி நாத தம்பிரான் அவனை நீண்ட நேரம் காக்க வைத்துப் பின்னர் அழைக் கிறார்.

"என் மனைவி பற்றி ஒரு விஷயம் கேட்க வந்தேன்" என்றதுமே "கிரிஜா தானே" என்கிறார்.



விடிவதற்குள் வா

சுஜாதா

7

கனகசபை தன் மனைவியின் பெயரைக் கேட்டதும் திகைத்துப் போனான். சுவாமி அவனைப் புன்னகையுடன் பார்த்து, "நீ வரு வேன்னு தெரியும் எனக்கு" என்றார்.

"எப்படி சாமி உங்களுக்கு ஞாபகம் இருக்கு?"

"உன் மனைவியுடைய ஆசையால!"

"ஆசையா?"

"பொன்னாசை! உன் சம்சாரத்துக்குப் பொன் மேலே ஆசை அதிகமில்லையாப்பா?"

"ஆமாங்க. நகை நகைன்னு கொஞ்சம் அல்லாடுவா."

"மணற்காட்டில் இந்து சமயப் பிரசாரத் துக்காகப் போயிருந்தப்ப இந்தப் பொண்ணு என்னைத் தனியா வந்து சந்திச்சு 'சாமி நீங்க பொன் கொடுத்தா ரெட்டிப் பாக்குவீங்களாமே. சனங்க சொன்னாங்க. எனக்கு இந்தப் பொன்னை இரட்டிப்பாக்கிக் கொடுங்கன்னு ஒரு கைக் குட்டை நிறைய நகைகளைக் கொண்டு வந்து என் முன்னால காட்டினு! பைத்தியக்காரப் பொண்ணு அதுக்குத் தெரியாது...

"எனதென்பதும் பொய் யானெனல் பொய்
எல்லாம் இறந்த இடங்காட்டும்
நினதென்பதும் பொய் நீயெனல் பொய்"னு இருக்கிற துறவி நானு. அம்மா உனக்கு யாரு சொன்னாங்கன்னு கேட்டேன். ஊர்ல பேசிக் கிட்டாங்க. கண்ணால பார்த்ததாச் சொன் னாங்கன்னா. ஏம்மா இப்படிப் பேராசை. உன் புருஷனைக் கூட்டிவான்னேன். அப்ப தரையில உக்காந்துக்கிட்டு அழ ஆரம்பிச் சிருச்சு. புருசன் வருசக் கணக்கா அரபு தேசம் போயிருக்காரு. நான் தனியாக் கிடந்து தவிக்கிறேன்னு என்னவோ சொல் லிச்சு. அந்தப் பொண்ணு கொஞ்சம் சரி யில்லேப்பா! அதை நீ தனியே விட்டுட்டுப் போயிருக்கக் கூடாது. ஒரு பக்கம் நகை ஆசை. புத்தி சரியில்லே. அதை நீ கூட்டிக் கிட்டுப் போயிருக்கணும். சரி. அதுக்கு

ஆறுதல் சொல்லலாம், தாயுமானவர் பாடல் களைக் கொஞ்சம் சொல்லித் தரலாம்னு சாயங்காலம் வரச் சொல்லி யிருந்தேன். வரலை.''

''சாமி, இந்தக் குறிப்பை நீங்கதான் எழுதியதா?''

''என்ன குறிப்பு?''

'''விடிவதற்குள் வா.ர.சா'ன்னு போட்டு ஒரு துண்டுக் காகிதம் அவகிட்ட இருந்தது.''

''அதை நான்தான் எழுதியது. சாயங் காலம் வரச் சொல்லி யிருந்தேன். காலைல நாகர்கோவில் போக வேண்டி யிருந்தது. திரும்ப வர நேரம் ஆகும்னு 'விடிவதற்குள் வா'ன்னு பூசைக்கு வரச் சொல்லி எழுதி யிருந்தேன். அந்தப் பொண்ணு வரவே இல்லை.''

''சாமி அவ எங்க இருக்கா இப்ப?''

''எனக்குத் தெரியாதப்பா. அந்தக் குறிப்பு அனுப்பிய பிற்பாடு அது வரவே இல்லை. ஆறு அது சரியில்லை. ராத்திரி வேளையிலே நகைங்களை அத்தனையும் துணி யில சுத்திக்கிட்டு எங்கிட்ட வந்தப்பவே-தெரிஞ்சு போச்சு எனக்கு. நல்ல மன வைத்தியர் கிட்டக் காட்டி அதுக்குச் சிகிச்சை செய்யப்பா!''

''சாமி, அவளைக் காணவே காணமே முதல்ல! அவளைக் கண்டு பிடிச்சாத்தானே? அவ எங்கே?''

''தம்பி, எங்கிட்ட ஏதாவது குறி கேக்க வந்தியா? நான் அப்படிப்பட்ட சாமியார் இல்லேப்பா. ஏதோ மடத்தைப் பார்த்துக் கிட்டு, திருவாசகம், தேவாரம் சொல்லிக் கிட்டு, இந்தக் கோயிலைப் புனருத்தாரணம் செய்துக்கிட்டு, இந்து சமயத்துல ஆர்வத்தை வளர்த்துக்கறதுக்காகச் சொற்பொழிவு செய் துக்கிட்டு இருக்கிற பண்டாரம்பா நானு!''

''இல்லை சாமி, நான் உங்களைக் குறி கேக்க வரலை. எனக்கு எல்லாமே குழப்பமா இருந்தது.''

''நீ முதல்ல என்ன செய்யணும்? போலீஸ் கிட்ட ஒரு புகார் கொடுக்க வேண்டாமா? இந்த மாதிரி காணமப் போயிட்டான்னு!''

''அவ காணமப்போயிட்டான்னேஎனக்குத் தீர்மானமாச் சொல்ல முடியலையே. எங் கிட்டக் கோவிச்சுட்டு எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற மாதிரி அயலூருக்குப் போயிருப் பாளோன்னுதான் எனக்குத் தோணுது. வேற ஒண்ணும் நினைக்க விரும்பலை.''

''வேற ஏதும் ஆயிருக்காதப்பா! திருக் கருணையில நம்பிக்கை வை. களைச்சு வந் திருக்க! மடத்திலேயே சாப்பிட்டுட்டுப்-போயிரு என்ன?''

''சரி, அப்படியே ஆகட்டும் சாமி.''

தாழ்வாரத்திலே பெரிசாக இலை போட்டு, பராபரக் கண்ணி சொல்லிவிட்டு மடத்து ஆசாமிகள் சுமார் முப்பது பேர்சம்பிரம மாக உட்கார்ந்து கொண்டுசாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்ததும் சுவாமி பிளாஸ்டிக் பையில் பிரசாதம் கொடுத்து. ''கவலைப்



படாதே" என்று சொல்லி வழியனுப்பினார். ராத்திரியே பஸ் பிடித்து நாகர்கோயில் போய்ச் சேர்ந்தான். அவளுடைய அம்மா வீட்டுக்குப் போனான்.

"கிரிஜா வரலியா?" என்று கேட்டாள் மாமியார்.

"அவளைத் தேடிக்கிட்டுத்தான் வந்திருக்கேன்."

"எப்ப ஊர்ல இருந்து வந்தீங்க?"

"நேத்துத்தானுங்க. வந்ததில இருந்து அவளைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன்."

"போன்ல கேட்டாங்களே. உங்களுக்குத் தகவல் வரலியா?"

ஒரு நண்பர் ஒரு ஹோட்டலுக்குச் சென்று சாப்பிடப் போனார். தோசைக்கு ஆர்டர் கொடுத்தார். எதிரில் ஒரு அறிவிப்புப் பலகை:

"இன்றுமுதல் தோசைக்கு சர்க்கரை கிடையாது" - என்று எழுதியிருந்தது. தோசை வந்தது. 'கொண்டு வா சட்னி கொண்டு வா மிளகாய்த்தூள்' என்று வரவழைத்தார்.

பிறகு இன்னும் ஒரு தோசை ஆர்டர் கொடுத்தார். தோசை வந்தது. 'சர்க்கரை கொண்டுவா' என்று கூறினார்.

சர்வர் எதிரிலிருக்கும் அறிவிப்புப் பலகையைச் சுட்டிக் காட்டினார். முதல் தோசைக்குத்தானே சர்க்கரை கிடையாது. இது இரண்டாவது தோசையாயிற்றே - சர்க்கரை கொண்டுவா' என்றார் அவர்.

"ஆகவே எதையும் தெளிவுபடச் சொல்ல வேண்டும்."

ஸ்ரீ வாரியாரின் கந்தபுராண விரிவுரையில் கேட்டவர்

எம். எஸ். பாலசுப்ரமணியன்

தென்பாதி - சீர்காழி

"இல்லைங்க. அவ கடைசியா எப்ப வந்தா இங்கே?"

"வந்து ஒரு நாற்பது நாற்பத்தைந்து நாளாயிருக்குமே. அதும் ஒரு நாளைக்கு வந்து, வழக்கம்போல சண்டை போட்டுட்டுத் தான் போனா." கிரிஜாவின் தாய் கிரிஜாவின் ஆயாசமுள்ள பிரதி போல இருந்தாள். "எல்லாம் பழைய பாடம்தான். 'ஏன் என்னை அங்க கட்டிக் கொடுத்தே? தனியாத் தவிக்கிறேன்! விட்டுட்டுப் போயிட்டாரு! விட்டுட்டுப் போயிட்டாரு'ன்னு. அப்புறம் நகைகளையெல்லாம் கடைல கொடுத்து எடை பார்த்துப் புதுப்பிச்சுக்கிட்டா. சேதாரம் போக பாலிஷ் பண்ணினா. சேதாரம் போக புதுசு புதுசாப் பண்ணிக்கிட்டா. ஒரு நாளிலே திரும்பப் போயிட்டா. சாப்பிட்டீங்களா?"

"சாப்பிட்டாச்சம்மா."

"ராத்திரி தங்குவீங்களா?"

"இல்லைம்மா. கிளம்பிப் போறேன்."

"எனக்கென்னவோ கவலையா இருக்குதுங்க. ஊர்ல ஏதாவது தகவல் தெரிஞ்சுதா, எங்க போயிருப்பா?"

"உங்களைக் கேக்கலாம்னுதான் வந்தேன். சிநேகிதங்க யாராவது அல்லது வேற உறவுக்காரங்க..."

"இல்லைங்களே. அப்படி யாரும் இல்லைங்களே... அந்தப் பொண்ணுக்கு எத்தனை புத்தி சொன்னேன்!"

"இந்தப் பக்கம் நான் போனப்புறம் வந்தா குமாரி ஸ்டோர்ஸ் மணிக் கூண்டுக்குப் பக்கத்திலே இருக்குது பாருங்க. அங்க தகவல் சொல்லிருங்க. எனக்கும் தகவல் கிடைச்சா சொல்றேன்."

"சாப்பிடாமப் போறீங்களே."

"இல்லைங்க. ரசவல்லிபுரம் மடத்திலே சாப்பிட்டுட்டுத்தான் வரேன்."

"மாப்பிள்ளை. அது ஏதாவது தப்பா செய்திருந்தா மன்னிச்சுக்குங்க. கோவிக்காதீங்க."

"முதல்லே ஆள் கிடைக்கட்டும்."

இப்போது அவளைப் பற்றிய கவலை அவனை முழுவதும் நிரப்பியிருக்க பஸ் ஸ்டாண்டுக்கு வந்து கடைசி பஸ் போய்விட்டதால் மணிக் கூண்டுக்கு அருகில் ஒரு ஹோட்டலில் ரூம் எடுத்தான். தூங்க முடியவில்லை. கன்யாகுமாரி சூரியோதயத்துக்குச் செல்லப் போகிறவர்கள் கொட்டம் அடித்துக் கொண்டிருந்தார்கள்.


மின்விசிறி கிரீச்சிட்டுக் கொண்டிருக்க எங்கே போயிருப்பாள் என்கிற கவலை பூர்ணமாகி விட்டது. போலீஸிடம் 'சொல்லித் தான் ஆகவேண்டும். நாளை அதைப் பற்றித் தீர்மானித்துவிடலாம். குமாரி ஸ்டோர்ஸ் சேதுமாதவன் கடையை மூடினதும் ராத்திரி ஓட்டல் அறையில் கனகசபையை வந்து பார்த்தார். "என்ன எப்ப வந்தே?"

"நேத்துத்தான் சேது. பெண்டாட்டியைத் தேடிக்கிட்டிருக்கேன்."

"அப்ப நான் கேள்விப்பட்டது சரிதானா?"

"என்ன கேள்விப்பட்டே?"

"வந்து...." – சேது சற்றுத் தயங்குவது போல இருந்தது.


சென்னை
விமான
நிலையம்

''என்ன சேது?''

''இல்லே. இது வேற விஷயம். நான் எதையோபோட்டு எதையோகுழப்பறேன்.''

''என்ன சேது. சொல்லு! என் ஆர் வத்தைக் கிளப்பி விட்டுட்டுச் சும்மா இருக் காதே.''

''இதப் பாரு. இதெல்லாம் வதந்தி. ரத்தினசாமிதான் சொன்னான். இல்லே. ரத்தினசாமி இல்லே. மணக்காட்டுப் பயல் களிலே யாரோ ஒருத்தன்தான் சொன்னான். கன்யாகுமரில தனியா கடலோரத்தில ஒரு பொம்பளையப் பார்த்தானாம். அதும் எப்ப? ராத்திரி! ஏதோ தலே விரிச்சாப்பல நடந்து போய்க்கிட்டு இருந்ததாம். கிட்டப் போய்ப் பார்த்தா அசப்பில நம்ம கனக சபை பெண்சாதி மாதிரி இருந்ததுன்னான். என்னடா உளர்ற. கனகசபை பெண்சாதி இங்க எங்கடா தனியா வருவான்னு கேட் டேன். ஒருவேளை இந்த நாகர்கோவில்ல அவங்க அம்மா வீட்டுக்கு வந்திருக்கலாம்னு நினைச்சேன். உங்க மாமியார் வீடு நாகர் கோயில்தானே இருக்கு!''

''ஆமா சேது இது எப்ப?''

''எது?''

''கன்யாகுமரியில அவளை யாரோ பார்த் தாங்கன்னியே.''

''அது ஆயிருக்கும் ஒரு மாசம். நீ இதைப் பெரிசா நினைச்சுக்கிட்டுக் குழப்பிக்காதே. இது வேற யாராவதா இருக்கலாம்.''

''இல்லே சேது. இது அவளாக்கூட இருக் கலாம். ஆச்சரியப்பட மாட்டேன்.''

விடை:

இ. உமாபதி ராசா, என். எஸ். முத்து கிருஷ்ண ராஜா —எஸ். வி. சேகர்

கே. எஸ். கணபதி சுப்பிரமணியம், 'இளவல்' ஹரிஹரன், எம். எஸ். பாலசுப்பிரமணியன் —சிவகுமார்

பொன்மலை பரிமளம் —விசு

ஆர். கோபாலன் —சுகாசினி

தொகுப்பு: **நிரஞ்ஜனி**

''என்ன சொல்றே நீ?''

''எனக்கு ஒண்ணுமே சொல்லத்தெரியலே. என் பெண்டாட்டியைக் காணம். அவ்வளவு தான்.''

ஓட்டல் அறையின் பால்கனியிலிருந்துகீழே பார்த்தான். ஷட்டர்களை மூடிக் கொண் டிருந்தார்கள். கட்டபொம்மன் பஸ்கள் டிப்போ திரும்பிக் கொண்டிருந்தன. உண்ணி பாதி மூடியிருந்த கதவில் நுழைந்து உள்ளே நுழைந்து ரூம் விசாரிப்பதைப் பார்த்தான்.

(தொடரும்)



அருள் வாக்கு...

நமக்கு ரொம்பவும் பிரியமாக பதி அல் லது பத்தினி, புத்திரர்கள் இருந்தால் நாம் போனாலும் நமக்கு வேண்டியவர்களான அவர்கள் தீர்க்காயுஸுடன் இருக்க வேண்டு மென்று ஆசைப்படுகிறோம். ''நம் கண் முன் அவர்கள் போகப்படாது'' என்று வேண்டிக் கொள்கிறோம். அவர்களுக்கு உடம்புக்கு வந்துவிட்டால் ராக்கண் முழித்து, எத்தனை வைத்தியம் முடியுமோ அத்தனையும் பார்த்து, அதற்காக என்ன செலவானாலும் செய்கிறோம். பாபர் அல்லாவுக்கு வேண்டிக் கொண்டு தன் உயிரைக் கொடுத்தே ஹுமா யூனைச் சாவிலிருந்து மீட்டார் என்று படித் திருப்பீர்கள்.

இப்படியாகத் தன்னுடையவும் தனக்கு வேண்டியவர்களுடையவுமான சரீரத்தை ரட்சிப்பதும், ஆயுசை நீடித்துக் காப்பாற் றிக்கொள்ள முயல்வதும் ஸகல பிராணி களுக்கும் ஆழமாக வேரோடிப்போன இயற் கையாயிருக்கிறது. மனுஷ்யன் மட்டுமல்ல, எந்தப் பிராணியுமே ஒரு சின்ன புழுவும் எறும்புங்கூட ஜீவனை ரக்ஷித்து வைத்துக் கொள்ள எந்தப் பாடும் படத் தயாராயிருக் கிறது.

இயற்கையை முறித்துக் கொண்டு போய் இசகு பிசகாக்கிக் கொள்ளாமல் இயற் கையை அநுசரித்தே போய் அதை ஆத்மா வின் வழிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வளைத்துக் கொள்வதுதானே நம் ஆன்றோர் நமக்குத் தந்துள்ள ஏற்பாடு? கல்யாணம், குழந்தை குட்டி பெறுவது, உத்யோகம் எல்லாவற்றையும் இயற்கை நடைமுறை என்ற இரண்டுக்காகவும் ஒப்புக் கொண்டு இவற்றையும் சாஸ்த்ரோக்தமாகப் பண்ணிப் பக்குவமாக்குவதுதானே அவர்கள் வகுத்த வழி? இதற்காகவே வியாதிகளைப் போக்கிக் கொண்டு தீர்க்காயுசுடன் வாழ்வதற்கான ஆயுர்வேதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராசாரிய சுவாமிகள்

மறக்கமுடியாத ஒரு மேதை

சுற்றமும், நண்பர்களும் குழுமி இருக்க வீட்டில் மங்கலம் ததும்பிக் கொண்டிருக்கிறது. வீட்டுப் பெரியவருக்கு அறுபதாண்டு நிறைவு விழா... திடீரென பரபரப்பு.... போலீஸார் புகுந்து பெரியவரைக் கைது செய்து அழைத்துச் சென்று விடுகின்றனர்... விசாரணையே இல்லாமல் பெரியவர் பல மாதங்கள் சிறையில் வைக்கப் படுகிறார்....

நிகழ்ச்சி நடந்தது 1942ம் ஆண்டில். வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதாகக் கைது செய்யப்பட்டவர் பிரபல வழக்கறிஞரும், விடுதலைப் போராட்ட காங்கிரஸ் வீரருமான திரு கே. பாஷ்யம்.

இவ்வாண்டு செப்டம்பர் 9ம் தேதி அவரது நூற்றாண்டு விழா.

ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, சட்டம் பயின்று, பிரபல வழக்கறிஞர் வி. வி. தேசிகாச்சாரியிடம் நுணுக்கங்களை அறிந்த திரு பாஷ்யத்துக்குச் சட்டத்துடன் அரசியலிலும் ஈடுபாட்டினை ஏற்படுத்தியவர் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார்.



ஒரு முக்கியமான வழக்கில் பிரபல வழக்கறிஞர்திரு முத்துசாமி ஐயர் எதிர்த்தரப்புக்காக வாதம் செய்து கொண்டிருந்தார். Contract Act சம்பந்தப்பட்ட ஓர் அரிய புத்தகத்தின் சில மேற்கோள்களைக் காட்டி அவர் வாதாடிய விதம் ஜூரிகளைக் கிட்டத்தட்ட அவருக்குச் சாதகமான தீர்ப்பை அளிக்கும் அளவுக்கு முடிவெடுக்கச் செய்திருந்தது. இந்நிலையில் திரு பாஷ்யம், நீதிபதியின் அனுமதி பெற்று, திரு முத்துசாமி அய்யரிடமிருந்து அந்த நூலைப் பெற்று, சில பக்கங்களைத் தள்ளி அந்நூலிலிருந்தே வேறு மேற்கோள்களைக் காட்டித் தோற்கவிருந்த தமது கட்சிக்காரர் வழக்கை வெற்றியாக்கியதைச் சட்ட மன்ற வட்டாரங்கள் இன்னும் புகழ்வது திரு பாஷ்யத்தின் சட்ட நிபுணத்துவத்துக்குச் சான்றாகும்.

இந்திய தேசிய காங்கிரஸில் ஒரு முக்கிய அங்கத்தினராக விளங்கி உப்பு சத்தியாக்கிரஹம், ஹோம்ரூல் இயக்கம் மற்றும் பல சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்று வெள்ளையர் அரசின் சீற்றத்துக்கு ஆளானதோடு, தடியடியும், பலமான காயமும், சிறைவாசமும் பெற்றவர் திரு பாஷ்யம்.

காந்தி - இர்வின் ஒப்பந்தம் வெற்றிகரமாகக் கையெழுத்தானதும், மகாத்மா காந்தி, 'உங்களைப் போன்றோரது தியாகங்களால்தான் இத்தகைய பலனை அடைய முடிந்தது' என்று திரு பாஷ்யத்துக்குக் கடிதம் எழுதினார்.

திரு பாஷ்யம் வகித்த பதவிகள் பல வாகும். அவைகளில் குறிப்பிடத் தக்கவை: 1936ம் ஆண்டு மதுராந்தகம் தொகுதியிலிருந்து சென்னை 'லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி'க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஸ்ரீ பிரகாசம் தலைமையில் 1946ம் ஆண்டு அமைக்கப்பட்ட சென்னை மாகாண அரசில் சட்ட மந்திரியாகப் பொறுப்பேற்றது. இத்தருணம் நிர்வாகத்திலிருந்து நீதித் துறையைத் தனியாகப் பிரிக்க ஏற்பாடுகள் செய்ததும், வாடகை ஒழுங்கு சட்டத்திற்கு அடிகோலியதும் திரு பாஷ்யத்தின் சாதனைகள்.

சம்ஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்று திரு பாஷ்யம் பல புத்தகங்கள் எழுதியுள்ளார்.

''இத்தகைய சிறப்புகள் பெற்ற திரு கே. பாஷ்யம் 1954 முதல் 59 வரை 'லா வீக்லி' ஆசிரியராகப் பணியாற்றியது எங்கள் பத்திரிகை பெற்ற பெரும் பேறு... அவர் எழுதிய Negotiable Instruments பற்றிய விளக்க உரைகள் இன்றும் வழக்கறிஞர் இடையே ஒரு வேத நூல் போல் போற்றி, நுணுக்க விளக்கங்கள் பெற உபயோகப்படுத்தப்படுகிறது'' என்று குறிப்பிட்டார், சென்னை லா வீக்லியின் தற்போதைய ஆசிரியரும், பிரபல வழக்கறிஞருமான திரு வி.வி. ஸ்ரீகுமார்.

-நாயகன்

பாரதி நூற்றாண்டு

செப்டம்பர் 11 பாரதி நினைவு நாள்.

செப்டம்பர் 9 'கல்கி' பிறந்த தினம்.

நாடு சுதந்திரம் பெற்ற தருணத்தில் கவிஞரின் தவம் பலித்தது பற்றி அமரர் 'கல்கி' எழுதிய பாடல்:

தவமும் பலித்ததம்மா!





ராகம்: ஷண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

தவமும் பலித்ததம்மா — நமது
தாயின் விலங்குகள் தெறித்து விழுந்தன
(தவமும்)

அனுபல்லவி

புவனம் வியந்திட அமுதத் தமிழினில்
நவநவமாய்க் கவி அருளிய புனிதரின் (தவ)

சரணம்


ராகம்: பூர்விகல்யாணி

வீரசுதந்திரம் வேண்டுமென்றார் — இங்கு
வெற்றி உண்டு நமக்கு கொட்டு கென்றார்
முரசு
மாரதர் வாழ்ந்த நம் பாரத பூமியின்
மன்னர் நாமே என்று சொன்ன பாரதியின்
(தவமும்)

ராகம்: ரேவாணி

நாவலர் பாவலர் வாழ்த்தி மகிழ்ந்தனர்
நானிலம் எங்கும் நம் கீர்த்தி உயர்ந்தது
தேவரும் மூவரும் வானில் வலம் வந்து
செஞ்சொற் கவிஞரை அஞ்சலி செய்தனர்
(தவமும்)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist; Nambi Editor: K. Rajendran



REGISTERED No. M. 4393
Registered as a Newspaper in Sri Lanka



everest/82/PP/416-tm